Registered as a Newspaper
பக்கம் -20 விலை 12/=

# தமிழ்அலை

வாரமலர் TAMILALAI
ஞாயிற்றுக்கிழமை, 09-11-2003 ஓசை -32



## ஜனாதிபதி அதிகாரப்பொறி!

### தடுமாறும் நாடாளுமன்றம்

## சமாதானம் ?

## அடுத்த அதிரடி என்ன?

தமிழ் பேசும் மக்களின் உணர்வலை

F:\computer\Tamilalai 32 FIRST PAGE.cdr

தமிழ் அலை வாரமலர் Tamilalai

பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.
தொ. பே,
தொலைநகல் 065.2226110
E-MAIL. tamilalai32@yahoo.com.
www.tamilalai.net
09.11.2003

## நாட்டின் தலைவி குழம்புகிறாரா?

தற்போது சிங்கள தேசத்தின் அதிகாரப் பலமிக்க தலைவியாக விளங்கும் ஜனாதிபதிக்கு மூளை குழம்பி விட்டதா அல்லது அனைத்து தரப்பினரையும் குழப்பிக் கொண்டிருக்கிறாரா என எண்ணத் தோன்றுகிறது. காரணம் மூன்று அமைச்சர்களின் பதவிகள் ஜனாதிபதியால் பறிக்கப்பட்ட பின்னர் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தினார். கடந்த 2001ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் காலவதியான அவசரகாலச்சட்டம் கடந்த புதன்கிழமை திடீர் என அமுல்படுத்தப்பட்டதால் மக்களிடையே பெரும் பீதி ஏற்பட்டது. வடக்குக் கிழக்கு வாழ் மக்களுக்கு அவசர காலச்சட்டம் ஒரு எமன் என்று தான் கூற வேண்டும். அந்தளவிற்கு கைதுகள், சித்திரவதைகளால் போர்க்காலத்தில் தமிழினம் வதைக்கப்பட்டனர் அழிக்கப்பட்டனர். அவ்வாறான செயற்பாடுகளுக்குக் காரணமான அவசர காலச்சட்டம் மீண்டும் புத்துயிர் ஊட்டி விட ஜனாதிபதி மேற்க்கொண்ட நடவடிக்கைக்குப் பல்வேறு தரப்பிலிலுமிருந்து கண்டனங்கள் எழுந்ததுடன் சட்ட ரீதியாக அவற்றை அமுல்படுத்துவதாயின் அரசாங்க நாடாளுமன்றத்தின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட வேண்டும்.

பெரும்பான்மை பலம் கொண்டிருக்கும் ஐ.தே முன்னணி அரசினால் மேற்படி அவசரகாலச்சட்டவிதி நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படும்போது தூக்கி எறியப்பட்டுவரும் இத்தகைய சூழ்நிலையினை அவதானித்த ஜனாதிபதி வெள்ளிக்கிழமை அவற்றை நீக்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டபோதும் ஜனாதிபதி செயலகம் அவ்வாறானதொரு அவசரகாலச் சட்டத்தை ஜனாதிபதி பிறப்பிக்கவில்லை எனவும் இவை வேண்டுமென்று எழுதப்பட்ட வதந்தி எனவும் தெரிவித்திருந்தார். தற்போது ஜனாதிபதியினால் அமுல்படுத்தப்பட்ட அவசர காலச்சட்டம் நீக்கப்பட்டுவிட்டது என்பது உறுதி.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்கா விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியபோது கட்டுநாயக்கா விமான நிலையம் தொடக்கம் அலரிமாளிகை வரை மக்கள் வழங்கிய ஆதரவு ஜனாதிபதியின் மனதில் ஒரு உறுதியான அரசு இருப்பதைச் சுட்டிக் காட்டியிருக்கலாம்.

அமைச்சு பொறுப்புக்களைப் பறித்ததைத் தொடர்ந்து அரச ஊடகங்கள் ஜனாதிபதியின் கையில் வீழ்ந்ததைத் தொடர்ந்து வெளியான செய்தியே அவசரகாலப் பிரகடனம் என்பதும் சுட்டிக்காட்ட வேண்டியது அவசியம்.

தற்போதைய நிலையில் ஜனாதிபதி குழப்பமடைகிறார் போல் எண்ணத் தோன்றுகின்றது.

# ஜனாதிபதியின் அதிகாரப் பொறிக்குள் தடுமாறும் நாடாளுமன்றம்

தமிழீழ விடுதலைப் புலிகள் ஐக்கிய இலங்கைக்குள் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்குரிய முன்னோடி இடைக்கால நிர்வாக இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான வரைபை சிறிலங்கா அரசாங்கத்திடம் கையளித்த 72மணி நேரத்தில் அரசியலமைப்பு ரீதியான நெருக்கடிகளை ஜனாதிபதி தோற்றுவித்திருக்கிறார்.

முக்கிய அமைச்சுக்களான பாதுகாப்பு அமைச்சு, உள்துறை அமைச்சு மக்கள் தொடர்பாடல் அமைச்சு என்பவற்றை பிரதமர் ரணில் விக்கிரம சிங்க அமெரிக்க விஜயத்தை மேற்கொண்டிருந்த நிலையில் தன் வசம் பொறுப்பேற்ற ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க மூன்று அமைச்சர்களையும் பதவி விலக்கியுள்ளார்.

தனது அதிரடி நடவடிக்கைக்குக் காரணமாக நாட்டில் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்திருக்கிறது. பொதுப் பாதுகாப்பை நிலை நிறுத்தும் வகையில் அரசியல் அமைப்பின் கீழான அதிகாரங்களைப் பிரயோகித்ததாக தெரிவித்த ஜனாதிபதி போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர்ந்தும் அமுலில் இருக்கும், இனப்பிரச்சினை தீர்வுக்காக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடாத்தத் தயாரென்றும் அறிவித்திருக்கிறார்.

கொழும்பு அரசியலில் ஏற்பட்டுள்ள அரசியலமைப்பு ரீதியான நடவடிக்கைகள் இரண்டு நோக்கங்களைக் கொண்டுள்ளதாகக் கருதப்படுகிறது. இரு பிரதான கட்சிகளுக்கிடையிலான அதிகாரப் போட்டி மூலம் பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சியைக் கைப்பற்றுவது அல்லது ஐ.தே.மு.அரசாங்கத்திற்குத் தலையிடியைக் கொடுப்பது மற்றது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க முடியாதவாறு அரசாங்கத்திற்கு நெருக்கடி கொடுப்பதாகும்.

ஆனால் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கு வழமை போல எந்த விதமான நிபந்தனையையோ பேரம் பேசலையோ மேற்கொள்ளாது தமிழ் தேசிய கூட்டமைப்பு தனது ஆதரவை தெரிவித்ததையடுத்து இச் சந்தர்ப்பத்தில் ஏதாவது பேரம் பேசலாமெனக் காத்திருந்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் ஆதரவாக ஒப்பமிட்டிருக்கிறது. இப்போது ஐக்கிய தேசிய முன்னணி அரசின் அறுதிப் பெரும் பாண்மை நிருபிக்கப்பட்டிருப்பதால் ஆட்சி கவிழ்ப்பு ஏற்படக்கூடிய வாய்ப்புகள் அருகி வருகின்றன.

தற்போதைய பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசிய முன்னணி ஐ.தே.க.சிறிலங்கா



முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி இ.தொ.க. உள்ளிட்ட கட்சிகளின் ஐ.தே.க. சின்னத்தில் போட்டி இட்ட 109 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற 5 உறுப்பினர்களின் ஆதரவுடன் அறுதிப் பெரும் பான்மையைக் கொண்டுள்ளது. எதிர்க்கட்சி வரிசையில் இருந்து தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆதரவு வழங்கி வருவதால் 129 உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு ஆதரவாக உள்ளனர்.

எதிரணியைப் பொறுத்தவரை பொதுஜன ஐக்கிய முன்னணி 77 உறுப்பினர்களையே கொண்டிருக்கிறது. ஜே.வி.பி. யின்16 உறுப்பினர்கள், ஈபிடிபியின் இரண்டு உறுப்பினர்களையும் வசீகரிக்கக் கூடிய ஏது நிலை உள்ளது. தேசியப் பட்டியல் உறுப்பினர் வி. புத்திரசிகாமணி எதிரணியில் தமிழ் தேசிய கூட்டமைப்பு வரிசையில் அமர்ந்துள்ள நிலையில் அரசாங்கம் 130 உறுப்பினர்களையும் பொது ஜன ஐக்கிய முன்னணி தலைமையிலான எதிரணி 94 உறுப்பினர்களையும் தற்போது கொண்டுள்ளன. ஒரே ஒரு புளோட் உறுப்பினர் எந்தப் பக்கம் சாய்வார் என்பது தெளிவாக இல்லாவிட்டாலும் அவரால் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாது.

பொது ஜன ஐக்கிய முன்னணி



இந்த அரசாங்கத்தை விழ்த்த வேண்டுமாயின் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஆதரவு நிச்சயம் தேவை. அதனை விட நூறுக்குக் குறையாத ஆளுங் கட்சி உறுப்பினர்களைத் தன் வசம் ஈர்க்க வேண்டிய நிலமை உள்ளது.

இதனாலேயே இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு பேச்சு வார்த்தையில் முஸ்லிம் பிரதி நிதிகள் தனித்தரப்பாகப் பங்குபற்ற வேண்டுமென்ற சிறலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கையை பொது ஜன ஐக்கிய முன்னணி துருப்புச் சீட்டாகப் பயன்படுத்த முனைந்து வருகிறது.

எனினும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அரசாங்கத்திற்கு விசுவாசம் தெரிவித்து கையெழுத்திட்டிருப்பதால் உடனடி ஆட்சி கவிழ்ப்புக்கு சாத்தியமில்லை. எதிரணியிலிருந்து இன்றைய கீழ் நிலையில் ஆளும் கட்சிக்குப் பாய்ச்சல் ஏற்படக் கூடிய நிலைமை இல்லையென்பதாலேயே நாடு நெருக்கடியில் உள்ள நிலையிலும் பிரதமர் திட்டமிட்டவாறு அமெரிக்க விஜயத்தை மேற்கொண்டது புலப்படுத்துகிறது.

இதை விட பொதுஜன ஐக்கிய முன்னணி எதிர் நோக்கி வரும் உள் முரண்பாடு ,அடுத்த கட்ட தலைமைத்துவப் போட்டி என்பன காரணமாக பிரகாசமற்ற எதிர்காலத்தைக் கொண்டிருக்கும் நிலையில் பாய்ச்சல்களுக்கு வாய்ப்பு மிக மிக குறைவு.

எனவே ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க அரசியலமைப்பை அஸ்திரமாகப் பயன்படுத்தி ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு நெருக்கடிகளைக் கொடுக்கக்கூடிய சாத்தியக் கூறுகளே தென்படுகின்றன. தற்போதைய் அரசியலமைப்பின் படி நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதிக்கும், சட்டமார்க்கத் தத்துவம் பாராளுமன்றத்திற்கும் உள்ளன. ஜனாதிபதி பொதுஜன ஐக்கிய முன்னணி தலைவியாகவும்பாராளுமன்ற பெரும்பான்மை ஐக்கிய தேசிய முன்னணியிடமும் இருப்பதே நெருக்கடிகளின் அடிப்படையாகும்.

அரசியலமைப்பின் உறுப்புறை 43ன் படி ஜனாதிபதியே அமைச்சரவையின் தலைவராக இருப்பார் உறுப்புறை 46ன் பிரகாரம் விரும்பினால் முதலமைச்சருடன் கலந்தாலோசித்து அமைச்சுக்கள் அமைச்சுக்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்து அமைச்சர்களைநியமிக்க முடியும். எந்தப் பணியையும் ஜனாதிபதி தமக்கென்று எவ்விடத்தையும் ஒதுக்கலாம். எந் நேரத்திலும் நமது பொறுப்பிலிருக்க வேண்டிய அமைச்சுக்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கலாம்.

அத்தோடு உறுப்புரை 70ன் படி ஜனாதிபதி காலத்துக்குக் காலம்பிரகடனத்தின் மூலம் பாராளுமன்றத்தினைக் கூடுமாறு அழைக்கலாம். அல்லது நிறுத்தலாம். அத்துடன் கலைக்கலாம். பாராளுமன்றத்தின் அமர்வை நிறுத்தி திகதி குறித்து ஒத்திவைக்கலாம்.

இன்றைய அரசியலமைப்பின் உறுப்புரை 155ன் பிரகாரம் ஜனாதிபதியின் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனம் செய்யலாம். பிரகடனத் தேதியிலிருந்து பத்தாம் நாளன்று பாராளுமன்றத்தைக் கூடி அறிவித்து அங்கீகாரம் பெறப்படல் வேண்டும் ஒத்துழைப்பினால் அமர்வு நிறுத்தப்பட்டிருந்தாலும் அழைக்கப்பட வேண்டும். அரசியலமைப்பின் உறுப் புரை 30 ஜனாதிபதி அரசின் தலைவரும், ஆட்சித் துறையின் அரசாங்கத்தின் தலை வரும் ஆயுதம் தாங்கிய முப்படைகளின் தலைவரு மாவார்

**ஜி.நடேசன்**

எனக் குறிப்பிடுகிறது.

எனவே தற்போதைய அரசியலமைப்பு ஜனாதிபதிக்குப் பரந்த விரிந்த அதிகாரங்களைக் கொண்டிருப்பதால் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் உடனடியாக அரசியலமைப்பு ரீதியான நெருக்கடிகளுக்கு உள்ளாக வேண்டிய நிலை உருவாகியுள்ளது.ஜனாதிபதி நீண்ட காலமாகப் பதுங்கியிருந்து வியூகங்களை அமைத்த பின்னர் தருணம் பார்த்துக் களத்தில் இறங்கியுள்ளனர்.

இந்த நிலையில் உயர் நீதிமன்றம் முப்படைகளின் தலைவன் என்ற வகையில் பாதுகாப்புத் தொடர்பான அதிகாரம் ஜனாதிபதிக்கே உண்டு. பாதுகாப்பு அமைச்சர் ஒழுங்கு விதிகளை ஆக்க முடியாது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பது ஜனாதிபதியை மேலும் வலுவூட்டியுள்ளது.

மூன்று அமைச்சுக்களின் பொறுப்பை ஏற்று ஜனாதிபதி புதன் நள்ளிரவு முதல் அவசர காலசட்டத்தையும் பிரகடனப்படுத்தியிருக்கிறார். எதிர்வரும் வியாழன் அல்லது வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தைக் கூட்டி இங்கு அங்கீகாரம் பெற வேண்டிய நிலை உள்ளது.

நிறைவேற்று அதிகாரத்திற்கும் பாராளுமன்றத்திற்கிடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடு காரணமாக ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் திட்டமிட்டபடி வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அத்தோடு பங்குச் சந்தையும் வீழ்ச்சி கண்டுள்ளது.அவசர காலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டதையடுத்து சமாதான சூழலும் தலை கீழாக மாற்றக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை காண்பதற்குப் பேரினவாதிகளின் சவால்களை நெருக்கடிகளைச் சமாளிக்க முடியாது திணறிய ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஜனாதிபதியின் அரசியலமைப்பு அஸ்திரங்களிலிருந்து உயிர் பிழைக்க வேண்டியுள்ளது.

(தொடர்ச்சி 19ம் பக்கம்)

# வரலாறு வழங்கி நிற்கும் வரையும், வழித்தடங்க(ல்க)ளும்

"தமிழ் மக்கள், தமது சொந்த மண்ணில், வரலாற்று ரீதியாக வாழ்ந்து வந்த பாரம்பரிய மண்ணில், அந்நிய சக்திகளின் ஆதிக்கம், தலையீடு இன்றி, சுதந்திரமாக கௌரவமாக வாழ விரும்புகின்றார்கள். தமது மொழியை வளர்த்து, தமது பண்பாட்டைப் பேணி, தமது பொருளாதாரத்தை மேம்படுத்தி, தமது இன அடையாளத்தைப் பாதுகாத்து வாழ விரும்புகின்றார்கள். தமது தாயக மண்ணில், தம்மைத்தாமே ஆளும் சுயாட்சி உரிமையோடு வாழ விரும்புகின்றார்கள். இதுவே எமது மக்களின் அரசியல் அபிலாசை. உள்ளக சுயநிர்ணயத்தின் அர்த்த பரிமாணம் இதில் தான் அடங்கியிருக்கிறது."

கார்த்திகை இருபத்தேழு நன்னாளொன்றில் நமது தேசியத்தலைவர் அவர்கள் உரைத்த உறுதிப்பாட்டு வரிகளே இவை. கார்த்திகைத் திங்களில் மீளவும் இவ்வரிகள் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன.



நவம்பர் முதல் நாள் சர்வதேச அரங்கெங்கும் இவ்வரிகளின் வெளிப்பாடு மாபெரும் ஆவணமாயிற்று. "இரண்டு பக்கங்களிலே வரைபாலோசனை அனுப்பியவர்களுக்கு ஈழத்தமிழர்களின் இரண்டாயிரம் ஆண்டுகால வரலாற்றைப் புரட்டிப் போட்டுக் காட்டுவோம்" என்று விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் அவர்கள் "உலைக்கள" வெளியீட்டில் உரைத்தது உண்மையாயிற்று. அப்படியிருக்கும், இப்படியிருக்கும் என்று பல்வேறுபட்ட தரப்பினரதும்ஊகங்கள் / ஆரூடங்கள் யாவற்றுக்கும் அருவம் உருவம் ஆகியது.

"வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான மாகாண நிர்வாகக் கட்டமைப்பு" (PROVINCIAL ADMINISTRATIVE STRUCTURE FOR NORTHERN AND EASTERN PROVINCES) என்ற பெயரிலே சிங்கள தேசம் முன்வைத்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கான யோசனைகளுக்கான தமிழர் தேசத்தில் பதில் "இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை" (INTERIM SELF-GOVERNING AUTHORITY) என்ற மகுடமிட்டு வழங்கப்பட்டமை அரசியல் அரங்கில் அதிர்வலைகளை அதிகரித்தேயுள்ளது.

"இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளை நடைமுறைப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் சுமுகமாக முன்னெடுக்கப்படுவதை உறுதி செய்வது இலங்கை அரசினதும் சர்வதேச சமூகத்தினதும் பொறுப்பு" என்று வரைபை வெளியிட்டு, ஊடகவியலாளர் சந்திப்பை நிகழ்த்திய தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் அவர்கள் கூறியிருப்பது, அர்த்தமுடைய அமைதித் தீர்வுக்கான நியாயத்து வெளிப்பாடாகவே புலப்படுகின்றது.

இருபதாண்டுகளுக்கு மேலாக வாழிடவுரிமை / வாழ்வுரிமை கேட்டு "தக்கன பிழைக்கும்" என்ற கூர்ப்புக் கோட்பாட்டினடிப்படையில், தர்மத்தின் பாற்பட்டு நடத்திய ஆயுதப் போராட்டத்திற்கு ஓய்வு

**துரை மேகநாதன்**

கொடுத்து, நோர்வே அனுசரணையுடன் சர்வதேச கரிசனையுடன் மேற் கொண்ட சமாதான முன்னெடுப்பின் தேக்க நிலையை அகற்றி அமைதித் தீர்வை எட்டும் ஆரம்பக்கட்டமாகவே இடைக்கால வரைபு முன்வைக்கப்பட்டுள்ளது. போரியல் மற்றும் அரசியல் அரங்குகளிலே வலுச்சமநிலையில் உயர்ந்து நிற்கும் ஈழத்தமிழரின் ஏகபிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளின் துறைசார் பொறுப்பாளர்கள், மூத்த தளபதிகள் என சிறப்புத் தகைமையாளர்கள் சிந்தித்து, சர்வதேச சட்ட வல்லுணர்வுகளுடன் கலந்துரையாடித் தயாரித்த சட்ட ஆவணமே இது. வரைபு முழுமையாக வெளியாகியுள்ள தற்போதைய நிலையில், சர்வதேச நியமனங்களுடையதாகவே நடுநிலை நோக்கர்களால் நோக்கப்படுகின்றது. வரைபு தொடர்பாகவும் இன்றைய நிலவரங்கள் தொடர்பாகவும் தமிழ் ஊடகத்துறையினருடன் இணைந்து தமிழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்கள் பாடசாலை சமூகங்களை, மக்களை அறிவூட்ட முற்பட வேண்டும். சர்வதேச சமூகம் மறுதலிக்க முடியாத "இராசதந்திர செம்மை"யைத் தமிழர் தேசம் முன் வைத்துள்ள மாற்று யோசனைகளை கொண்டிருப்பது கண்கூடு.

"இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை" தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியானதும் ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்றதும், அமெரிக்கா மற்றும் ஜப்பான் முதலான சர்வதேச வல்லாண்மை நாடுகள் கவனம் செலுத்துவதாகக் குறிப்பிட்டமையும் இதற்குச் சான்றாகின்றன.

அண்மையில் தமிழ் மக்கள் தன்னார்வகப் பரந்தளவில் மேற்கொண்ட "பொங்குதமிழ்" எழுச்சிகளில், "அதிகாரம் பொருந்தி இடைக்கால நிர்வாக சபைக்கு குறைவாக ஒன்றையும் விடுதலைப்புலிகள் முன்வைக்கக் கூடாது/ ஏற்கக் கூடாது" என்று ஏகோபித்து ஓரணிப்பட்டு ஓங்கிஒலித்திருந்தமை நினைவூட்டத்தக்கது.

"இன நெருக்கடிக்கான இறுதித் தீர்வை எட்டும் முயற்சியில் இது ஒரு முக்கியமான திருப்புமுனை; வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு" என்றும் தமிழ் கட்சிகளின் தலைவர்களும், கல்விமான்களும் வெகுவாக வரவேற்றுள்ளதை நடுநிலை ஊடகங்கள் வெளிக்காட்டுகின்றன. நீண்ட நெடிய போரால் நலிவுற்ற தமிழ் மக்கள் தம்மை ஆசுவாசப்படுத்திக் கொள்ள இது உதவும் என நம்புகின்றனர். போர் ஓய்வுக் காலத்தில் வடக்கு- கிழக்கில் இயல்பு வாழ்க்கையை உண்டு பண்ணுவதில் விடுதலைப் புலிகள் மிக்க கரிசனையுடன் செயற்படுவதைத் தமிழ் மக்கள் வரவேற்கின்றனர். நடந்து வந்த பாதை தன்னைத் திரும்பிப் பார்த்த வாறு எதிர் காலத்தைத் தரிசிக்க முற்படுகின்றனர்.

சிங்கள தேசத்தின் நிலைமையோ பழைய பல்லவிதான்; கீறல் விழுந்த இசைத்தட்டாகத் "தடுமாறி" தெளிவின்றி ஒலிக்கின்றது. ரணில் அரசாங்க மூத்த அமைச்சர்களோ தமது வரைபினின்றும் விடுதலைப்புலிகளது யோசனைகள் பல அடிப்படை அம்சங்களில் வேறுபட்டுத் தென்படினும், வரைபில் பேசித் தீர்க்கலாம் எனத் தெரிவிக்கின்றனர். நேரத்துக்கு நேரம் நிறம்மாறும் சந்திரிக்கா, ஜே.வி.பி. எதிர்



கட்சிகளும், இதர சிங்கள இனவாத ஒட்டுக்குழுக்களும் "காட்டுக்கத்தல்" போடுகின்றன. புலிகள் ஈழ இராட்சியத்திற்கான முன்வரைபை வைத்துள்ளார்கள் என்று "மாரடித்து" ஒப்பாரி வைக்கின்றார்கள் வடித்துக் கட்டிய பேரினவாதிகள்.

"வித்தியாசமான குரல்கள் வித்தியாசமான பார்வையாளர்களைத் திருப்திப்படுத்த" என்ற சொற்றொடர் இலங்கைத்தீவின் அரசியலில் சற்று வெளிச்சம் போட்டுக் காட்டத்தக்கது. "அப்பம் பங்கிட" கண்டவன் கிண்டவனெல்லாம் "சனநாயக" முகமூடி போட்டு "அம்மண ஆட்டம்" போடுகின்ற அவலத்தை இந்நாளில் கூடுதலாகக் கண்டு வேதனைப்பட நேரிடுகின்றது. ஆங்கிலக் கதையாக "கோழி பாண் போட்ட கதை" இத்தீவின் அரசியல் அரங்கிலும் அர்த்தம் பெறுகின்றது. "எவ்வித இடைச் செயற்பாடுகளுக்கும்/ உதவிகளுக்கும் வராதவர்கள் நிலம் உழுது, பயிர் விதைத்து, பராமரித்து, அறுவடைசெய்து, மாஅரைத்து, பாண்போட்ட போதெல்லாம் கோழிக்கு உதவ வராதவர்களும் மாறாக உபத்திரம் செய்தவர்களும் பாண் போட்ட பின் பாண் தங்களுக்கும் உரியது என்று கோழியிடம் சனநாயக உரிமை "கதைத்த உயிரிகள்" என்ற நிலையில் சில சக்திகளை நோக்குமிடத்து கவலையை உண்டு பண்ணுகிறது.

"இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை" (ISGA) கோரிக்கை விடுவிக்கப்பட்டு மூன்று நாட்களிலேயே சிங்களத்தின் நிறைவேற்றதிகார அதிபரான சந்திரிக்கா அம்மையார் "மின்னாமல் முழங்காமல்" காரியமாற்றியுள்ளார். மும்மணிகளின் ஆசி வேண்டும். அம்மணி முத்துறைகளின் அமைச்சுக்களை "அதிகார வன்கவர்வு" செய்து "சமாதான முன்னெடுப்புக்குச் "சங்கு" ஊதியுள்ளார். அச் சங்கு எவ்வகையானது என்பதை இனிவரும் நாட்கள் எடுத்தியம்பும் எனலாம். விடுதலைப் புலிகளைப் "பயமுறுத்த" என சர்வதேச சூறாவளிப்பயணஞ் செய்து ரணில் "சர்வதேச காப்பு வலை"யைப் போட, சந்திரிக்காவோ ரணிலுக்கு "பாசக்கயிறே" போட்டுள்ளார் என்றே அவதானிகள் காண்கின்றனர். கடந்த புதன் வெளியான உயர் நீதிமன்றத் தீர்ப்பு ஜனாதிபதியினது குறித்த அமைச்சு கையகப்படுத்தல்களை நியாயப்படுத்தியிருப்பதும் நிதானமாக நோக்கப்பட வேண்டியதே. அம்மையார் அவசர காலநிலமை பிரகடனத்தை மீள அரங்கேற்றியுள்ளமை சமாதான முன்னெடுப்பில் சிங்கள தேசம் தொடங்கிய இடத்திற்குத் திரும்பியிருப்பதையும், சிங்கள தேசத்தின் பிளவுபடலையும் சுட்டி நிற்கின்றது.


படைத்துறை, உள்த்துறை, ஊடகத் துறை என்ற முக்கிய பொறுப்புக்களை நிறைவேற்றதிகாரத்தால் கையகப்படுத்திய நோக்கம் நிறைவேறுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். கடந்த செவ்வாய் இரவு இலண்டன் "தமிழோசை" நேர்காணலில் தமிழ் பேசும் அமைச்சரொருவர் தான் அரசாங்க அமைச்சர் என்பதை மறந்து கதைத்ததைப் போலவே பலருக்கும் தென்பட்டது; உண்ட வீட்டுக்கு இரண்டகம்செய்வது இது அவருக்கு முதல் தடவை அல்லவே என்று மழுப்பல் நேர்காணலைக் கேட்டவர்கள் தம்மைத் தேற்றியிருப்பார்கள்.

சந்திரிக்கா அம்மையாரின் நீதியற்ற நிறைவேற்றதிகாரப்பிரயோகம் தற்போதைய சமாதான முன்னெடுப்புக்குக் குந்தகமாக அமைந்து விடும் என்று பல்வேறு தரப்பினரும் சற்றுக் குழப்பமடைந்து காணப்பட, சிவப்புச் சட்டை போர்த்திய இனவாதிகளான ஜே.வி.பி.யினர் சிறிலங்கா அதிபரது முடிவை வரவேற்றுள்ளனர். ஊடகத்துறையைக் கையகப் படுத்திய சந்திரிக்கா அம்மையார் செவ்வாய் இரவு சிங்கள, ஆங்கில மொழிகளில் சிறு உரையை ஆற்றி தனது செயலுக்கு "நியாயம்" கற்பித்திருந்தார். மறுநாள் ஊடகவியலாளர்களைச் சந்தித்த கதிர்காமர் உள்ளிட்ட அவரது பரிவாரத்தினர் நீண்ட விளக்கங்கள் வழங்கத் தவறியிருக்கவில்லை. அரச ஊடகங்கள் சந்திரிக்கா அணியினருக்கு முக்கியத்துவம் வழங்கி, ரணில் அரசாங்கச் செய்திகளை இருட்டிப்பும் செய்வதைக் காண முடிகின்றது. இது ஆட்சி மாற்றத்திற்கான முன்னறிவிப்பா என்று எண்ணத்தான் தோன்றுகின்றது.

"தற்போதைய போர் நிறுத்தம் தொடரும். சமாதானமுன்னெடுப்புக்கள் குழப்பப்படாது எல்.ரீ.ரீ.ஈயினது தன்னாட்சி அதிகாரசபை நாட்டின் இறையாண்மை, ஜனாதிபதி அதிகாரம், நீதிமன்றம் என்பவற்றைப் பற்றிக் குறிப்பிடாது ஏற்க முடியாததாகப் பாரியளவில் வேறுபட்டு நிற்கிறது...." என்று சாரப்பட்ட தனது பழைய "கோபாயல்ஸ்" பாத்திரத்தை ஆற்றத் தொடங்கியுள்ளார் கதிர்காமர் அவர்கள். (சந்திரிக்கா அம்மையாரின் பதவி கைப்பற்றல்கள் சர்வதேச சமூகத்தில் அவருக்கென்றிருந்த களங்கத்தைப் பெரிதாக்கும்.)

அதே நாளில் வெளிநாட்டமைச்சில் சர்வதேச இராசதந்திரிகளைச் சந்தித்த ரணிலின் அமைச்சரவைச் சகாக்களோ ஜனாதிபதியின் ஜனநாயக விரோதச் செயற்பாட்டைக் கண்டித்ததுடன்., பாராளுமன்றத்தில் தமக்குப் பெரும்பாண்மை இருப்பதை உறுதிப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களின் கையெழுத்துச் சேகரிப்பதை வெளிப்படுத்தியும் உள்ளனர். சமாதான முன்னெடுப்புக்களின் நலன் கருதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ரணில் அரசாங்கத்தை ஆதரித்தும் உள்ளனர். அரசியல் அவதானிகள் ஆட்சி மாற்றத்திற்கான ஏதுக்கள் பற்றியும் எதிர்வு கூறுவதைக் கேட்க முடிகின்றது.

தமிழர் தரப்பு தற்போதும் வலுவாகவே இருக்கிறது. சிங்களத்தின் அரசியல் அரசாங்க ஆட்களையிட்டு "பொறுமை" காக்கவே செய்கின்றது. சர்வதேச சமூகம் சிங்கள ஆட்சியதிகாரங்கள் மீது தனது அழுத்தங்களை அதிகரித்து நீதியான சமாதானப் பேச்சுக்களை உறுதிப்படுத்தி விரைவுபடுத்த வேண்டுமென தமிழ் மக்களும் இரத சமாதான ஆர்வலர்களும் வேண்டுகின்றனர். தமிழ் மக்கள் தம்மிடையே அரசியல் விழிப்புணர்வை அகல ஆழப்படுத்தித் தெளிவாகச் செயலாற்ற




வேண்டிய காலகட்டம் இது. எமக்கு வரலாறு வழங்கிநிற்கும் வரைபையும் வழித்தடங்களையும், வழித்தடங்கல்களையும் தெளிவுற இனங்கண்டு தேசப்பணியாற்ற வேண்டிய தருணம் இது என்பதை உரத்து உணருங்கள். இவ் வேளையிலும் "நல்லன நடக்கும்" என்றே நம்புகின்றோம். தர்மத்தினதும் சர்வதேச நீதி நியமங்களினதும் படி நியாயமான போராட்டத்தை முன்னெடுக்கின்ற எமக்கு நீதி நிறைவாக வழங்கத் தடையாக நிற்பவர்களுக்கு,

" சிதைகளை அடுக்குங்கள்
புதைகுழிகள் வெட்டுங்கள்
எங்களுக்காக அல்ல
இனி உங்களுக்காக
யாரெவர் எம் நிம்மதிகளில்
உரிமை வாழ்வில்
நெருப்புமிழ்கிறார்களோ
அவர்கள் எல்லோரும்
புதைகுழிகள் வெட்டுங்கள்
சிதைகளை அடுக்குங்கள்
எங்களுக்காக அல்ல
இனி உங்களுக்காக." என்று கவிபாடும் "அம்புலி"யுடன் சேர்ந்து நாமும் உரிமையுடன் உரத்து உரைக்கின்றோம்.

## போடியார் பொறிவெடி

*சந்திரிக்காவின் அதிரடி நடவடிக் கையால் சமாதானப் பேச்சு வார்த்தை பாதிக்கும்.*

*-செய்தி-*




அங்கோடயில இருக்கிறவ ஆட்சியில இருந்தா சமாதானம் எப்படி வரும்?...

**யுத்த சூழ்நிலையில் மிகவும் பாதிக்கப் பட்டிருந்த வடக்கு கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மட்டும் புறக்கணிக்கப்பட்டு இவ்அனுமதியில் வெட்டுப் புள்ளிகளும் கூட்டப்பட்டன.**

# பல்கலைக் கழக அனுமதியில் மட்டக்களப்பு மாவட்டம் கவலைக்குரியது

இன்றைய நிலையில் மட்டக்களப்பு மாவட்டமானது கல்விக்காகப் போராட வேண்டிய தேவைக்கு வந்து விட்டது. ஏனெனில் மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்வி சம்பந்தமான நடவடிக்கையினைப் பார்க்கையில் பல இன்னோரன்ன பிரச்சினைகளினை தன்னகத்தே கொண்டு இறைவனால் சபிக்கப்பட்ட நிலைக்கு பிராயச்சித்தம் தேடுவதினைப் போன்று ஆகிவிட்டது. இம் மாவட்டத்தில் பல்கலைக் கழக அனுமதியை எடுத்துக் கொண்டாலோ சரி அல்லது கல்விக் கல்லூரி அனுமதியினை எடுத்துக் கொண்டாலோ சரி, கல்வியில் அபிவிருத்தி அடைந்த மாவட்டம் எனும் அந்தஸ்த்து கொடுத்து இம் மாவட்டத்தினைக் கல்வி ரீதியாக மட்டம் தட்டும் நிகழ்வானது தொடர்ந்த வண்ணமே உள்ளது. இங்கு கீழ் குறிப்பிடப்படும் தரவுகளினைப் பார்ப்போமானால் மட்டக்களப்பின் பரிதாபம் விளங்கிக் கொள்ளக் கூடியதாய் இருக்கும்.

இலங்கையின் பல்கலைக் கழக அனுமதியின் வரலாற்றினை ஆராயும் போது கூட 1965ம் ஆண்டில் இருந்து இன்றைய 2003ம் ஆண்டு வரையிலும் இம் மட்டக்களப்பு மாவட்டமானது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின்



அனுமதி விதிகளிற்கு அமையவும் புறக்கணிக்கபட்டுக் கொண்டு வருவதினைத் தெட்டத் தெளிவாகப் புலப்படுத்தி நிற்கிறது.மட்டக்களப்பு மாவட்டமானது கல்வியில் பின்தங்கிய கஷ்ரப் பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் கூட இம் மாவட்டமும் ஒரு பின் தங்கிய மாவட்டமாகச் சேர்க்க வேண்டிய அவசியமும் உள்ளது. இதனை சில தரவுகளின் ஊடு கண்டு கொள்ளலாம்.

இலங்கையின் பல்கலைக்கழக அனுமதிக்காக பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த உயர் தர பரீட்சையானது முதன்முதலில் 1965ம் ஆண்டே ஆரம்பமானது. இதன் போது பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகும் மாணவர்களுடைய தெரிவானது



முழுமையாக திறமை அடிப்படையிலே பேணப்பட்டு வந்தது. தொடர்ந்து 1970ம் ஆண்டு இம் முறை மாற்றம் கொண்டு வரப்பட்டு 1970 - 1973ம் ஆண்டு வரை திறமை அடிப்படையில் பெறப்பட்ட பல்கலைக்கழக அனுமதியானது 1974ம் ஆண்டு மாவட்ட அடிப்படையில் மாவட்ட சனத்தொகை விகிதாசார முறைக்கேற்ப மாவட்டத்தில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் நிரற்படுத்தப்பட்ட மாவட்டத் திறமை முறை பின்பற்றப்பட்டது. இம் மாவட்டத்திறமை முறையானது 1974 - 1975ம் ஆண்டு வரை நடைமுறையில் இருந்தது. அதன் பின் 1976ம் ஆண்டு திறமை அடிப்படை, மாவட்ட அடிப்படை ஆகிய இரண்டிலும் அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவானது மாவட்டங்கள் தோறும் இடம் பெற்றன. இவ் வேளையில் 70% திறமையின் அடிப்படையும் 30% மாவட்ட அடிப்படையும் கொண்டாதாக இம்முறை அமையப்பெற்றது. இதன் பின் வந்த காலங்களில் 30% கோட்டா முறையிலும் 50% கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களிற்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் 10 மாவட்டங்கள் பின் தங்கிய மாவட்டமாகக் கணிப்பிடப்பட்டன. இதில் அம்பாறை, அநுராத புரம், பதுளை, அம்பாந்தோட்டை, மன்னார்,மொனறாகலை, நுவரெலியா, பொலநறுவை, திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்கள் அக்காலப் பகுதியில் கல்வியில் பின்தங்கிய மாவட்டமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது. அதில் மட்டக்களப்பு மாவட்டம் அப்போதும் இடம்பெற வில்லை.

இதன் பின் ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியின் போது 1977ம் ஆண்டு மட்டக்களப்பு, புத்தளம், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் கல்வியில் வசதியற்ற பின்தங்கிய மாவட்டமாக 1983ம் ஆண்டு வரை இருந்தது. இதனைத் தொடர்ந்து 1984ம் ஆண்டுமீண்டும் பல்கலைக்கழக அனுமதியில் ஏற்பட்ட மாற்றத்தினால் கல்வியில் வசதி குறைந்த பாடசாலைகளையுடைய மாவட்டங்கள் 13ல் இருந்தது 5 ஆகக் குறைக்கப்பட்டன. இதில் அம்பாறை, பதுளை, அம்பாந்தோட்டை, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் அடங்கின.

இதனைத் தொடர்ந்து 1985/1986ம் கல்வியாண்டுகளின் போது பல்கலைக்கழக அனுமதி முறையில் மாவட்ட கோட்டா முறை 65% ஆகவும், வசதி குறைந்த பிரதேச அனுமதி 5% மாகவும், திறமைக் கோட்டா முறை 30% ஆகவும் காணப்பட்டது. இதன் பின் 1990 - 1991ம் ஆண்டுகளில் பல்கலைக்கழக அனுமதிக் கொள்கைகள் முன்வைக் கப்பட்டன. இதில் திறமை அடிப்படையில் 40%மும், மாவட்ட அடிப்படையில் 55%மும், பின் தங்கிய மாவட்ட அடிப்படையில் 5% மமாக இப் பல்கலைக்கழக அனுமதி மாற்றம் பெற்றது. இதில்அநுராதபுரம், கிளிநொச்சி, மொனராகலை, நுவரேலியா, பொலநறுவை, திருகோணமலை, வவுனியா ஆகிய 12 மாவட்டங்கள் கல்வியில் பின்தங்கிய மாவட்டமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. தொடர்ந்து 1994/1995ம் ஆண்டு யாழ்ப்பாணமும் வசதிகள் குறைந்த மாவட்டப் பட்டியலில் இடம் பிடித்துக் கொண்டது. இதே வேளை யுத்த சூழ்நிலையில் மிகவும் பாதிக்கப்பட்டிருந்த வடக்கு, கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மட்டும் புறக்கணிக்கப்பட்டு இவ் அனுமதியில் வெட்டுப் புள்ளிகளும் கூட்டப்பட்டன.

இதனைத்தொடர்ந்து 1993/1994ம் ஆண்டுகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவ தொகைக்குக் குறையாதவாறு தெரிவுகள் இடம் பெறும் என்பது பல்கலைக்கழக மாணவ அனுமதிக்கான கை நூலில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்கமைய 1993/1994ம் ஆண்டில் அகில இலங்கை ரீதியாக நோக்குகையில் 55126 பேர் பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைத் தகைமையைப் பெற்றுக் கொண்டதாக அறிக்கை கூறுகின்றது. இதில் பல்கலைக்கழகத்திற்கு 8851 மாணவர்கள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இது பல்கலைக்கழகத்திற்கான அனுமதித் தகைமையை பெற்றவர்களில் 16.1% ஆகும். அதே ஆண்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அனுமதி பெற்றவர்களின் தொகை 167 பேராகும். அதே வேளை 1994/1995ம் கல்வியாண்டுகளில் 168 பேரே பல்கலைக்கழக அனுமதி பெற்றனர். இதன் பின் 1998/1999ம் கல்வி ஆண்டுகளில் 308 பேர் பல்கலைக்கழக அனுமதியினைப் பெற்றிருந்தனர். இங்கு இடம் பெற்ற அனுமதிகளில் இத் தொகையே கூடுதலான தொகையாகவுள்ளது. இதனைத் தொடர்ந்து 1999/2000, 2000/2001, 2001/2002 கல்வியாண்டுகளில் z(சற்) புள்ளி முறை தீர்மானிக்கப்பட்டமையினால் மீண்டும் பல்கலைக் கழக அனுமதியில் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே ஏற்பட்டது.

அதாவது 1999/2000 கல்வி ஆண்டுகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர் தொகை 286. ஆனால் சற் புள்ளி கொண்டு வரப்பட்ட2000/2001ல் மட்டக்களப்பு மாவட்ட பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர்கள் தெரிவில் வீழ்ச்சி ஏற்பட்டது. அதாவது 234 பேரே தெரிவாகினர். இவ்வாறு குறைந்து செல்லும் நிலைக்கு மாணவர்கள் திறமை அடிப்படையில் தெரிவு செய்யும் விகிதமும் குறைவாக இருப்பதை நாம் எம் கண் முன்னே கண்டு கொள்ளலாம். இவ்வாறு பல்கலைக்கழக அனுமதித் தொகை குறைந்து செல்லும் வேளை மட்டக்களப்பு மாவட்டம் ஓர் பின் தங்கிய மாவட்டமாக ஏன் கணிக்கப்படவில்லை.

(இ.வரதராஜன்)

இதே போன்றே கடந்த சில ஆண்டுகளில் க.பொ.த (உயர்தரப்) பரீட்சை முடிவுகளில் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர் தொகையினதும் அளவினை நோக்குகையில் கூட மட்டக்களப்பு மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டமாகக் கணிக்கப்பட வேண்டிய அவசியம் உண்டு. இதனைக் கடந்த 1999ம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த (உயர்தர) பரீட்சை முடிவு விபரங்களில் பின்தங்கிய மாவட்டங்களான 14 மாவட்டங்களின் அனுமதித் தொகையினையும் மட்டக்களப்பு மாவட்டத்தின் அனுமதித் தொகை விகிதத்தினையும் ஒப்பீட்டு அடிப்படையில் நோக்குகையில் கூட இம் மாவட்டத்தினைக் கல்வியில் பின்தங்கிய மாவட்டமாகச் சேர்க்க வேண்டிய அவசியமானது தெட்டத் தெளிவாகப் புலப்படக்கூடியதாய் உள்ளது. இதனை பின் வரும் தரவுகள் ஊடு அறியலாம். மேற்படி தரவுகளைக் கொண்டு கல்வியில் பின்தங்கிய

| | மாவட்டம் | தோற்றியோர் | yes பெற்றதில் | வீதம் | பல்கலைக்கழக அனுமதி | Yes பெற்றதில் பல்கலைக்கழக அனுமதி வீதம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | நுவரெலியா | 3632 | 1015 | 29.87 | 212 | 19.53 |
| 02 | அம்பாந்தோட்டை | 5896 | 2414 | 40.95 | 335 | 13.87 |
| 03 | அம்பாறை | 5125 | 2067 | 40.33 | 284 | 13.73 |
| 04 | யாழ்ப்பாணம் | 6220 | 4150 | 66.72 | 1149 | 27.68 |
| 05 | மன்னார் | 813 | 335 | 41.21 | 70 | 20.89 |
| 06 | கிளிநொச்சி | 777 | 488 | 62.81 | 81 | 16.59 |
| 07 | முல்லைத்தீவு | 1051 | 702 | 66.79 | 90 | 12.82 |
| 08 | வவுனியா | 1156 | 657 | 56.83 | 73 | 11.11 |
| 09 | திருகோணமலை | 2321 | 941 | 40.54 | 148 | 15.72 |
| 10 | அநுராதபுரம் | 6866 | 2515 | 36.53 | 343 | 13.63 |
| 11 | பொலநறுவை | 2438 | 776 | 31.83 | 125 | 16.10 |
| 12 | மொனறாகலை | 2988 | 1034 | 34.61 | 143 | 13.82 |
| 13 | பதுளை | 7021 | 2661 | 37.9 | 377 | 14.16 |
| 14 | மட்டக்களப்பு | 2914 | 1658 | 56.9 | 223 | 13.44 |
| 15 | மாத்தளை | 3785 | 1561 | 41.24 | 195 | 12.49 |

**பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர் தொகையினதும் அளவினை நோக்குகையில் கூட மட்டக்களப்பு மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டமாக கணிக்கப்பட வேண்டிய அவசியம் உண்டு.**

மாவட்டங்களாகப் பிரகடனப்படுத்திய மாவட்டங்களுடன் ஒப்பிட்டு நோக்குகையில் மட்டக்களப்பு மாவட்டம் பல்கலைக்கழக அனுமதி வீதம் குறைந்து கொண்டு செல்லும் பாங்கினைக் காணலாம். எனவே ஏனைய பின்தங்கிய மாவட்டங்களுடன் மட்டக்களப்பைச் சேர்க்கவேண்டிய அவசியம் புலப்படுகின்றது. அடுத்து கடந்த 2000ம் ஆண்டு க.பொ.த.உயர்தர பெறு பேற்றில் கொண்டு வரப்பட்ட சற்புள்ளி அறிமுகம் கூட மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்கலைக்கழக அனுமதியில் பல பின்னடைவுகளினைக் கொண்டு வருவதினை 2000ம் ஆண்டு க.பொ.த. உயர்தர பரீட்சை முடிவுகளின் படி பெறப்பட்ட புள்ளி விபரங்கள் மூலம் தெளிவாகக் காணலாம்.


**2000ம் ஆண்டு க.பொ.த.(உ/த) பரீட்சை மூலம் பல்கலைக்கழக அனுமதித் தகமை.**

| | மாவட்டம் | தோற்றியோர் | yes பெற்றோர் | வீதம் |
|---|---|---|---|---|
| 01 | நுவரெலியா | 4633 | 2028 | 43.77 |
| 02 | அம்பாந்தோட்டை | 7433 | 3568 | 48.00 |
| 03 | அம்பாறை | 7046 | 3300 | 46.83 |
| 04 | யாழ்ப்பாணம் | 8349 | 4976 | 59.59 |
| 05 | மன்னார் | 923 | 524 | 56.77 |
| 06 | கிளிநொச்சி | 1234 | 734 | 59.48 |
| 07 | முல்லைத்தீவு | 1577 | 985 | 62.46 |
| 08 | வவுனியா | 1501 | 835 | 55.62 |
| 09 | திருகோணமலை | 3148 | 1526 | 48.44 |
| 10 | அநுராதபுரம் | 8155 | 4036 | 49.49 |
| 11 | பொலநறுவை | 3010 | 1392 | 46.24 |
| 12 | மொனறாகலை | 3550 | 1690 | 47.60 |
| 13 | பதுளை | 8058 | 3549 | 44.04 |
| 14 | மட்டக்களப்பு | 4276 | 1996 | 46.67 |

(தொடர்ச்சி 19ம் பக்கம்)

# சமாதானத்தை எட்டத்துரத்திய சந்திரிக்காவின் அமைச்சு பறிப்பு!

தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால வரைபான தன்னாட்சி அதிகார சபை வரைபினை நோர்வே அரசு ஊடாக சிறிலங்கா அரசிடம் கையளித்து 72 மணித்தியாலம் பூர்த்தியாவதற்கு இடையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் மூன்று அமைச்சர் பதவிகள் ஜனாதிபதியினால் பறிக்கப்பட்டுள்ளன. அதனையடுத்து பாராளுமன்றம் நவம்பர் 19ம் திகதி வரை ஜனாதிபதியினால் ஒத்திவைக்கப்



பட்டுள்ளதுடன், அவரகாலச் சட்டமும் உடன் அமுல் படுத்தப் பட்டுள்ளது.

சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பான நடவடிக்கைகள் முயல் வேகத்தில் இல்லாவிட்டாலும் ஆமை வேகத்திலாவது அசைந்து கொண்டிருக்கும் தறுவாயில் இப்படி தெரிவித்து வந்த ஜனாதிபதி விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக வரைபு சமர்பிக்கப்பட்டு அடுத்த கட்ட நகர்வுகள் மேற் கொள்ள முன்னமே இந்தச் சதுரங்க ஆட்டத்தின் காய் நகர்த்தலை மேற் கொண்டிருக் கிறார்.

புலிகளின் தீர்வுத் திட்டம் உட்பட பல முக்கிய விடயங்களுக்காகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அமெரிக்கா சென்றிருந்த நிலையில் ஜனாதிபதி தமது நடவடிக்கைகளை எடுத்திருப்பது அரசின் உடனடி எதிர் நடவடிக்கைகளின் வேகத்தைக் கட்டுப்படுத்தியிருந்தமையும் குறிப் பிடத்தக்கது. தற்போது அடுத்தது என்ன நடக்கும் என்பதை அறிய வேண்டிய நிலையிலேயே அனைத்து மக்களும் அவாக் கொண்டுள்ளனர்.

படைத்துறை தளபதிகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் படைத்துறை அமைச்சுக்கா அல்லது ஜனாதிபதிக்கா என்பது தொடர்பான தீர்ப்பு பாதகமாக அமையப்போகின்றன என்பதை அறிந்த அரசாங்கம் பிரதமர் நீதியரசர் மீது குற்றவியல் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட நிலையில் ஜனாதிபதி பாராளுமன்றத்தை ஒத்திவைத்துள்ளமையினால் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை முறியடிக்கப்பட்டுள்ளது.

மறுபுறம் ஜனாதிபதியால் மன்றத்தைக் கலைக்க வேண்டும். அல்லது நாடாளும ன்றத்தில் ஆட்சியில் இருக்கும் அரசை கலைத்து பெரும் பான்மையை நிருபிக்கும் கட்சிக்கு அரசமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போதையச் சூழலில் ஐ.தேசிய முன்னணியுடன் சிறிலங்கா, முஸ்லிம், காங்கிரஸ், தமிழ் கூட்டமைப்பு எம்.பிக்கள் மற்றும் பொதுஜன ஐக்கிய முன்னணி பக்கமிருந்து கூட்டமைப்பு பக்கம் இணைந்து கொண்ட புத்திர சிகாமணி உட்பட 126 பேர்



ஆதரவாக இருப்பதால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியை ஆட்சி அமைக்க ஜனாதிபதியால் அழைக்க முடியாது.

எனவே நாடாளுமன்றத்தைக் கலைக்கும் ஒருசூழ்நிலையே காணப்படுகிறது. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மீண்டும் ஒரு பொதுத் தேர்தல் என்றால் எந்தக் கட்சி ஆட்சி பீடமேறுவது புரிந்துணர்வு உடன்படிக்கை உயிர் வாழுமா என்கின்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுப்பப்படலாம் தற்போதைய கள நிலவரங்களின் படி ஜனாதிபதி சந்திரிக்காவை விட பொதுஜன ஐக்கிய முன்னணியில் ஆளுமை பலம்மிக்க ஒரு பிரமுகர் இல்லை என்றே கருதவேண்டியுள்ளது.

எதிர்க்கட்சி தலைவராக இருக்கும் மகிந்த ராஜ பக்ஷ அல்லது அனுராபண்டார நாயக்கா இவர்களில் எவரும் ஜனாதிபதியின் இடத்தை நிரப்ப முடியாது. மறு முனையில் தற்போது பிரதமராக இருக்கும் ரணில் விக்கிரம சிங்காவை விட மகிந்த ராஜ பக்ஷ போன்றவர்களின் பிரபல்யத் தன்மை மேலோங்காது என்பது பலரது அபிப்பிராயம், இத்துடன் தென்னிலங்கை உட்பட சகல தரப்பினரும் சமாதானத்தின் மீது

**நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மீண்டும் ஒரு பொதுத் தேர்தல் என்றால் எந்தக் கட்சி ஆட்சி பீடமேறுவது. புரிந்துணர்வு உடன் படிக்கை உயிர் வாழுமா என்கின்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுப்பப்படலாம்.**

அவாக் கொண்டுள்ள படியால் மீண்டும் ஐ.தே. முன்னணி கட்சி அரசாங்கம் அமைக்கும் வாய்ப்பு ஏற்படும்.

தற்போது சர்வதேச சமூகமே சமாதானம் ஏற்பட வேண்டும் என விரும்புவதால் ஜனாதிபதி உடன் படிக்கையை ரத்துச் செய்து விடுதலைப் புலிகள் மீதான போரைத் தொடங்க மாட்டார் என்பது உறுதி. அமைச்சு பொறுப்புக்களைப் பறித்ததைத் தொடர்ந்து ஊடகவாயிலாக உரை நிகழ்த்திய ஜனாதிபதி புலிகளுடன் பேசுவதற்குத் தயாராகவிருக்கிறேன் எனத் தெளிவுபடுத்தியிருந்தார்.

விடுதலைப் புலிகளும் முட்டாள்கள் போல் சண்டையைத் தொடங்கி விடமாட்டார்கள். ஒரு அதிகாரப் பலமிக்க ஆட்சி சிங்கள தேசத்தில் அமையும் வரை பொறுமையாக உன்னிப்பாக அவதானம் செலுத்தி வருவார்கள். அதன் பின்பு அடுத்த கட்ட நகர்வுகள் மேற்கொள்ள இடமுண்டு. இவை தவிர வடக்குக் கிழக்கில் கள முனைகளில் பாதுகாப்பு சோதனைக் கெடுபிடிகளில் பாரிய வித்தியாசங்கள் தென்பட வில்லை என செய்திகள் தெரிவிக்கின்றன.

இச் சூழ்நிலையில் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகார அஸ்திரத்தினை அவரது கைகளிலிருந்து அகற்றுவதற்கு ரணில் அரசு மேற் கொள்ளப் போகும் நடவடிக்கைகள் என்ன என்பது அடுத்து வரும் நாட்களில் தெரிய வரும் என்பது உறுதி.

~வேணிதன் ~

**தற்போது அமுல் படுத்தப்பட்ட அவசர காலச் சட்டம் 10 நாட்களுக்குள் ஜனாதிபதியினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அதன் அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.**

ஜனாதிபதியும் அவரது சக பாடிகளும் இணைந்து ஐக்கிய தேசிய முன்னணி அரசின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவது அனுமதிக்க முடியாத விடயம் என அமைச்சர்கள் ஆத்திரத்துடன் தமது மன எண்ணங்களைக் கொட்டித் தீர்த்துவருகின்றனர். சிங்கள தேசத்தின் ஆட்சியில் அமரக்கூடிய ஆளுமைப் பலம் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குமே உண்டு. இவ்வாறு அதிகாரத் தரப்பினரின் போட்டி பூசல்கள் என்றுஎளிதான விடயமாக தற்போது இப்பிரச்சினை கருதப்படவில்லை. மாறாக சர்வதேசவலைப் பின்னலில் சுற்றப் பட்டிருக்கும் ஒரு நிலையில் சிறிலங்கா அரசும்- விடுதலைப் புலிகளும் போர்நிறுத்த உடன்படிக்கையினைக் கைச்சாத்திட்டு அதன் பின்னர் இரு தரப்புப் பேச்சுக்களும் முன்னெடுக்கப் பட்டன.

ஐ.நா. செயலாளர் தொடக்கம் அமெரிக்க அதிகாரிகள் வரை இனப்பிரச்சினை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்பட வேண்டும் என வலியுறுத்தி வந்தமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறான நிலையில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்களில் அதிருப்தி

அமுல் படுத்தப்பட்டுள்ள அவசர காலச் சட்டம் மூலம் மீண்டும் எவரையும் கைது செய்யவும் விசாரணையின்றி தடுத்து வைக்கும் அதிகாரம் சிறிலங்கா ஆயுதப் படைகளுக்கு வழங்கப்பட் டுள்ளது.

கடந்த 2001ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அவசரகாலச் சட்டம் காலவதியானதைத் தொடர்ந்து கடந்த இரு வருடங்களாக அவசரகால நிலைமையின்றி காணப்பட்டது. தற்போது அமுல் படுத்தப்பட்ட அவசர காலச் சட்டம் 10 நாட்களுக்குள் ஜனாதிபதியினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டு அதன் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். தற்போதுள்ள நிலையில் பாராளுமன்றம் கூட்டப்படுமானால் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு இருக்கும் 126 வாக்குகளால் அவை முறியடிக்கப்படும் வாய்ப்பு உள்ளது.

அடுத்து ஜனாதிபதியவர்கள் நாடாளுமன்றத்தை 14 நாட்களுக்குள் மாத்திரமே ஒத்திவைக்க முடியும். தொடர்ந்து ஒத்தி வைப்பதனால் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் இவை ஒருபுறமிருக்க இலங்கையின் அரசியல் யாப்புப் படி அரசாங்கத்தின் நடவடிக்கையைத் தொடர்ச்சியாக முடக்கி வைக்க முடியாது. ஒன்றில் பாராளு

## சொன்னாலும் குற்றம்



போன திங்கட்கிழம செட்டிபாளையம் மகா வித்தியாலயத்திற்கு சின்ன மந்திரி ஒருவரால அந்த பெரிய கட்டடத்திற்கு அடிக்கல் நடுவதற்காக தடபுட்லாக தோரணம் கட்டி ஆலாத்தி எடுத்தபோதும், சின்ன மந்திரி வருவார் வருவார் என வழி மேல் விழி வைத்து 'வேன்ட்' வாத்தியங்களுடன்காத்து நின்ற மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பொது மக்களுக்கும் பெரும் ஏமாற்றம் தான் கிடைச்சது. அந்தச் சின்ன மந்திரி வராம மந்திரியிட கையாள் தானாம் தரிசனம் கொடுத்தார். இதனால தோரணம் கட்டி ஆலாத்தி எடுத்தவங்களுக்கு முகத்தில அடிச்சமாதிரி வேதனையுடன் வெட்கத்த வெளிக்காட்டாம நின்றாங்களாம்,

அந்த சின்ன மந்திரிக்காக காத்தான்குடியில் இருந்து விஷேடமாக "காலால்" பண்ணின கோழிப்புரியாணி சாப்பாடு எல்லாம் சும்மா கிடந்த ஆக்கங்களுக்கு பகிர்ந்து விட்டார்களாம்,

மந்திரியார் ஏற்கனவே கொடுத்த தினத்தில தான் அடிக்கல் நடும் விழா ஏற்பாடானது. என்ன செய்வது அவருக்கு தவிற்க முடியாத காரணம் ஏற்பட்டது.

ஆனால் மந்திரி வரவுக்காகச் செட்டிபாளையம் முழுவதும் தடபுடலான சோடனைக்கு வீண் செலவு ஏற்பட்டதே என்று ஏற்பாட்டாளர்கள் புறு புறுக்கின்றனர். இது மந்திரிமாருக்கு ஆலாத்தி எடுப்பவர்களுக்கும் பாடமாக அமையட்டும் என்று சனம் கதைக்குதுகள்.


# மொழியுரிமைப் போராட்டங்கள் மூலம் தமிழ் மொழி பெற்ற சட்ட அந்தஸ்து என்ன?



*(சென்றவாரத் தொடர்ச்சி....)*

**தமிழரசுக் கட்சியும் தமிழ் மொழியும்**

**1956**ம் ஆண்டு நடந்து முடிந்த தேர்தல் மூலம் வெற்றி பெற்ற மக்கள் ஐக்கிய முன்னணி அமரர் பண்டாரநாயக்கா தலைமையில் ஆட்சி அமைத்தது. ஆட்சி அமைத்த கையோடு ஆனி 1956ம் ஆண்டு ஐந்தாம் திகதி நாடாளுமன்றத்தில் சிங்களம் மட்டும் அரச கரும மொழி என்ற மசோதா கொண்டு வரப்பட்ட போது அதை எதிர்த்து தமிழரசுக் கட்சியினர் காலிமுகத்திடலில் சாத்வீகப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள்.



**தலைவர்கள் பனா கொடைச் சிறைச்சாலையில் வட கிழக்கில் இராணுவ ஆட்சிக்கு மத்தியில் 1961ம் ஆண்டு 3ம் இலக்க நீதி மன்ற மொழிகள் சட்டத்தை அவசர அவசரமாகக் கொண்டு நிறைவு செய்தார்கள்.**

சத்தியாக்கிரகம் இருந்த தமிழரசுக் கட்சித் தலைவர்களையும் தொண்டர்களையும் சிங்களக் காடையர்கள் தாக்கினார்கள். இரும்பு மனிதர் நாகநாதன் காடையர்களால் பந்தாடப்பட்டார். கோப்பாய் கோமான் வன்னியசிங்கம் மேலங்கியை இழந்ததுடன் நையப்புடைக்கப்பட்டார். தளபதி அமிர் தலையுடைக்கப்பட்டார். தமிழரசுத் தந்தையின் மக்கள் அவர் முன்னே காடையர்களால் தாக்கப்பட்டனர். ஆனால் நடந்தது அனைத்தையும் பார்த்துக்கொண்டு அமைதியாகத் தன் சத்தியாக்கிரகத்தை நிறைவு செய்தார் தந்தை செல்வா. இதனால் ஈழத்துக் காந்தி எனப் போற்றப்பட்டார். இவ்வாறே தமிழர்களின் முதல் மொழிப் போர் குழப்பத்தில் நிறைவு பெற்ற நேரம் நாடாளுமன்றத்தில் மொழிச் சட்டம் அக்கு வேறு ஆணிவேறாக எதிர்க்கட்சியினர் தாக்கிப் பேசினார்கள். ''ஒரு மொழி என்றால் இரு நாடு, இரு மொழி என்றால் ஒரு நாடு'' எனக் கலாநிதி கொல்வின் கூறிய தீர்க்க தரிசினம் இன்று நிறைமாதக் கர்ப்பிணியின் நிலையை அடைந்துள்ளது.

வடக்குக் கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்திய தமிழரசுக்கட்சி காங்கிரஸ் கட்சிகள் வாக்கெடுப்பை தமிழ் பகிஸ்கரிக்க பட்டிருப்பு பாராளுமன்றப் பிரதிநிதியாக இருந்த எஸ்.யு.எதிர் மன்னசிங்கம் மட்டுமே சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து வாக்களித்த ஒரே ஒரு தமிழ் பாராளுமன்றப் பிரதிநிதியாகும். லங்கா சமசமாஜக் கட்சியும் பொதுவுடமைக் கட்சிக்காரரான இடது சாரிகள் தனிச் சிங்களத்தை எதிர்த்து வாக்களித்து விட்டு பாராளுமன்றத்தை விட்டு வெளிவர முடியாத நிலையில் காடையர்களால் சிறை வைக்கப்பட்டார்கள். பின்னர் இராணுவத்தினரின் உதவியோடு அவர்கள் தங்கள் இருப்பிடங்களுக்கு அனுப்பப்பட்டார்கள். ம.ஐ.முன்னணியும் ஐ.தே.கட்சியும் மொழி மசோதாவை ஆதரித்து வாக்களித்தார்கள். இடது சாரி சிங்களவரின் நிலை இதுவென்றால் தமிழர் நிலை என்ன என்பதை விளக்க வேண்டிய அவசியமே இல்லை.

இந்த நிலை 1956ம் ஆண்டு ஆவணி மாதம் பிரமாண்டமான ஒருபாதயாத்திரையை வடகிழக்கிலிருந்து தமிழரசுக்கட்சி திருமலைக்கு நடாத்தி மகாநாட்டைக் கூட்டி அதில் 1957ம் ஆண்டு ஆவணி மாதத்திற்கு முன் தமிழ் மொழிக்குச் சட்ட அந்தஸ்து வழங்காவிடில் சாத்வீகப் போராட்டத்தை தமிழரசுக்கட்சி நடத்தும் என பிரேரணை ஒன்றை நிறைவு செய்து அரசுக்கு அனுப்பியது.

இந்த எச்சரிக்கையால் அச்சமடைந்த பிரதமர் பண்டாரநாயக்கா, தமிழரசுக்கட்சித் தலைவர் தந்தை செல்வாவை அழைத்துப் பேசி ஒரு சமரசத் திட்டத்தை வகுத்து 1957ம் ஆண்டுஆடி மாதம் 26ம் ஆண்டு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டார். அதுவே புகழ்வாய்ந்த பண்டா செல்வா ஒப்பந்தமாகும். ஆனால் இந்த ஒப்பந்தத்திற்கு எதிராக ஐ.தே.கட்சி போர்க்கொடி தூக்கியதோடு ஜே.ஆர்.தலைமையில் கண்டிக்குப் பாதை யாத்திரை நடாத்தி தென்னிலங்கையில் பாரிய எதிர்ப்பு அலைகளைக் கட்டுக்கடங்காத நிலையில் ஏற்படுத்தியது. இன வாதிகளான பௌத்த பிக்குகள் பிரதமர் பண்டாரநாயக்காவின் கொழும்பு றோஸ்மீட் பிளேஸில் உள்ள வீட்டின் முன்னால் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். ஆர்ப்பாட்டங்களால் அதிர்ச்சியடைந்த பண்டாரநாயக்கா 1958ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒப்பந்தத்தைக் கிழித்தெறித்தார்.

தமிழரசுக் கட்சி தனது அடுத்த நடவடிக்கையாக 1958ம் ஆண்டு மே மாதம் வவுனியாவில் தனது மாநில மகாநாட்டைக் கூட்ட நடவடிக்கை எடுத்தது. மகாநாட்டுக்கு வந்த தொண்டர்கள் ஆங்காங்கே பேரினவாதிகளால் தாக்கப்பட்டார் கள்.இதைத் தொடர்ந்து நாடளாவிய நிலையில் 1958ம் ஆண்டு மே மாதம் 24ம் நாள் இனக்கலவரம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து தமிழ்த் தலைவர்கள் அனைவரையும் அரசு வீட்டுக்காவலில் வைத்த கையோடு 1958ம் ஆண்டு 28ம் இலக்க ''தமிழ் மொழி'' நியாயமான உபயோகச் சட்டத்தை 1958ம் ஆண்டு ஆவணி மாதம் 3ம் திகதி அவசர அவசரமாக நாடாளுமன்றத்தில் நிறைவு செய்தார்கள். சட்டத்துறை வரலாற்றில் இது ஒரு குறைப் பிரசவமாகும். இச் சட்டம் எவரையும் ஒருபோதும் திருப்திப் படுத்தாத சட்டமாகும் என ஆய்வாளர்கள்அன்றே கூறினார்கள். இந்தச் சட்டத்தைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. மீண்டும் பிரச்சினை தொடர்ந்தது. 1959ம் ஆண்டு புரட்டாதி மாதம் ஒரு பௌத்த பிக்குவால் நாட்டின் பிரதமர் சுட்டுக்கொல்லப்பட்டார். ஆட்சியின் கட்டமைப்பு சிதறியது. 1960ம் ஆண்டு டட்லி சில நிபந்தனையின் பெயரில் தமிழரசுக்கட்சியின் உதவியோடு பிரதமரானார். அவர் தமிழரின் நியாயமான மொழி உரிமையை வழங்க பின்னடைந்ததால் சிம்மாசனப் பிரசங்க வாக்கெடுப்பில் அவர் அரசு தோற்கடிக்கப்பட்டது.

இதன் பின் ஸ்ரீலங்கா சுகந்திரக்கட்சித் தலைவியான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடன் எழுதாத கனவான் ஒப்பந்தம் ஒன்றை தமிழரசுக்கட்சி ஏற்படுத்தி சிறிமாவோ ஆட்சி அமைக்க உதவியது. சிறிமாவோ தான் பேசியபடி நடக்க முன்வராததால் 1961ம் ஆண்டு மாசி மாதம் தொடக்கம் சித்திரை மாதம் வரை வடகிழக்கில் அரசு நிர்வாகத்தை ஸ்தம்பிக்கும் வகையில் தமிழரசுக்கட்சி சத்தியாக்கிரகத்தை நடாத்தி வடகிழக்கில் ஆட்சியை ஸ்தம்பித நிலைக்குக் கொண்டுவந்தது. அரசு அலட்சியம் செய்ததால் தமிழரசு தபால் சேவையை ஆரம்பித்தது. தமிழரசால் முத்திரை வெளியிடப்பட்டது. அதைத் தொடர்ந்து அரச காணிகளை பங்கிட்டு மக்களுக்கு வழங்கும் நடவடிக்கையை ஆரம்பித்தார்கள். அரசு அதிர்ச்சி அடைந்தது. உடனே நாடடங்கலாக அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தி சத்தியாக்கிரகத்தை தடை செய்ததோடு தமிழரசுக்கட்சித் தலைவர்களைக் கைது செய்து பனாகொடை இராணுவ முகாமில் சிறை வைத்தார்கள்.

தமிழ் தலைவர்கள் பனாகொடைச் சிறையில் வடகிழக்கில் இராணுவ ஆட்சிக்கு மத்தியில் 1961ம் ஆண்டு 3ம் இலக்க நீதி மன்ற மொழிகள் சட்டத்தை அவசரஅவசரமாகக் கொண்டு நிறைவு செய்தார்கள். இச் சட்டமும் தமிழ் மொழியைப் பிரயோகிப்பதில் எவ்வித அழுத்தங்களையும் கொண்டிருக்கவில்லை என சட்ட வல்லுனர்கள் அபிப்பிராயம் கூறினார்கள்.

**டட்லி செல்வா ஒப்பந்தம்**

1965ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தமிழரசுக்கட்சியும் ஐ.தே. கட்சியும் சில நிபந்தனை அடிப்படையில் கூட்டிணைந்து ஆட்சி அமைத்தது. இதனடிப்படையில் 1965ம் ஆண்டு பங்குனி மாதம் 24ம் திகதி ஒரு ஒப்பந்தத்தை தந்தை செல்வாவும், பிரதமர் டட்லியும் செய்து கொண்டார்கள். அதுவே டட்லி-செல்வா ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தத்தில் ஒப்புக் கொண்டபடி தமிழ் மொழி விசேட சட்டம் ஒன்றை 1966ம் ஆண்டு தை மாதம் எட்டாம் திகதி பாராளுமன்றத்தில் டட்லி அரசு பிரசுரித்தது. எதிர் கட்சியின் பலத்த எதிர்ப்புக்கும் மத்தியில் நிறைவு செய்யப்பட்ட இச் சட்டம் சட்டப்புத்தகத்தின் பக்கங்களை நிறைவு செய்ததேயொழிய அமுல்நடத்தப் படவில்லை. அதுவும் ஏட்டுச் சுரைக்காயானது. அதை அமுலாக்க அரசு எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. டட்லி செல்வா ஒப்பந்தமும் காலை வாரிவிட்டது. இவையெல்லாம் சிங்களத் தலைமைகளின் நாணயத்தின் மறுபக்கங்களாகும். அதன் பின் 1970 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் ஆட்சி அமைக்கப்பட்டது. அவ்வரசில் இடது சாரிகளும் பங்காளி ஆனார்கள். அவ்வரசு தன் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டு அரசியல் நிர்ணய சபையை ஏற்படுத்தியது. அதன் மூலம் 1972ம் ஆண்டு புதிய அரசியல் யாப்பை வரைந்தார்கள். இந்த அரசியல் யாப்பின் தமிழ் மொழியின் சட்ட அந்தஸ்து சம்மந்தமாக பின்வரும் சட்ட ஏற்பாடு காணப்படுகிறது. 1956ம் ஆண்டு நிறைவு செய்யப்பட்ட 33ம் இலக்க இலங்கையின் அரச கரும மொழி சட்டத்தின் ஏற்பாட்டின் படி சிங்களமாக இருக்க வேண்டும்.

1958ம் ஆண்டின் 28ம் இலக்க தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கு இணங்க தமிழ் மொழி இருக்க வேண்டும் எனக் கூறுவதோடு 1966ம் ஆண்டு தை மாதம் எட்டாம் திகதி டட்லி அரசால் கொண்டுவரப்பட்ட தமிழ் மொழிப் பிரயோகம் சம்பந்தமான சட்டத்தை அப்படியே அகற்றிவிட்டது.

பூ.ம.செல்லத்துரை

புதிய அரசியல் யாப்பு மூலம் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகியது. தமிழ் மொழியின் சட்ட அந்தஸ்து ''ஒரு மொழி என்றால் இரு நாடு, இரு மொழி என்றால் ஒரு நாடு'' என ஊருக்கு உபதேசம் செய்த கொல்வின் தன்னால் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்பில் சிறுபான்மையோரைப் புறம் தள்ளி தான் ஒரு பேரினவாதி என்பதினை பட்டை நாமம் போட்டுக் காட்டினார். இடதுசாரிகள் ஜனநாயகத்தின் துகில் உரிந்த கதை இது.

தொடரும்.....

## கந்தப்போடியும் கலந்தர்லெவ்வையும்

**கந்தர்:-** அரசாங்கத்திட கையில இடைக்கால வரைவ குடுத்தாச்சி இனித்தான் இருக்கு விளையாட்டு.

**கலந்தர்:-** அந்த வரைவில எங்கட ஆக்களுக்கு ஒன்டுமில்ல எண்டு எங்கட அரசியல் வாதிகள் சத்தம் போட்டு சொல்லுறாங்களே.........

**கந்தர்:-** தமிழ் இனத்தின் ஒரு அங்கமாக நீங்க இருக்கக்குள்ள உங்கள ஓரம் கட்டிப் போட்டு நடக்க உடுவமா?

**கலந்தர்:-** எங்கட அரசியல் வாதிகள் நாளும் பொழுதும் ஒன்டும் இல்ல ஒண்டுமல்ல எண்டுதானே செல்றாங்க.....

**கந்தர்:-** அவங்க அப்படி சொன்னாத்தான் அரசியல் வாதி என்ட பட்டத்த எடுக்கலாம்.

**கலந்தர்:-** வடக்கு, கிழக்கில வாழுற எங்கட ஆக்களுக்கும் உங்கட ஆக்கங்களும் தாயகம் ஒன்டுதான்.

**கந்தர்:-** அது உனக்கு விளங்குது உங்கட அரசியல் வாதிகளுக்கு இன்னும் விளங்குதில்லையேடாப்பா!

இந்தியாவும் ஈழத்தமிழரும்

> "வன்முறையை மென்முறையால் வெற்றிகொள்ளமுடியாது என்று நாம் உணர்ந்துகொண்டதால்தான், நாம் வன்முறைப் போராட்டத்தைத் தழுவிக்கொண்டோம்."
>
> *தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்.*

# திலீபனின் மரணம் ஏற்படுத்திய சோகம்



திலீபனின் சொந்தப் பெயர் இ.பார்த்தீபன்.

யாழ்ப்பாணம் ஊரெழுவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். திலீபன் பிறந்து ஒரு சில மாதங்களிலேயே தாயைப் பறிகொடுத்திருந்தான். தந்தை ஓர் ஆசிரியர். பெயர் இர்ாசையா.

உரும்பிராய் சைவ தமிழ் வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும், யாழ் இந்துக் கல்லூரியில் உயர்தரக் கல்வியையும் முடித்துக்கொண்ட திலீபன், யாழ் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட மாணவனாக இருந்தபோதுதான், தமது இனத்தின் விடுதலைப் போராட்டத்தில் தன்னை முழுமையாக அர்பணித்திருந்தான்.

யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் இருந்த காலத்தில், விடுதலைப் புலிகளின் யாழ்குடா பொறுப்பாளராக இருந்த கிட்டுவுடன் இணைந்து, ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு எதிராக பல தாக்குதல்களில் திலீபன் பங்குபற்றியிருந்தான். விடுதலைப் புலிகள் அமைப்பின் வட்டுக்கோட்டைப் பகுதி பிரசாரப் பொறுப்பாளர், நவாலி பிரதேசப் பொறுப்பாளர், யாழ் அரசியல் பொறுப்பாளர் என்று திலீபன் கடமையாற்றியதால், மக்களுடன் நெருங்கிப் பழகி, யாழ் மக்களின் ஒட்டுமொத்த அன்பையும், நட்பையும் திலீபன் பெற்றிருந்தான்.

இதனால், திலீபன் இறந்துவிட்டான் என்ற செய்தி மக்கள் மத்தியில் பரவியபோது, மக்களால் தமது சோகத்தைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

யாழ் குடாவே சோகத்தில் மூழ்கியது. ஒவ்வொரு வீட்டின் முன்பும் திலீபனின் உருவப் படம் தாங்கிய சிறிய கூடுகள் ஓலையாலும், சீலையாலும் அமைக்கப்பட்டு, அவற்றினுள் தீபம் ஏற்றப்பட்டிருந்தன. வீதியெங்கும் வாழை மரங்களாலும், குருத்துக்களாலும் அலங்கரிக்கப்பட்டு, அந்த தியாக இளைஞனின் இறுதி ஊர்வலத்திற்குத் தமது மரியாதையையும் வணக்கத்தையும் செலுத்தத் தயாராக இருந்தன.

யாழ் குடாவில் அழாத மக்களே இல்லை என்று கூறும் அளவிற்கு ஒப்பாரிகள் முகாரிகளாக ஒலித்தபடி இருந்தன. போதாதற்கு ஒவ்வொரு வீதிகளிலும், கோவில்களிலும், பாடசாலைகளிலும் பொருத்தப்பட்ட ஒலிபெருக்கிகளில் சோக கீதங்களும், சோக நாதங்களும் ஒலித்தபடி இருந்தன.

இதே நிலமை வடக்குக் கிழக்கு முழுவதிலும் காணப்பட்டது. ஒவ்வொரு தமிழன் மனதிலும் தாங்கமுடியாத வேதனை. இந்திய அரசு மீது வெறுப்பும், கோபமும், அதனைத் தீர்த்துக்

**துரோகங்களின் அத்தியாயங்கள் - 32**

கொள்ள முடியாத தமது இயலாமையை நினைத்து அவமானமும் குடிகொண்டிருந்தன.

சிலருக்குப் புலிகளின் பதிலடி எப்படி இருக்கும் என்ற பயமும் ஏற்பட்டிருந்தது. மொத்தத்தில் தமிழ் இனமே பலதரப்பட்ட உணர்ச்சி வெள்ளத்தில் காணப்பட்டது.

இராணுவச் சீருடை தரித்து, புலிக்கொடியால் போர்த்தப்பட்டு, மலர்ப்போர்வையால் மூடப்பட்ட 'அமரர்' ஊர்தியில், கரும்புலிகளின் அணிவகுப்புடன் திலீபனின் இறுதி ஊர்வலம் புறப்பட்டது. யாழ் குடாவில் கிராமம் கிராமமாக இறுதிப்பயணம் மேற்கொண்ட தங்களது வரலாற்றுத் தியாகிக்கு, இதய அஞ்சலி செலுத்த தமிழ் மக்கள் வெள்ளமெனத் திரண்டு வந்தார்கள்.

சத்தியாக்கிரகத்தின் பிதாமகர் என்று கூறப்படுகின்ற மகாத்மா காந்தியையே, நீராகாரம்கூட அருந்தாத தனது உண்ணாவிரதத்தினாலும், தற்கொடைத் தியாகத்தினாலும் விஞ்சியிருந்த அந்த வீர இளைஞனுக்கு இறுதி அஞ்சலியைச் செலுத்த, ஒவ்வொரு தமிழ் மகனும் முண்டியடித்துக் கொண்டிருந்தான்.

### தலைவரின் செய்தி:

திலீபனின் மரணத்தைத் தொடர்ந்து புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், ஒரு இரங்கல் செய்தியை வெளியிட்டார்.

''எமது விடுதலை இயக்கம் எத்தனையோ அற்புதமான தியாகங்களைச் செய்திருக்கின்றது. வீர காவியங்களைப் படைத்திருக்கின்றது. இவை எல்லாமே எமது ஆயுதப் போராட்ட வரலாற்றில் நாம் ஈட்டிய வீர சாதனைகள்.

ஆனால் எமது அன்பான தோழன் திலீபனின் தியாகமோ வித்தியாசமானது. வியக்கத்தக்கது. எமது போராட்ட வரலாற்றில் புதுமையானது. சாத்வீகப் போராட்டக் களத்தில் தன்னைப் பலிகொடுத்து திலீபன் ஈடுஇணையற்ற தியாகத்தைப் புரிந்துள்ளான்.

அவனது மரணம் ஒரு வரலாற்று நிகழ்ச்சி.



தமிழீழ தேசிய ஆன்மாவைத் தட்டியெழுப்பிய நிகழ்ச்சி.

பாரத தேசத்தைத் தலைகுனியவைத்த நிகழ்ச்சி.

உலகத்தின் மனச்சாட்சியைத் தீண்டிவிட்ட நிகழ்ச்சி.


திலீபன் தமிழ் மக்களுக்காகவே இறந்தான். தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவே இறந்தான். தமிழ் மக்களின் மண்ணுக்காக இறந்தான். தமிழ் மக்களின் பாதுகாப்புக்காக இறந்தான். தமிழ் மக்களின் சுதந்திரத்திற்காக, கௌரவத்திற்காக திலீபன் தன்னை மாய்த்துக்கொண்டான்.

ஒரு உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன். ஆனால், உயிரிலும் உன்னதமானது எமது உரிமை; எமது சுதந்திரம்; எமது கௌரவம்.

''நான் திலீபனை ஆழமாக நேசித்தேன். உறுதிவாய்ந்த இலட்சியப் போராளி என்ற ரீதியில் அவன் மீது அளவு கடந்த பாசம் எனக்குண்டு..." என்று தெடர்ந்த தலைவரின் இரங்கல் செய்தியில், இந்தியாவின் பாராமுகத்தையும் அவர் பகிரங்கமாக கண்டித்திருந்தார்.

### பாரதத்துடன் தர்ம யுத்தம்:

''திலீபனின் மரணம் குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை தெரிவித்திருக்கின்றது. இது அர்த்தமற்ற சாவு என்று இந்தியத் தூதுவர் கூறியிருக்கின்றார். தமது உறுதிமொழிகளை நம்பியிருந்தால் திலீபன் உயிர் தப்பியிருப்பான் என்றும் அவர் சொல்லியிருக்கின்றார். ஆனால், உண்மையில் நடந்தது என்ன, நடந்துகொண்டிருப்பது என்ன என்பதை மக்கள் அறிந்து கொள்ளவேண்டும்.



எமது உரிமைகள் வழங்கப்படும்; எமது மக்களுக்கும், எமது மண்ணுக்கும் பாதுகாப்பு வழங்கப்படும்; தமிழ் மக்கள் தமது பாரம்பரிய பூமியில் தம்மைத்தாமே ஆளும் வாய்ப்பு அளிக்கப்படும் - இப்படியெல்லாம் பாரத அரசு எமக்கு அளித்த வாக்குறுதிகளை நம்பி, நாம் எமது ஆயுதங்களைக் கையளித்தோம். எமது மக்களதும், மண்ணினதும் பாதுகாப்பை இந்தியாவுக்குப் பொறுப்பளித்தோம்.

இதனையடுத்து என்ன நடைபெற்றது என்பதெல்லாம் எமது மக்களாகிய உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

தமிழ் அகதிகள் தமது சொந்தக் கிராமங்களுக்குச் செல்லமுடியாமல் அகதி முகாம்களுக்குள்ளேயே முடங்கிக் கிடக்க, சிங்களக் குடியேற்றம் துரித கதியில் தமிழ் மண்ணை விழுங்க ஆரம்பித்தது. சிங்கள அரசின் பொலிஸ் நிர்வாகம் தமிழ் பகுதிகளில் விஸ்தரிக்கப்பட்டது. சிங்கள இனவாத அரச இயந்திரம் அவசரஅவசரமாக தமிழ் பகுதிகளில் ஊடுருவியது. சமாதான ஒப்பந்தம் என்ற போர்வையில், சமாதானப் படைகளின் அனுசரணையுடன் சிங்கள அரச ஆதிக்கம் தமிழீழத்தில் நிலைகொள்ள முயன்றது.

இந்தப் பேரபாயத்தை உணர்ந்துகொண்ட திலீபன், இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க திடசங்கற்பம் கொண்டான்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சிங்கள அரசுடன் உரிமை கோரிப் போராடுவதில் எந்தவித அர்த்தமும் இல்லை. பாரதம்தான் எமது இனப் பிரச்சினையில் தலையிட்டு, எம்மிடம் இருந்த ஆயுதங்களை வாங்கியது. பாரதம்தான் எமது போராட்டத்தை நிறுத்தி வைத்துள்ளது. ஆகவே பாரத அரசிடம்தான் நாம் உரிமை கோரிப் போராட வேண்டியிருந்தது.

எனவேதான் திலீபன் பாரதத்துடன் தர்மயுத்தம் ஒன்றை ஆரம்பித்தான். பாரதத்தின் ஆன்மீக மரபில் பெறப்பட்ட அகிம்சை வடிவத்தை ஆயுதமாகவும் அவன் எடுத்திருந்தான்.

நீராகாரம் கூட அருந்தாது மரண நோன்பைத் திலீபன் தழுவிக்கொள்வதற்கு 24 மணி நேரத்திற்கு முன்னரே இந்தியத் தூதுவர் தீக்ஷித்துக்கு நாம் முன்னறிவித்தல் கொடுத்திருந்தோம். உண்ணாவிரதம் ஆரம்பமாகி எட்டு நாட்கள் வரை எதுவுமே நடைபெறவில்லை. பதிலுக்கு இந்திய அரசின் கீழுள்ள தொடர்பு சாதனங்கள் எம்மீது விஷமத்தனமான பொய்ப் பிரசாரங்களைக் கட்டவிழ்த்துவிட்டன. திலீபனின் உண்ணாவிரதத்தைக் கொச்சைப்படுத்தின.

- நிராஜ் டேவிட் -

உண்ணாவிரதம் ஆரம்பமாகி ஒன்பதாவது நாளே இந்தியத் தூதர் வந்தார். உருப்படியில்லாத உறுதி மொழிகளைத் தந்தார். வெறும் உறுதிமொழிகளை நம்பி காலாகாலமாக எமது இனம் ஏமாற்றப்பட்டு வருகின்றது. உருப்படியான திட்டங்களை முன்வையுங்கள்; எமது கோரிக்கைகளை நிறைவேற்றி வையுங்கள்: அதுவரை உண்ணாவிரதத்தை கைவிட திலீபன் சம்மதிக்கமாட்டான் என்பதை அவருக்குத் தெரியப்படுத்தினோம்.

'உங்களுக்கு திலீபனின் உயிர் மீது உண்மையிலேயே அக்கறை இருந்தால், நீங்கள் அவனை வந்து பாருங்கள். எமது மக்கள் முன்னிலையில் அவனிடம் உறுதிமொழியினைக் கூறுங்கள். அப்பொழுதுதான் திலீபன் உண்ணா விரதத்தைக் கைவிடுவான்' என்று அவரிடம் கூறினேன். அதற்கு இந்தியத் தூதுவர் மறுத்துவிட்டார்..." இவ்வாறு பிரபாகரன் அவர்களின் செய்தி தொடர்ந்தது.

### ஈழப் பிரச்சினையின் அடுத்த கட்டத்தை நோக்கி இந்தியா:

திலீபனின் மரணமும், அது தொடர்பான உணர்வலைகளும் தமிழ் மக்களை ஆட்கொண்டிருந்த அதேவேளை, இந்திய இராணுவம் தனது 36வது காலாட் படைப்பிரிவை மிகவும் இரகசியமாக யாழ்குடாவிற்கு நகர்த்த ஆரம்பித்தது.

சென்னை, பறங்கிமலைப் பகுதியில் உள்ள 'Defence Colony' இல் ஏற்கனவே முகாம் அமைத்து நிலைகொண்டிருந்த இந்திய இராணுவத்தின் இந்தப் படைப்பிரிவு, சிறிது சிறிதாக யாழ்குடாவை நோக்கி நகர்த்தப்பட்டது. இந்தியா, ஈழப் பிரச்சினையின் அடுத்த கட்டத்திற்குள் தன்னை நுழைத்துக்கொள்வதற்குத் தயாரானது.

(துரோகம் தொடரும்.....)

# சிங்கள – தமிழ் கலைக் கூடலில் இனவாதிகளின் கொடூரங்கள்

சிங்கள தமிழ்க் கலைக்கூடல் கடந்த வாரம் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் ''ஹிறு'' எனும் சிங்களப் பெயரை உடைய குழுவினரால் இடம்பெற்றது. ''ஹிறு'' என்பதன் தமிழ் அர்த்தம் ''சூரியன்'' என்ப தாகும்.

கடந்த இரு சசாப்தங்களாக எமது மண்ணில் இடம் பெற்ற இனப்போரின் அனர்த்தம் காரணமாக தமிழ் மக்கள் பட்ட துன்ப துயரங்களைத் தற்போதைய போர் ஓய்ந்த காலப்பகுதியில் கடந்த ஆறு மாதங்களுக்கு முன் இந்த ''ஹிறு'' குழுவினர் நேரடியாகச் சென்று போரினால் பாதிக்கப்பட்ட எமது தாயக மண்ணின் அவலங்களைக் குறிப்பாக வன்னிப்பகுதியில் பார்வையிட்டு



சிங்கள இராணுவம் தமிழ் மக்களுக்குச் செய்த கொடுமைகளையும், அவலங்களையும் மனதில் பதித்துக் கொண்டவர்கள் தான் இந்த ''ஹிறு'' குழுவினர்.

இவர்கள் உண்மையிலேயே சமாதானத்தையும், தமிழ் சிங்கள மக்களின் ஒற்றுமையையும் மனதார இதயபூர்வமாக விளங்கிக் கொண்டவர்கள். அந்த உண்மை கொழும்பில் இடம் பெற்ற சிங்கள - தமிழ் கலைக்கூடலின் போது எம்மால் நன்கு அவதானிக்க முடிந்தது. இதற்கு வளியமைத்துத் தந்தவர்களான ''சிஹல உறுமய'' காரர்களுக்குத்தான். இதற்கு மட்டுமல்ல சிங்கள தமிழ் கலைக்கூடல்

**சிங்கள தமிழ் ஒற்றுமை வாழ்க என கோஷம் இட்டமை, எங்களைக் கொலை செய்து விட்டு எமது சடலங்களின் மேலால் கடந்து சென்றுதான் உங்களைத் தாக்க வேண்டும் என உணர்வு பூர்வமாகத் தெரிவித்தமை ......**

நிகழ்வை சர்வதேசமெங்கும் பிரபல்யப்படுத்தியமைக்கும் நன்றியும் பாராட்டையும் தெரிவிக்க வேண்டும்.

அந்த நிகழ்வில் அப்படியொரு காட்டு மிராண்டித் தனத்தை சிஹல உறுமய செய்யாது விட்டிருந்தால் கொழும்பில் இடம் பெற்ற சிங்கள தமிழ்க் கலைக்கூடல் முக்கிய இடத்தைப் பெற்றிருக்காது என்பது மட்டுமல்ல இந்த நிகழ்வை நடாத்திய ''ஹிறு'' குழுவினரின் உணர்வைப் புரியாதவர்களாகவே நாம் இருந்திருப்போம்.

அச்சுறுத்தல், அனாமதேய தொலைபேசி மிரட்டல்கள் வந்தும் தமிழ் சிங்கள மக்களின் ஒற்றுமையைப் புனருத்தாரணம் செய்யும் நோக்கில் தான் இந்த ஏற்பாட்டை துணிச்சலுடன் மேற் கொண்டுள்ளோம் என முதல் நாள் நிகழ்வான ஒக்டோபர் 29ம் திகதி காலையில் ஏற்பாட்டர்களான ஹிறு குழு அமைப்பாளர் பேசிய போதுதான் மண்டபத்தில் இருந்த எமக்கு உண்மை விளங்கியது.

அவரின் தலைமை உரை முடிவுற்று ''புனை கதை'' தொடர்பாகப் பேராசிரியர் கசரிதகல்லத் பேசிமுடித்து ஒலிவாங்கியை செ.யோகநாதனிடம் ஒப்படைத்தார் செ.யோகநாதன் ''புனை கதை'' பற்றி எமது தாயக மண்ணின் பெருமைகளைக் கூறிக்கொண்டிருந்த வேளை மண்டபத்திற்கு பின்புறம் இருந்தவர்கள் சத்தம் இட்ட படி எழுந்து நின்று இன்னுமொரு சாராருடன் தர்க்கம் புரிவது தெரிந்தது.

உடனே எங்களில் சிலர் அந்த இடத்தில் சென்று கதவைத் திறந்து வெளியே செல்ல முற்பட்ட போது அந்த ''ஹிறு'' இளைஞர்களும், யுவதிகளும் எங்களை வெளியே செல்ல விடாமல் கதவுகளை அடைத்து விட்டு கதவிற்கு வெளியேயும் உள்ளேயும் நின்றனர்.

இதே வேளையில் ''கலைக்கூடல்'' நிகழ்வில் செய்தி சேகரித்துக் கொண்டிருந்த ஊடகவியலாளர்களும் படப்பிடிப்பாளர்களும் மண்டபத்தை விட்டு வெளியே சென்று அங்கு நடந்த அடிதடி குழப்பத்தைப் பதிவாக்கினர்.

புனைகதை பற்றிய கலந்துரையாடலில் தொடர்ந்தும் செ. யோகநாதன் 3 நிமிட இடைவெளிக்குப் பின் உரையாற்றிக் கொண்டிருந்தார். சில நிமிடங்களின் பின் மண்டபத்திற்கு பின்புறம் ''சிங்கள தமிழ் ஒற்றுமை வாழ்க'' என சிங்கள மொழியில் ஒரு கூக்குரல் கேட்டது.

மேடையை நோக்கிய பார்வைகள் எல்லாம் மண்டபத்தின் பின்புறம் நோக்கினர். அப்போது ''ஹறு'' குழுவின் இளைஞன் ஒருவன் மேடையில் ஏறி சிஹல உறுமய குண்டர்கள் இந்த நிகழ்வை நிறுத்த முற்பட்டனர். நாம் அவர்களை அடித்து துரத்தி விட்டோம். இதில் எமது பகுதியைச் சேர்ந்த ஐந்து பேருக்குக் காயம் ஏற்பட்டது. இனி அவர்கள் வர மாட்டார்கள் நாம் தொடர்ந்து நிகழ்வுகளை நடாத்துவோம் என்றார்.

இதற்கிடையில் செ. யோகநாதனின் மனைவியார் மேடையில் ஏறி பேசிக் கொண்டிருந்த தமது கணவனின் காதுக்குள் ஏதோ பேசுவதும் அவர் மனைவியிடம் பேசுவதும் தெரிந்தது. அது வேறு ஒன்றுமில்லை தனது கணவருக்கு ஏதும் நடந்து விடும் பேச்சை விரைவாக முடித்து கீழே வாருங்கள் என்றுதான் சொன்னார். ஆனால் செ. யோகநாதன் ''புனைக்கதை'' உரை தொடர்ந்த்து அவரின் மனைவி செ.



யோகநாதனுக்குப் பாதுகாப்பு வழங்குவது போன்று பின்புறமாக நின்றார்.

அவரின் பேச்சை தொடர்ந்து ஏனையவர்களும் பேசினர். நிகழ்ச்சிகள் எந்தத் தடம்பலும் இன்றி தொடர்ந்து நடந்தது.

ஆனால் மண்டப முன் ஆசனத்தில் நிகழ்வை பார்க்க வந்திருந்த சுமார் ஏழு புத்த பிக்குகளில் ஐவர் வெளியே சென்றவர்கள் திரும்பி உள்ளே வரவில்லை. அது சொந்தக் காரணமா? அல்லது சம்பவத்தின் எதிரொலியா? என்பதை கூறமுடியாது.

சிஹல உறுமய காரர்களைத் தடுத்து நிறுத்துவதற்காக 'ஹிறு'' குழுவினரின் இளைஞர்கள் மட்டுமல்ல யுவதிகளும் கையில் சுத்தியல் பொல்லுகளுடன் அங்குமிங்குமாகச் சம்பவத்தின் போது திரிந்தது ஒரு புறம் இருக்க எந்த ஒரு தமிழ் மகனையும் அல்லது மகளையும்


'සිංහල-දමිල කලා උළෙල' (?)

"முகிழ்த்து மலர்வோம் நம் சோதர உறவுடன்"

සිංහල - දමිල කලා උළෙල

சிங்கள-தமிழ் கலைக் கூடல்


மண்டபத்திற்கு வெளியே செல்ல விடாமல் பாதுகாத்தமை, சிங்கள தமிழ் ஒற்றுமை வாழ்க எனக் கோஷம் இட்டமை, எங்களைக் கொலை செய்து விட்டு எமது சடலங்களின் மேலால் கடந்து சென்றுதான் உங்களைத் தாக்க வேண்டும்என உணர்வு பூர்வமாகத் தெரிவித்தமை எல்லாவற்றிற்கும் மேலாக ஐந்து சிங்கள இளைஞர்கள் இரத்தம் சிந்தியமைஇவை எல்லாம் தமிழ் மக்களுக்கு ஒரு புதிய பாடம் புகட்டியது.

தமிழர்களுக்காகத் தமிழர்கள்தான் இரத்தம் சிந்திய வரலாறுகள் உண்டு. 1957ம் ஆண்டு காலிமுகத்திடலில் தந்தை செல்வா உட்பட நமது முன்னோர்கள் சத்தியாக்கிரகம் இருந்து சிங்களக் குண்டர்களால் தாக்கப்பட்ட சம்பவம் முதல் 2003 ஒக்டோபர் 28ம் திகதி வரை தமிழினத்தின் உரிமைகளுக்காக தமிழர்கள்தான் இரத்தம் சிந்தினர். ஆனால் இந் நிகழ்வுதான் தமிழர்களைக் காப்பாற்றுவதற்காக சிங்கள இளைஞர்கள் இரத்தம் சிந்திய வரலாறாகும்.

அந்தச் சம்பவமானது சர்வ தேசமெல்லாம் ஊடகங்கள் மூலம் நிகழ்வு இடம் பெற்று காயப்பட்டவர்கள் வைத்திய சாலைக்குச் செல்வதற்கு முன்பாகவே முக்கிய செய்தியாகவும், முன்னணித் தலைப்பாகவும் பரவியது மட்டுமன்றி கொழும்பு மைய ஊடகங்களும், வன்னி மைய ஊடகங்களும் தலைப்புச் செய்தியாக வெளியிட்டன.

தமிழ்,சிங்கள கலைக்கூடலில் இடம் பெற்ற கருத்துக்களை விட இந்தச் சம்பவத்தினால் 'கலைக்கூடல் நிகழ்வு' மிகவும் வரலாற்று ஆவணமாகச் சங்கமித்து விட்டது.

முதலாம் நாள் நிகழ்வின் அசம்பாவிதங்களின் பின் பொலிஸ் பாதுகாப்பு இரண்டாம் நாள் புதிய நகர சபை மண்டபத்தில் அதிகரிக்கப்பட்டு உயர் பாதுகாப்பு வலயமாகவே காட்சியளித்தது சண்டைக்குத்தான் உயர் பாதுகாப்பு. ஆனால் இங்கு சமாதானத்திற்கும் உயர் பாதுகாப்பு என்ற நிலைதான் தமிழ், சிங்கள கலைக்கூடலில் பிரதிபலித்தது.

என்னதான் பிரச்சினைகள் ஏற்பட்ட போதும் இரண்டு நாள் நிகழ்வுகளும் புதிய நகர சபை மண்டபத்தில் திட்டமிட்டபடி தளம்பல்கள் இன்றி நடை பெற்று முடிந்தது. இது ''ஹிறு'' குழுவினரின் சிறந்த திட்டமிடலையும் நேர்மைத் தன்மையையும் வெளிக்காட்டி விட்டது.

அனைத்து நிகழ்வுகளும் முடிவுற்ற போது ''ஹிறு குழுவினர்'' நடந்த சம்பவத்திற்கு மீண்டும் மீண்டும் தமிழ் கலைஞரிடம் மன்னிப்புக் கேட்டதுடன், பொலிசாரின் பாதுகாப்புடன் கொழும்பு நகரில் இருந்து அனைத்து தமிழ் கலைஞர்களையும் அனுப்பி வைத்தனர்.

அடுத்த சிங்கள தமிழ் கூடல் எதிர் வரும் 2004ம் ஆண்டு முற்பகுதியில் வட பகுதியில் வன்னியில் அல்லது வவுனியாவில் இடம் பெறும் என்ற உறுதியுடன் இந்தக் கலைக்கூடல் முடிவுற்றது.

-பாத்திரன்-

பகிரங்கமடல்



## சமாதானம் சாவதும் பெண்ணாலே..........

அம்மணி சந்திரிகாவுக்கு!

எதிர் பார்த்தது ஒன்று அரங்கேறி விட்டது. மூன்று முக்கிய அமைச்சர் களின் பதவியை அவர்களிடமிருந்து பறித்தெடுத்தமை உங்களுக்கும் உங்கள் கட்சி சார்ந்தவர்களுக்கும் ஒரு சுப காரியமாகத் தென்படலாம். ஆனால் எனக்கும் சமாதானத்தை விரும்பும் அனைவருக்கும் உங்களின் நடவடிக்கை முற்றிலும் பொருந்தவில்லை. ஒரு ஜனநாயகப் பண்பற்ற ஒரு காரியமாக சர்வாதிகாரத் தன்மை கொண்டவையாக அமைந்துள்ளது. என்பதைக் கூற விரும்புகிறேன்.

வெண்ணை திரண்டு வருமுன் தாழி உடைத்த கதையாக சமாதானப் பேச்சுக்கள் தற்போது நங்கூரமிடப்பட்டுள்ளது. இனிமேல் சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட வேண்டு மானால் அம்மாவின் ஆசி கட்டாயம் தேவை. இப்படிப் பொதுஜன ஐக்கிய முன்னணி பிரமுகர்கள் கூறுமளவிற்கு உங்கள் அதிகாரத்தைப் பாய்ச்சியிருக்கிறீர்கள். ரணில் அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்கள் தேக்க நிலையை அடைவதற்கு ஜனாதிபதியின் அதிகாரம் பீறி நிற்கின்றது.

உங்கள் நடவடிக்கை எதிர் காலத்தில் மீண்டும் ஓர் போர் தொடர்வதற்குக் காரணமாக அமைந்து விடுமோ என்ற அச்சம் அனைவர் மனதிலும் குடி கொண்டிருக்கிறது. சும்மா ஒளித்துத் திரிந்த கதிர்காமர் ஊடகவியலாளர் மாநாடு நடத்துகிறார். அடுத்த பிரதமர் யார் மகிந்த ராஜபக்ஷ, மங்கள சமரவீர ஏன் உங்கள் சகோதரனுக்கும் ஆசை அடி மனதில் பூட்டி வைக்க முடியாது கொதிப்பேறி துடிக்கின்றனர். எலிக்குமரணம் பூனைக்குக் கொண்டாட்டம் போல் நீங்கள் அரங்கேற்ற வேண்டிய கூத்துக்குக் களரி தயாரித்து கட்டியகாரன் வரவும் வந்து விட்டது என்றுதான் நினைக்கிறேன்.

மறு முனையில் தமிழினம் மௌனமாகி ஊடகங்களின் செய்திகளுக்கு செவிமடுத்துக் கொண்டு கலங்கி நிற்கின்றனர். அடுத்து வரும் நாட்கள் அபசகுன நாட்களா அல்லது சுப நாட்களா தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு அம்மணி உங்களுக்குத்தான். உங்களுக்கு சுப நாட்கள் தமிழினத்துக்கு அபச குன நாட்கள், அடுத்தது போர் முரசா கொண்டப்போகிறது என ஓங்கி நிற்கும் மக்கள் போர்க் காலத்திற்குத் தயாராக வேண்டிய ஒரு தரும சங்கடமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

சிங்கள தேசத்தின் சிம்மாசனத்திற்குத்தானே நீங்கள் சண்டையிடுகிறீர்கள். எங்கள் படை சண்டையிட்டது எமது இன உரிமைக்காகத்தான். அதை உங்களால் தர முடியாவிட்டாலும் தர முயல்பவர்களின் கரங்களை விலங்கிட நினைப்பது எமது இனத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தியே தீரும்.

ஒரு காலத்தில் சமாதான தேவதையாய் பவனி வந்து தமிழினத்தின் வாக்குரிமையையும் பெற்று சிம்மாசன மேறிய நீங்கள் சாதித்தது என்ன? அம்மணி ஆட்சியில் செம்மணி புதைகுழி எனும் அவப் பெயரை தான் சூட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது. தமிழினத்தின் அதிகாரங்களை சரியாக வழங்க முடியாத நீங்கள் ஆட்சியைக் குழப்பாது, ஒதுங்கியிருக்க வேண்டியது தான் புத்தி சாலித்தனம்.

இங்ஙனம்
அலைமகன்.


# பெண்களின் சீரழிவிற்கு காரணம் ஆண்களா? சினிமாவா?

பெண்களைக் கவிஞர்கள் நிலவுக்கு ஒப்பிட்டுச் சொல்கின்றனர். பெண்களின் ஒவ்வொரு அங்கமும் முன்னோரால் அழகாக வர்ணிக்கப்பட்டுள்ளது. பாரதியார் ‘‘புதுமைப் பெண்’’ என்னும் கவிதைத் தொகுப்பில் இருந்து பெண்ணை அழகாக வர்ணித்துள்ளார். நிமிர்ந்த நடையும் நேர் கொண்ட பார்வையும்என்று கூறியுள்ளார். அது மட்டுமன்றி கற்பைக் காப்பவள் பெண். பல காரியங்களை முன்னின்று நடத்துபவள் பெண்.

அது மட்டுமன்றி பெண்களின் விரும்புவாள். தீய வழிகளில் செல்வதை அறிந்தால் அவள் தன் பிள்ளைக்காக படும் கஸ்டங்கள் தான் ஏராளம்.

பெண்ணானவள் சுயநலம் அற்றவள் பொறுப்புணர்ச்சி உள்ளவளாக கருதப்படுவாள்.

அடுத்து சினிமாத் துறையை எடுத்துக் கொள்வோமானால் இச் சினிமாத் துறையிலும் கூட பெண்களே முன்னணி வகிக்கின்றனர். சினிமாவில் ஒரு புறம் பெண்களை வர்ணித்துப் பாடியுள்ளனர். மறு புறம் பெண்களை இழிவாக நினைத்துத் திரைப்படங்கள் கூட வெளி வந்துள்ளன.



கண்களை ‘‘கயல்விழி ’’ போன்றது என்றும் பெண்ணின் ஒவ்வொரு பல்லும் ‘‘முத்துப் போன்றது’’ என்றும். அவளின் உதட்டை ‘‘கிளியின் சொண்டை’’ ஒத்ததுஎன்றும் கூறியுள்ளார். உலகில் பெண்ணுக்கே முதலிடம் அழிக்கப்படுகிறது. ஒரு பெண் தீய வழிகளில் செல்ல யாரையும் அனுமதிக்கமாட்டாள். இந்த யுகத்தில் பல காரணங்களால் பெண்களின் வாழ்க்கை சீரழிந்து விடுகிறது.

முற்காலத்து பெண்களைப் போல் இந்தக் காலத்துப் பெண்கள் வீட்டிலே அடைந்து கிடக்க முடியாது. நவீன யுகத்தில் ஆண்கள் பெண்களின் வாழ்க்கையை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக அல்ல அவர்களை திருமணம் செய்கின்றனர். அவர்கள் அழசில் மயங்கியே திருமணம் செய்கின்றனர்.

முற்காலத்தில் ஆண்களுக்கு நிகராக பெண்களை மதிக்கவில்லை. ஆனால் இந்தக் காலத்தில் ஆண்களுக்கு நிகராக பெண்களை மதிக்கின்றனர். இந்தக் காலத்தில் பெண்கள் தொழிலில் ஈடுபடவதை ஆண்களை முந்திக் கொண்டிருக்கின்றனர். தற்காலத்தில் நூற்றுக்கு தொண்ணூறு சதவீதமான பெண்கள் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

முற்காலத்தில் ஆண்கள் பெண்களை இழிவாக மதித்தனர். ஆனால் இக்கால ஆண்கள் அப்படி நினைக்காதளவு பெண்கள் வளர்ச்சி அடைந்து விட்டனர். ஒரு பெண் தனது திருமணத்தின் பின் குழந்தையை நல் வழியில் இட்டுச் செல்கின்றாள். தாய் ஒரு பிள்ளையை நல்வழியில் செல்வதையே

திரைப்படங்கள் கூட வெளி வந்துள்ளன. உதாரணமாக முற்காலத்து சினிமாவை எடுத்துக் கொள்வோமானால் முற்காலத்து சினிமாப் பாடல்கள் ஒருவரின் கருத்தை வெளிப்படுத்துவதாக அமைந்தன.

ஆனால் இந்தக் காலத்து சினிமாவில் அர்த்தமும் இல்லை கருத்தும் இல்லாமல் வெளிவருகின்றன. முற்காலத்துப் பாடல்கள் எல்லாம் கர்நாடக சங்கீதத்தை முதன்மையாக வைத்து எடுக்கப்பட்டன. ஆனால் இக்கால சினிமாப் பாடல்களோ கர்நாடக சங்கீதத்தையே கேலி செய்வதாக அமைந்துள்ளன.

முற்காலத்து புலவர்கள் பெண்களை கண்டால் ‘‘கையெடுத்து கும்பிட வேண்டுமே தவிர கை தட்டிக் கூப்பிடும்’’ அளவிற்கு இருக்கக் கூடாது என்றனர். முற்காலத்து பெண்களைப் பார்த்தால் கை யெடுத்து கும்பிட வேண்டும் போல் இருந்தது. ஆனால் இந்தக் காலத்து பெண்கள் அதற்கு எதிர் மாறாக கை தட்டி கூப்பிடும் அளவிற்கு வளர்ந்து விட்டனர்.

மேலைத் தேச நவ நாகரிகத்தால் பெண் சமுதாயமே சீரழிகின்றது. பெண்கள் சீரழிவதற்கு ஆண்கள் மட்டும் காரணம் என்று கூறிவிட முடியாது. பெண்கள் சீரழிவதற்கு சினிமாவும் காரணமாக இருக்கின்றது. ‘‘பெண்கள் அடிமைத்தனம்’’ என்பது இந்த நவீன யுகத்தில் ஒழிக்கப்பட வேண்டும். ‘‘வாழ்க பெண்கள் வளர்க பெண் சமுதாயம்’’

மகாலிங்கம் வித்தியாஜினி,
மட்/ புனித சிசிலியா பெண்கள் தேசிய பாடசாலை.

## பெண்மைதான் உலக சக்தி

நாகரிகம் எனும் போர்வையிலே
நாடகம் ஆடாதே பெண்மயிலே!
நாளெல்லாம் அறிவை நீ பெருக்கிடம்மா
நாட்டி[illegible]னிலே உன் புகழ் சேர்த்திடம்மா!

பாதகஞ் செய்யும் பாவிகள்
பாவை உன்னைப் பாழாக்க
பருந்து போல் பார்த்து நிற்கும்
பாதையைத் தவிர்த்திடு பெண்ணே!

காலங்கள் கடந்தாலும் கலியுகம் தோன்றினாலும்
கன்னிமை மாறாது- அது என்றும்
பெண்ணிமைக்கு பெருமை சேர்க்கும்
என்பதை
கண்ணியத்துடன் உணர்த்திடு பெண்ணே!

நாளை நங்கை கையில் உலகு என்ற
நாமத்தை நாவில் நிறுத்தி
நாற்குணம் எனும் நல்ல சத்துடன்
நாடு போற்ற வாழ் பெண்ணே!

பெண்மையே உலகத்தின் சக்தி என்ற
உண்மையை உலகிற்கு காட்டிடடி!
உத்தமியாய் என்றும் வாழ்வினிலே
பத்தினியாக நீ வாழ்ந்திடம்மா!

அ. வாசுகி,
தம்பிலுவில்.

## அரிவையர்அலை



## பலாப்பழத்தின் மகிமை



புரதச்சத்து அதிகமாகக் கொண்ட பழம் பலாப்பழமாகும். இதற்கு ஆயுளை அதிகரிக்கும் சக்திஉண்டு. கை, கால் மூட்டுகளுக்கு வலு சேர்க்கவல்லது. பசும் பாலில் பலாச்சுளைகளை உறவைத்து சாப்பிட்டால் மலேரியா, வாத நோய்கள் குணமாகும்.

பலாச்சுளைகளை வெயிலில் காயவைத்து நெய்யில் வறுத்துச் சாப்பிட்டு வந்தால் மெலிந்த உடல் பருமனாகும். பலாப் பிசின் கால்களில் வரும் வெடிப்புகளுக்கு சிறந்த மருந்தாகக் கருதப்படுகின்றது.

## சொக்கிளட் ஐஸ்கிறீம்

(10-15 பேருக்கு)

### தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| ரின்பால் | - 1ரின் (375g) |
| பால்மா | - 2சுண்டு நிரப்பி (400g) |
| கொக்கோ பவுடர் | - 3மே.க. |
| தண்ணீர் | - 5ரின் (பால் ரின்னினால் அளக்கவும்) |
| சீனி | - (300g) |
| சோடா விரும்பியது | - 1போத்தல் (4டம்ளர்) |
| ஜெலற்றின் | - 1மே. க. |
| வனிலா | - 2மே.க. |
| கொதிநீர் | - 1/2 டம்ளர் |
| சிறிதாக வெட்டிய கஜூ | - 100g |



### செய்முறை

ஜெலற்றினைப் பாத்திரத்தில் இட்டு 1/2 டம்ளர் கொதி நீர் விட்டுக் கலந்து பிறிதொரு கொதி நீருள்ள பாத்திரத்தில் அமிழ்த்தி வைத்துக் கொண்டு ஜெலற்றின் முற்றாகக் கரையும் வரை கரைத்து வைத்துக் கொள்க.

பாத்திரத்தில் ரின்பால், பால்மா, கொக்கோ பவுடர், சீனி என்பவற்றையிட்டு நன்கு கலந்து கொண்ட பின்பு தண்ணீர், சோடா என்பவற்றை விட்டு முற்றாகக் கரையும் வரை கரைத்து வைத்துக் கொள்க.

பின்பு இக்கலவையில் ஜெலற்றின் கலவை வனிலா, என்பவற்றை விட்டுச் சேர்த்து முட்டையடி கருவியால் நன்றாக அடித்துக் கொண்ட பின்பு குளிர்சாதன பெட்டியில் 2மணி நேரம் வைத்தெடுத்து மீண்டும் நன்றாக அடித்துஇறுக மூடி குளிர்சாதனப் பெட்டியில் வைத்து இறுகியதும் எடுத்து ஐஸ்கிறீம் பரிமாறும் கிண்ணங்களில் நிரப்பிசொக்கிளற் சோசை மேலே ஒரு கரண்டியளவு ஊற்றி வறுத்த கஜூவைத் தூவிக் கொண்ட பின்பு பரிமாறலாம்.

இராஜதுரை உமாவணி,இராஜதுரைக் கிராமம், ஆரையம்பதி- 03

## மருத்துவக் கண்டு பிடிப்புகள்

1) வில்லியம் ஹார்வே - குருதிச் சுற்றோட்டம்.
2) பிறீஸ்லி - பிராண வாயு
3) றென்ட்ஜென் - X கதிர்
4) கொச் - நெருப்புக் காய்ச்சல்
5) மேரி கியூரி அம்மையார் - றேடியம்
6) சேர் ஜேம்ஸ் ஸிம்சன் - குளோரோபோம்
7) றெனால்ட் றேஸ் - மலேரியா கிருமி
8) ஹொச் - காசநோய் கிருமி
9) கிளேட்ஸ் - கண்டக் கரப்பான் கிருமி
10) றொபட் ஹொக் - கொலரா நோய் கிருமி

ஞா.பவதாரிணி
தரம்- 09,மட்/மண்டூர் இ.கி.மி

## மஞ்சள்

சமையலில் எல்லாவற்றிலும் சேர்க்கும் மஞ்சள் உடலின் வியர்வை நாற்றத்தைக் கட்டுப்படுத்தும். தோலுக்குப் பொன்னிறத்தைப் கொடுப்பதோடு தோலை மிருதுவாக்கும்.


பூசுமஞ்சள் மென்மையைத் தந்து உள ரீதியாக ஆண்களுக்கு விருப்பு ஏற்படுத்தும். தேமல், படர் தாமரை போன்றவைகளைக் குணமாக்கும்.

## மாமியாரா, மருமகளா?

பல இடங்களில் அன்று தொட்டு இன்று வரை பெண்களின் மத்தியில் கேள்விக்குள்ளான கேள்விதான் மாமியாரா மருமகளா? இக் கேள்விக்குப் பதில் அளிக்க முடியாத சமூதாயம் உண்டு. பதிலளிப்பது எப்படி? பெண்கள் அடைக்கப்பட்டு வாழ்ந்த காலம் முடிந்து இன்று அவர்களால் ஆக்கப்பட்டு வருதல் எவ்வளவோ.

ஆனாலும் தற்போது பெண்களுக்கிடையில் இடையூறு விளைவிப்பதாக தான் மாமியாரா மருமகளா? எனும் கேள்வி அமைகின்றது. இக் கேள்வியை உற்று நோக்கும் போது மாமியாரும் பெண்தான் மருமகளும் பெண்தான். மாமியார் மருமகள் எனும் இருவருக்கிடையில் சலிப்புத் தன்மை ஏற்பட நிச்சயம் கூடுதலாக ஒரு ஆண்தான் காரணமாக அமைய முடியும். ஏனெனில் அன்பு விலை மதிக்க முடியாதது. அது எல்லோருக்குமே சொந்தமானது அதற்கு அடிமையாவது அதிகம் பெண்கள் தான்.

ஒரு பெண் தன் புகுந்த வீட்டிற்குப் போகும் போது அதுவும் ஒரு தாய் வீடு என்பதை நினைக்க மறுக்கிறாள். அதே போல் தன் வீட்டிற்கு வருவது ஒரு மகள் என அந்த மாமி ஏற்க மறுக்கிறாள். மருமகளை மகளாக பார்க்க மறுப்பதே காரணம். இதன் மத்தியில் மாட்டிக் கொண்டு தவிப்பது ஆண்கள் தான். உதாரணமாக இதற்கு ஒரு பழமொழி எடுத்துக் காட்டாக அமைகின்றது. ‘‘மாமியாரை மெச்சிய மருமகளும் இல்லை.
மருமகளை மெச்சிய மாமியாரும் இல்லை.’’ இந்த கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடியதாக அமைகின்றது. சற்று பார்க்கப் போனால் தவறு இருவருக்கும் இடையிலும் இல்லை. இதற்கு



காரணம் அளவுக்கு மீறிய அன்புதான். ஒரு தாய் தன் மகனில் அதிக அன்பு வைத்திருந்தால் அவன் மணம் முடித்த பின்பு அந்த அன்பை மருமகள் தட்டிக் கொண்டு போய் விடுவாள் என்ற தவறான எண்ணத்தை தவிர்க்க மறுக்கிறாள். அதே போல் மருமகள் தன் கணவன் தன் அன்பை எங்கு புரிந்து கொள்ளாமல் போய் விடுவாரோ என்று தாயிடம் இருந்து பிரிக்கப் பார்க்கும் பெண்களும் உண்டு. இது மிகத் தவறு. இதை முற்றாக ஒளிக்க வேண்டுமானால் பெண்களே உங்கள் கையில் தான் உள்ளது. ஒவ்வொரு பெண்ணும் தன்மாமியார்ரைத் தாயாக நினைக்கும் பட்சத்திலும் ஒவ்வொரு பெண்ணும் தன் மருமகளை மகள் என நினைக்க முன் வந்தால் சமூதாயத்தின் இடையிலான மாமியர்ரா மருமகளா? எனும் கொடுமையான கேள்விக்கு முற்றுப் புள்ளி வைக்கலாம். பெண்களே யோசிக்கிறீர்களா? யோசிக்க முயலுங்கள்.

க. உஷா. அன்புவழிபுரம்
திருகோணமலை.

# புலம்பெயர்ந்த குடும்பங்களின் தொடர்கதையாகும் நிழல் யுத்தம்

சூரிய உதயத்தையோ, அல்லது அஸ்தமனத்தையோ காண முடியாமல் பல புலம் பெயர் தமிழர்களின் வாழ்வு தொழிற்சாலைகளுக்குள்ளும், உணவு விடுதிகளுக்குள்ளும் கரைந்து கொண்டிருப்பது மனதைப் பிசையும் உண்மை. நிழல்யுத்தம் குறும்படம் தொடங்கிய போது எந்த வித ரம்மியமான சூழ்நிலையும் இல்லாத இயந்திரங்களின் நடுவே வேலை செய்யும் எம்மவர் ஒருவரைப் பார்த்ததும் மெல்லிய சோகத்தனம் மனத்தில் தோன்றத்தான் செய்தது. ஆனால் எதிர்பார்த்த மாதிரி இல்லாமல் கதை சற்று வேறு கோணத்தில் திரும்பியது. ராதிகா வானொலியில் பாட்டைப் போட்டு விட்டுச் சமைக்கும் விதமும், கறியை கையில் ஊற்றி சுவை பார்க்கும் விதமும் மிகவும் யதார்த்தமாகவும், ராதிகாவின் முகம் ஏதோ ஒன்றை இழந்த அதிருப்தியான தன்மையைக் காட்டுவதாகவும் அமைந்திருந்தன. குடும்பத்தில் வரும் குழப்பங்களுக்கு சிறு பொறியொன்றே போதும். இங்கு அது நண்பனின் வடிவில் பஞ்சாபியாக வந்திருந்தது. ஆனாலும் ஒரே ஒருநாள் வரும் பஞ்சாபி மட்டும் மனதை அந்தகாரத்துக்குள் தொலைத்து விட்டுக் குமுறி, கறியை எரிய விடுமளவுக்குப் பாரதூரமானதாக இருக்காது. அந்த ஒரு சம்பவம் ஏற்கெனவே அங்கு சந்தேகம் வெறும் பொறியாக இல்லாமல் தீப்பிடிக்கவே தொடங்கியிருப்பதற்குத் தாரமாக அமைந்திருந்தது. புரிந்துணர்வு என்ற ஒன்றுக்கு வருவதற்கான புரிதல் நிலைக்கே அவகாசம் இல்லாமல், அவர்களையும் தாண்டிய குடும்பச் சூழ்நிலைகளால் பணம் என்ற ஒன்றைத் தேடி வேலை வேலை என்று ஆண் திரியும் போது, ராஜவாழ்க்கை, காதல் கணவன்... என்ற கற்பனைக் கோட்டைகளைக் கட்டிக் கொண்டு வந்து தனிமையே துணையாகி, அதனால் ஏற்படும் விரக்தியில் பெண் வாடிக் கொண்டிருப்பது.. புலத்தில் இன்று நேற்றல்ல. இது தொடர்கதையாய்.. தொடர்கிறது. அதன் ஒரு பதிவுதான் நிழல்யுத்தம்.

இயந்திரங்களின் நடுவே இயந்திரமாகிப் போனவர்தான் பாலகிருஸ்ணன். அவரை மணம் செய்து கொள்ள என்று தாய்நிலத்திலிருந்து வந்து அவரோடு வாழ்ந்து கொண்டிருப்பவர் ராதிகா. இவர்களுக்கிடையேயான நிழல்யுத்தம் எமது புலம் பெயர் சமூகத்தின் ஒரு பிரதிபிம்பம். இந்தப் படம் பார்த்து ரசிப்பதற்கான வெறும் குறும்படமாக மட்டுமாக இல்லாமல், புலம்பெயர்ந்த குடும்பங்களில் தொடர்கதையாகும் நிழல்யுத்தங்களின் காரணங்களைக் கண்டு திருந்திக் கொள்ள ஏதுவான கருவியாகவும் இருக்குமென நம்புகிறேன். தம்மைத்தாமே புரிந்து கொள்ளாத.. திருத்திக் கொள்ளக் கூட முயலாத நிலையில் உள்ள தன்மைகள் கொண்ட பாத்திரங்களை இப் படத்தில் கண்டு கொள்ள முடிந்தது. இது ப்ா்ப்பவர்கள் மனதில் சிந்தனையைத் துாண்டி அவர்தம் பிழைகளை உணர வைக்குமென்றே நம்புகிறேன். உதாரணமாக பாலகிருஸ்ணன் களைத்துத்தான் வீடு திரும்புகிறார். இல்லை என்று சொல்வதற்கில்லை. அவருக்கு இந்த வாழ்க்கை சில வருடப் பழக்கமாகி விட்டது. ஆனால் அவர் மனைவி ராதிகாவோ சுற்றம், சூழலை விட்டு இப்போதான் வந்திருக்கிறாள். கணவனில் இருந்து தனிமை வரை அத்தனையும் புதிது. அவள் மனநிலையை உணர்ந்து கொள்ளும் தன்மையில் பாலகிருஸ்ணன் இல்லை. தனியே பஞ்சாபி விடயத்தைப் பார்த்து விட்டு அவளைத் திட்ட முடியாது.

நான் மேலே குறிப்பிட்டது போல, ஒரே ஒருநாள் வரும் பஞ்சாபி மட்டும் மனதை அந்தகாரத்துக்குள் விட்டுக் குமுறி, கறியை எரிய விடுமளவுக்குப பாரதுாரமானதாக ஒரு போதும் இருக்காது. அந்த ஒரு சம்பவம் ஏற்கெனவே அங்கு சந்தேகம் வெறும் பொறியாக இல்லாமல் தீப்பிடிக்கவே தொடங்கியிருப்பதற்கு தாரமாக அமைந்திருக்கிறது. அதற்கான காரணம் எங்கே என்று தெரிய வேண்டும். அவளுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தக் கூடிய வேறு சம்பவங்கள் அங்கு நடந்திருக்க வேண்டும். பாலகிருஸ்ணன் அதற்கான சரியான விளக்கங்களை அங்கு அவளுக்குக் கொடுக்காதிருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் கள்ளம் பிடிபட்டுப் போச்செண்டு.. என்ற வார்த்தைகளை அவள் கொட்டியிருக்கத் தேவையில்லை. வேலையிடத்தில் அவன் நாய் மாதிரி... இங்கை வந்தால் நீ வெறி பிடிச்ச நாய் மாதிரிக் கத்திறாய்... இவை பல ஆண்களின் வாயில் இருந்து வரும் அநாகரிகமான வார்த்தைகள்தான். ஆனால் அந்த வார்த்தைகள் எந்தளவு துாரத்துக்கு ஒரு மனைவியைப் பாதிக்கும் என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்கத். தவறி விடுகிறார்கள். நண்பன் வீடு மாற உதவி செய்தவன் மனைவி காத்திருப்பாள் என்பதை எண்ணியிருந்தால் ஒரு தடவை தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு தனது நிலையை அவளுக்கு விளக்கியிருக்கலாம். நான்கு சுவர்களுக்குள்ளான தன்னந்தனியான அந்தக் காத்திருப்பு என்பது அந்தப் படத்தில் காட்டியதையும் விட- மனதில் அதி விரக்தியையும் வேதனையையும் வெறுப்பையும் கொடுக்கக் கூடிய ஒன்றாகும். போகும் போதாவது இன்று நண்பனுக்கு உதவி செய்ய வேண்டிய பிரச்சினை ஒன்று உள்ளது. நான் வரத் தாமதமாகலாம் என்ற முன்னறிவிப்பைக் கொடுத்துச் சென்றிருக்கலாம். எனக்கு மட்டுந்தான் பிரச்சினை. நீ இவைகளை அனுசரி என்பது போலல்லவா பாலகிருஸ்ணனின் செயல்கள் அமைந்துள்ளன.



இப் படத்தின் மூலம் ஆண்கள் இப்படியான தவறுகள் பலதைத் தாம் செய்கிறோம் என்பதை உணர்ந்து தம்மைத் தாமே திருத்திக் கொள்வார்களேயானால் அதற்கான நன்றி அஜீவனையே சென்றடையும். வேலை முடிந்து வீட்டுக்கு பாலகிருஸ்ணன் வந்த போது கறி எரிந்து சட்டியும் கரியாகத் தொடங்கியிருந்தது.

சந்திரவதனா செல்வகுமாரன்
ஜேர்மனி.

பாலகிருஸ்ணனின் தலையாட்டல் இது இன்றைக்கு மட்டுமல்ல, அடிக்கடி நடந்து அவனை வெறுப்பூட்டி யிருக்கிறது என்பதைப் புரிய வைக்கிறது. அந்தச் சந்தர்ப்பத்திலும் சரி, காத்திருந்து காத்திருந்து அலுப்பாகி, வெறுப்பாகி,... வெளிச் செல்லும் உடையுடனேயே படுக்கையில் கோபமாகப் படுத்திருந்த மனைவியிடம் சாட்டுச் சொல்லும் போதும் சரி பாலகிருஸ்ணனின் நடிப்பு யதார்த்தமாக அமைந்திருந்தது. ஆனால் கட்டிலில் சாட்டுச் சொல்லும் உறவு சற்று எட்ட நிற்பது போலவே தோன்றுகிறது. அந்தச்சாது கூட அவர் சந்தர்ப்பத்தில் பாலகிருஸ்ணன் இன்னும் சற்று ஆதரவாக ராதிகாவை நெருங்கியிருக்கலாம். காலை அவள் கண்ணாடி கழுவிக் கொண்டிருந்த நேரத்திலிருந்து இந்த நிமிடப் பொழுது வரை அவள் தன்னந் தனியாகத்தான் அந்த

## திரை பிம்பங்கள்

வீட்டில் இருந்திருக்கிறாள். தொலைபேசி கூட இயங்கவில்லை. அவளுக்கு இப்போ வேண்டியது பாலகிருஸ்ணனுக்குக் கிடைக்க வேண்டிய உடல் ஆறுதலை விடப் பன் மடங்கு அதிகமான மன ஆறுதலும் அன்பான அரவணைப்பும். இப்படத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே இதை ஒவ்வொரு பார்வையாளனாலும் புரிந்து கொள்ள முடியும்.

ஒருவரின் தவறை மீண்டும் மீண்டும் ஒரு குற்றச் சாட்டுப் போல சுட்டிக் காட்டுவதை விட ஒரு கதை மூலமோ, படம் மூலமோ எடுத்துக் காட்டிப் புரிய. வைப்பது மிகவும் ஆரோக்கியமானதும் பயனானதும். அந்தப் புரிவில் அவர்களுக்குத் தம்மைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் நிட்சயம் தோன்றும். அந்த வகையில் அஜீவனின் இந்தப் படைப்பு புலம் பெயர் சமூகத்துக்குக் கிடைத்த ஒரு அரிய படைப்பு. இன்றைய காலத்தின் ஒரு பதிவும் கூட. இதில் ஒரு பெரிய பிரச்சினை சில நிமிடங்களுக்குள் மிகவும் யதார்த்தமாக முன் வைக்கப்பட்டுள்ளது. படத்தின் மற்றைய விடயங்களை ஆராய்ந்தால் இயக்கம், தொழில் நுடபம் போன்ற விடயங்களில் மிகுந்த அவதானம் செலுத்தப் பட்டிருப்பது தெரிகிறது. தேவையற்ற விரிசல்களோ, ஒடிசல்களோ ஏற்படாதவாறு கன கச்சிதமாக வெட்டல்களும், ஒட்டல்களும் செய்யப் பட்டுள்ளது. இது இந்தத் துறையில் அஜீவனுக்குள்ள அனுபவத்தையும் திறமையையும் காட்டுகிறது. கண்டிப்பாக அவரைப் பாராட்ட வேண்டும் என்றே தோன்றுகிறது.

உரை வடிவமும் எந்த வித செயற்கையும் கலக்காமல் மிகவும் யதார்த்தமாகவே அமைந்துள்ளது பாராட்டத்தக்கது. காரிலே போகும் போது இப்படிச் சண்டை போடுகிறார்களே..! ராதிகா இந்தக் கட்டத்தில் பொறுமை காக்காலாமே..! ஒரு பெரிய விபத்துக்கு இது வழியாகலாமே..! என மனசு அந்தரப் படுகையில் விபத்து நடப்பதாகக் கனவு-நன்றாகவே அமைந்துள்ளது. இன்னும் இப் படத்துக்குள் நிறையவே தேடலாம். புரியலாம். படத்தின் வெற்றிக்குப் பாத்திரமான ஒவ்வொரு படைப்பாளிக்கும் சமூகத்தின் சார்பாக நிறைந்த பாராட்டுக்கள்.

அஜவனிடமிருந்து சமூகப்பிரக்ஞை நிறைந்த இப்படியான படங்கள் இன்னும் வரும் என எதிர் பார்க்கிறேன்.

---

தமிழ் அலையே......
நீ இளைய இதயங்களின்
இளைய நிலா......
நீ பிறந்ததும் தான்
எங்கள் கண்களும்
திறந்து கொண்டன....
உள்ளத்திலுள்ள ஊமைகளாய்
உறங்கிக் கிடந்த
உணர்வுகள்மாசுதட்டி
புதுப்பிக்கப்பட்டது.
உன் பிறப்பில் தான்......
புதுப் புதுத் தகவல்களைக்
கண்டறியாப் புதுமைகளை
கண்டறிந்து காவி வந்து
எமக்கு உன் சேவையை
எம் தேவையாக்கிவிட்டாய்....
இதய நிலவே... நீ
மலரும் ஒவ்வொரு நாளும்
புதுமைகள் பல படைத்து
புது நிலவாய் இத்தரணியிலே
இருளகன்று அலைவீச...
இவளது இதயங் கனிந்த நல்
வாழ்த்துக்கள்.

*திருமதி சுதர்சன்- சாந்தி, கடற்கரை வீதி*
*தாழங்குடா- 03*

---

என் அன்பிற்கினிய!
தமிழ் அலைக்கு வரவேற்பு
உன் வளமான வளர்ச்சியிலே பூரிப்பு

பிழையில்லா உன்னுடைய பதிப்பு
தமிழ் எமக்கே உன் மேல் மதிப்பு
வருவாய் வருவாய் என்று துடிப்பு
வந்து சேர்ந்து விட்டால் மலைப்பு

இவை அனைத்தும் உன்னுடைய
இனிப்பு
என்றும் நீ சுமந்துவரும் ஒவ்வொரு
ஆக்கமும்வெரி சூப்பர் உன்
வளர்ச்சி மேலும் உயர வேண்டும்.
என்று வாழ்த்துகிறேன்.

*உனது வாசகி. சி. சாந்தினி. கன்னன்குடா.*

---

தமிழர்களின் உணர்வலையாகிய தமிழ் அலைக்கு எனது முதல் வந்தனம் உரித்தாகட்டும்.

நீ வாரா வாரம்சுமந்து வரும் காத்திரன் பதில் சிறுவர் சிகரம், குறுக்கெழுத்துப் போட்டி, கவிதைக்களம், அலையின் பார்வை, அரிவையர் அலை, மருத்துவ அலை என்பன சூப்பரோ சூப்பர்.

உன் புகழ் எட்டுத் திக்கிலும் தொடர்ந்து பரவ என் மனமார்ந்த வாழ்த்துக்கள்

*எஸ். சிவரமணன், மட்/ மாமாங்கேஸ்வரர் வித்தி, மாமாங்கம், மட்டக்களப்பு.*

## வாசகர் இதயம்

தமிழ் அலையின் பிரிய தோழி

தமிழ் அலையின் ஆசிரியர் அவர்களுக்கு தமிழ் அலையே நேசிக்கும் தோழி எழுதுவது ஆசிரியர்களே பல தடவைகள் என் கவிதையும் உங்கள் அலையில் பிரசுரிக்க வேண்டும்என்ற ஆசையில் எழுதி வந்தேன் எதுவும் வெளிவரவில்லை. அதனால் மன வேதனையுடன் எழுதுகிறேன் இம் முறையாவது என் கவிதையும் அலையில் தவழ விட அனுமதி தருவீர் என்ற நம்பிக்கையுடன் வரைகிறேன். ஆர். கோமதி

---

என் அன்பின் தமிழ் அலையே வணக்கம்

தமிழீழத்தில் எழுகின்ற தமிழ் அலையே. தமிழ் மக்களின் உணர்விற்கு உரமூட்டும் தமிழ் அலையே தமிழ் தரணி எங்கும் கடல் அலை போல் தமிழ் அலை எழ தமிழ் மகன் நான் வாழ்த்துகிறேன்.

*இவ்வண்ணம், கே. சேகர்.*
*கதிரவெளி.*

---

## கனடாவிலிருந்து ஒரு விமர்சன மடல்

**முஸ்லிம் மக்கள் ஆயுதம் தூக்குவது சாத்தியமா? எனும் தலைப்பில் 31ஆவது அலையில் சாத்வீகன் எழுதிய கட்டுரைக்கு எமது தமிழ்அலை இணையத்தள வாசகர் எஸ்.கே.சண் கனடாவிலிருந்து எழுதிய மடலினை இங்கே காணலாம்.**

முஸ்லிம் மக்கள் முதலில் ஒற்றுமையில் மலிந்தவர்கள். அத்துடன் வியாபாரிகள். அவர்கள் இலங்கையைப் பொறுத்தவரை இன்னொரு இனத்தை நம்பியே வாழ்கிறார்கள். ஒரு சில முஸ்லிம்கள் ஆயுதத்தைத் தூக்கினால் மிகுதியாக உள்ள முஸ்லிம் மக்கள் தமிழர் பகுதியை நோக்கி நகர்ந்து விடுவார்கள். பின்னர் குரங்கு பாம்பைப் பிடித்த கதையாகிவிடும். இதனை விட இந்திய அமைதிப்படை ஈழத்துக்கு வந்த காலத்தில் முஸ்லிம்களைப் பார்த்து கூறினார்கள் பாகிஸ்தானுக்கு ஓடுங்கள் என்று. இன்று உலகத்திலேயே மக்கள் நின்மதி இல்லாமல் இருப்பதற்குக் காரணம் முஸ்லீம் மக்கள் தான். இது உலகமறிந்த உண்மை. அவர்கள் வீணான கற்பனையை வளர்க்க அவர்களுடைய அரசியல் தலைவர்கள் தான் காரணம். அதேவேளை, அவர்களுக்குத் தலைவனைத் தேர்ந்தெடுப்பதில் பெரிய மோதலே வந்துவிடும். அவ்வாறு தலைமைப் பொறுப்புகளை சில வேளைகளில் தமிழ் குழுத் தலைவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். தற்போதும் அவர்களுடன் இணைந்துதான் தமிழ் பேசும் முஸ்லிம்கள் வாலாட்டுகிறார்கள். இவர்களுடைய ஆயுதப்போராட்டம் என்பது கானல் நீராகத் தான் இருக்கப் போகின்றது. அதேவேளை, தமிழ் மக்கள் பெறும் அனைத்து வசதிகளையும் பெற்றுக் கொண்டுதான் ஆயுதப்போராட்டம் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். தமிழர்கள் கைவிட்டால், சிங்கள மக்கள் அவர்களுடன் சேர்ந்து வாழ மாட்டார்கள். தற்போதைய இராணுவத்தில் முஸ்லிம் இருந்தாலும், தனிப்பட்ட வாழ்க்கையில் தமிழரில் தான் தங்கி 90 வீதமான தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் ஒன்றுக்கு இரண்டு முறை தங்கள் எதிர்காலத்தைச் சிந்தித்து ஆயுதத்தைத் தூக்கினால் என்ன? ஆபத்தை எதிர் கொண்டால் என்ன? அவர்கள் தலைவிதியை அவர்களே தீர்மானிக்கட்டும்.

## வாழ்வியல் பற்றிய வைர வரிகள்

*. உன்னைப் பற்றி உனக்குள்ளே விமர்சனம் செய்; அது உன்னை உயர்த்தும்.

*. உன்னை ஒரு தேசத் துரோகியாக மாற்றாதே.

*. தியாக சிந்தனை படைத்தவன் மனிதருக்குள் தெய்வமாவான்.

*. மனச்சாட்சியின் தீர்ப்பு தெய்வத்தின் தீர்ப்புக்குச் சமமானது.

*. தன்னிடமுள்ள பலவீனங்களைப் பற்றி எவனொருவன் சரியாக அறிகின்றானோ அவன் தான் மாபெரும் பலசாலி ஆவான்.

*. உன்னாலும் முடியும்; முன்னேறு.

*. வாழ்க்கையின் வழிகாட்டலிலும், மனச்சாட்சியின் நெறிப்படுத்தலிலும் பயணிப்பவன் உயர்ந்த ஸ்தானத்தை அடைவான்.

*. பிழை விடுவது பிழை இல்லை. பிழைக்குமேல் பிழை விடுவது தான் பிழையாகும்.

வெல்லபதியான்
எருவில்




## ஊரை ஏமாற்றியவனின் கதை

கந்தப்பன் ஒரு ஊதாரி. அவன் தனது வருமானத்திற்கும் அதிகமாக செலவு செய்பவன். எனவே, பணத்தட்டுப்பாடு ஏற்படும் போதெல்லாம் பொய் கூறி பணம் கடன் வாங்குவான். இவன் அயலவர்களிடம் தனது மனைவிக்குச் சுகம் இல்லை வைத்தியம் பார்ப்பதற்கு



அவசரமாகப் பணம் தேவை என பொய் சொல்லி கடன் வாங்கி விடுவான். பின்பு அதனைத் திருப்பிக் கொடுக்கும் பழக்கம் இல்லை.

ஒரு நாள் இவனது மனைவிக்கு உண்மையிலேயே சுகயீனம் ஏற்பட்டது. வைத்தியம் பார்ப்பதற்கு கந்தப்பனிடம் கையிலோ காசு இல்லை. எனவே, அவன் அயலவர்களிடம் ஓடிச் சென்று கடன் கேட்டான்.

அவர்களோ இது உனது வாடிக்கையான பொய்தான் போ! போ! என விரட்டி விட்டார்கள்.

பாவம் கந்தப்பனின் மனைவி அவனது தீய பழக்கத்தினால் நோயினால் வேதனைப்பட்டாள்.

## சங்க காலத்தில் சில எண்களுக்குத்தூய தமிழ் பெயர்களும் அவ் எண்களும்

| | | |
|---|---|---|
| நெய்தல் | ~ | பத்து |
| குவளை | ~ | நூறு |
| ஆம்பல் | ~ | ஆயிரம் |
| கமலம் | ~ | இலட்சம் |
| வெள்ளம் | ~ | கோடி |

ஜெயம் பிரியா

## முயல்



வெள்ளை முயல் ஓடுது
வேகமாக ஓடுது
குள்ள முயல் ஓடுது
குதித்துக் குதித்து ஓடுது
முத்துப் போன்ற கண்ணினால்
மேலும் கீழும் பார்க்குது
தத்தித் தத்தி விண்ணிலே
தாவிக் குதிக்கப் பார்க்குது
நெட்டையான காதையே
நீட்டி நீட்டி ஆட்டுது
குட்டையான வாலையே
குறுகுறுவென்று ஆட்டுது!

ய.வியுகன்
தரம் -1 மட்/முனைக்காடு வி. வித்தியாலயம்.


## என்னைப்பற்றி

எனது பெயர்:~ பு.லினோசா

நான் மட்/ அரசடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் தரம் 1ல் கல்வி பயில்கின்றேன். எனது அம்மா பெயர் சிவபாக்கியம். எனது அப்பா பெயர் புவனேஷ்வரன். எனக்கு விருப்பமானது நடனம். நான் நன்றாகப் படித்து எதிர்காலத்தில் ஒரு வக்கீலாக வருவேன். இதுவே எனது அம்மா, அப்பாவின் கனவும் கூட. நான் நிச்சயம் இதை நிறைவேற்றுவேன்.

பு.லினோசா,தரம்- 01^மட்/அரசடித்தீவு, விக்னேஸ்வரா வித்தியாலயம்.

## தொழிற்சாலைகளும் அதன் அமைவிடங்களும்



1) கட்டிப்பால் -- பொலநறுவை
2) பால் பதனிடல் -- அம்பேவல
3) லக்ஸ்பிறே பாற்பவுடர் -- வெலிசறை
4) இறப்பர் பால் ---- மாவனல்லை
5) டயர் ---- களனி
6) உருக்கு ---- ஒறுவலை
7) புடவை -- வெயாங்கொட, துலிகிரிய
8) எண்ணெய் சுத்திகரிப்பு- சபுகஸ்கந்தை
9) காகிதம் - வாழைச்சேனை, எம்பலப்பிட்டிய
10) மா ஆலை -- திருகோணமலை
11) ஓட்டுப்பலகை -- ஜின் தோட்டை
12) சீமெந்து-- காங்கேசன்துறை, புத்தளம்.
13) மட்பாண்டம் - ரத்தோட்டை, தங்கொட்டுவ
14) சீனி -- கந்தளாய், கிங்குரானை.

பாக்கியராசா - றேவிகா
தரம் - 11 மட்/தம்பலவத்தை க.வி

## பழமொழிகள்

1) ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.
2) ஆறிய கஞ்சி பழங்கஞ்சி.
3) ஆனைக்கும் அடி சறுக்கும்.
4) காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு
5) வெள்ளம் வரும் முன் அணை கட்ட வேண்டும்.
6) குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.
7) துள்ளுகிற மாடு பொதிசுமக்கும்.
8) இளமையில் கல்வி சிலையில் எழுத்து.
9) புத்திமான் பலவான்.
10) காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.

பு.சதிஸ்குமார், தரம் - 04
புதுக்குடியிருப்பு.

## விடுகதைகளும் விடைகளும்

1) மாறி மாறி வருவது வழமையாக வருவது அது என்ன?
2) வானில் இருந்து பூமிக்கு வந்த வெள்ளிக்கம்பி தரையில் பட்டதும் தாவி ஓடுதே?
3) இருந்தால் இன்பம் தரும் வங்கியில் இட்டால் குட்டி தரும். அது என்ன?
4) வளைந்து நெளிந்து செல்வான் வழி எங்கும் தாகம் தீர்ப்பான் அவன் யார்?
5) வீட்டைத் தூக்கிய படி வீதி வீதியாகப் போவான் அவன் யார்?
6) தும்மலுக்கு வெடிக்கும் துப்பாக்கி யாரையும் சேதப்படுத்தாத துப்பாக்கி அது என்ன?

விடைகள்
1) இரவு,பகல்
2) மழைத்துளி
3) பணம்
4) நதி
5) ஆமை
6) மூக்கு

சோ.சுஜீதன்
அ.த.க பாடசாலை
திருக்கோவில்.



| நீர்வீழ்ச்சி | உயரம் (M) | அமைந்துள்ள நதிகள் |
|---|---|---|
| 1) பப்பரகந்த | 240 | கிருந்தி ஓயா |
| 2) குருந்து ஓயா | 188 | மகாவலி கங்கை |
| 3) தியலும | 170 | கிருந்தி ஓயா |
| 4) கிருத்தி அல்ல | 165 | களுகங்கை |
| 5) றம்பொட | 199 | மகாவலி கங்கை |
| 6) லக்ஷபான | 114 | களனி கங்கை |
| 7) அபர்டின் | 90 | மகாவலி கங்கை |
| 8) டெவொன் | 85 | மகாவலி கங்கை |
| 9) துன்கிந்த | 576 | மகாவலி கங்கை |
| 10) எல்பின் | 55.1 | மகாவலி கங்கை |
| 11) மான வெல | 20 | மகாவலி கங்கை |
| 12) இராவணெல்ல | 07 | கிரிந்தி ஓயா |

மகேஸ்வரன் சுகன்யா மட்/ புனித சிசிலியா பெண்கள் தேசியபாடசாலை

## அபிவிருத்தியடைந்த நாடுகள்

1) அலஸ்கா
2) கனடா
3) ஐக்கிய அமெரிக்கா
4) கிரீன்லாந்து
5) ஐஸ்லாந்து
6) நோர்வே
7) ஸ்வீடன்
8) பின்லாந்து
9) டென்மார்க்
10) பெல்ஜியம்
11) நெதர்லாந்து
12) ஜேர்மனி
13) ரஷ்யா
14) போலந்து
15) பிரான்ஸ்
16) ஸ்பேன்
17) போர்த்துக்கல்
18) இத்தாலி
19) யூகோஸ்லாபியா
20) ஒஸ்ரியா
21) ஹங்கேரி
22) யப்பான்
23) நியூஸ்லாந்து
24) அவுஸ்ரேலியா
25) ஆர்ஜன்டீனா

## அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள்

இலங்கை
இந்தியா
சீனா
ஈரான்
ஈராக்
அல்ஜீரியா
கினியா
செட்
உகண்டா
கொங்கோ
சிம்பாபே
கோதமாலா
கொலம்பியா
பீரு
பொட்ஸ்வானா
ஹோன்குராஸ்
வெனிசியுலா
கொஷ்டாரிக்கா
பிரேஸில்
சுமாத்ரா
கென்யா
உருகுவே
இக்கதோர்
யேமன்
கானா

கி.நிருபினா தரம் - 11
மட்/வெல்லாவெளி, க.ம.வி



## தெரிந்து கொள்ளுங்கள்

1) 350பாகை சுற்றக் கூடிய பறவை எது?
ஆந்தை
2) உலகில் மிக நீளமான நாக்கு எதற்கு உண்டு?
நீல நிற திமிங்கலம்
3) நாக்கு இல்லாத மிருகம் எது?
முதலை
4) டொனிங் துணியை அறிமுகப்படுத்திய நாடு எது?
பிரான்ஸ்
5) முதன் முதலாக தேசியகீதம் தோன்றிய நாடு எது?
ஜப்பான்
6) மனித உடலில் வியர்வை இல்லாத பகுதி எது?
உதடு
7) இந்தியாவின் தேசிய பறவை எது?
ஆண்மயில்

ஆர்.அமலரஞ்சனி,
புதூர், மட்டக்களப்பு.

அழியாச் செல்வம்

# 5ம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான வினாக்களும் விடைகளும்

## புலமை துரித மீட்டல் 2003
## வினாத்தாள்-04
## பகுதி-02

* பின்வரும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக?

*இடர் வரும் போதும் -உள்ளம்*
*இரங்கிடும் போதும்*
*உடன் பிறந்தவர் போல் -மாந்தர்*
*உறவு கொள்வாரப்பா*

*ஓடும் உதிரத்தில் -வடிந்து*
*ஒழுகும் கண்ணீரில்*
*தேடிப் பார்த்தாலும் - சாதி*
*தெரிவதுண்டோ அப்பா?*

*நன்மை செய்பவரே - உலகம்*
*நாடு மேற்குலத்தார்*
*தின்மை செய்பவரே - அண்டித்*
*தீண்ட ஒண்ணாதார்.*

(1) இப் பாடலைப் பாடியவர் யார்?

* *ஒத்த கருத்துச் சொற்கள் தருக.*

2) (1) இடர் -
(2) உள்ளம் -
(3) உடன் பிறந்தவர்-
(4) மாந்தர் -
(5) உதிரம் -

3) *எதிர்க்கருத்துச் சொற்கள் தருக?*

1) துன்பம் -
2) உறவு -
3) பாவம் -
(4) தீமை -
(5) சண்டை -

4) *எதிர்ப்பாற் சொற்கள் தருக?*
1) குணவான் -
2) பண்டிதர் -
3) நம்பி -
4) நிபுணன் -
5) செல்வன் -

5) *பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.*

1) மண் + கலம் -
2) ஐந்து + பத்து -
3) பல் + பொடி -
4) கருமை + குவளை -
5) பூ + இதழ் -

6) *பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக?*

1) பாற்குடம் -
2) தோற்செருப்பு -
(3) பாற்சோறு -
4) முட்பற்றை -
5) குளக்கரை -

7) *பின்வரும் ஒருமைச் சொல்லை பன்மை சொற்களாக்குக.*

1) பேசினான் -
2) குடிசைக்கு -
3) புத்தகத்தினுள் -
4) வயல் வெளியில் -
5) தாவர நாற்றில் -

8) *பின்வருவனவற்றுக்குச் சரியான தமிழ்ச் சொற்கள் தருக?*

1) பேக்கரி -
2) பாண் -
3) ஐஸ்கிறீம் -
4) பொலிஸ் -
5) வயது -

9) *பின்வருவனவற்றுக்கு இளமைப் பெயர்களைத் தருக?*

1) பனை -
2) யானை -
3) சிங்கம் -
4) குதிரை -
5) கீரி -

10) *பின்வருவனவற்றுக்கு பிஞ்சுகளுக்குரியபெயர்களைத் தருக?*
1) வாழை -
2) மா -
(3) பனை -
(4) பலா -
(5) தென்னை -

* கடை ஒன்றில் கீழ்க் கண்டவாறு விலைப் பட்டியல் காணப்பட்டது.

**சரணியா பல சரக்குக் கடை**

| இல | பொருட்கள் | அளவு | விலை ரூபா சதம் |
|---|---|---|---|
| 01. | அரிசி | 500g | 14.00 |
| 02. | பருப்பு | 250g | 15.50 |
| 03. | சீனி | 750g | 24.00 |
| 04. | ம.எண்ணெய் | 500ml | 13.00 |
| 05. | புடவை | 100cm | 80.00 |
| 06. | தே.எண்ணெய் | 1L | 62.00 |
| 07. | சன்லைட் | 2 | 31.00 |

மேலே காட்டிய விலைகளுக்குஏற்ப குமாரும், சதீசும் கடைக்குச் சென்று பின்வரும் பொருட்களை வாங்கினர் எனின் அவர்களின் விலைப் பட்டியலைப் பூர்த்தி செய்க?

| பெயர்- குமார் | | | பெயர்- சதீஸ் | | |
|---|---|---|---|---|---|
| பொருட்கள் | அளவு | விலை | பொருட்கள் | அளவு | விலை |
| 11.அரிசி | 750g | | அரிசி | 1kg 250g | |
| 12.பருப்பு | 1250g | | பருப்பு | 2kg | |
| 13.சீனி | 100g | | சீனி | 3kg 600g | |
| 14.ம.எண்ணெய் | $1^{1}/_{2}$L | | ம.எண்ணெய் | $2^{1}/_{4}$L | |
| 15.புடவை | 1m 50cm | | புடவை | 2m 25cm | |
| 16.தே.எண்ணெய் | 750mL | | சன்லைட் | $^{1}/_{2}$ டசின் | |

(17) குமார் பொருட்களுக்கு செலவு செய்த மொத்தப் பணம் எவ்வளவு?


(18) சதீஸ் பொருட்களுக்கு செலவு செய்த மொத்தப் பணம் எவ்வளவு?

(19) சதீஸ் செலவு செய்த பணத்திற்கும் குமார் செலவு செய்த பணத்திற்கும் இடையேயான வித்தியாசம் யாது?

(20) இருவரும் 1000/ = கொண்டு சென்று மேற்காட்டிய பொருட்களை வாங்கினர் எனின் மீதிப் பணம் எவ்வளவு?

* *பின்வருவனவற்றின் பெயர்களை எதிரே எழுதுக?*

(21)
(22)
(23)
(24)
(25)
(26)
(27)



* *சமூகத்திற்கு சரியான சேவை தரும் இடங்களுக்குரிய இலக்கங்களை எதிரே இடுக?*

| சமுகத்திற்கு அவசியம் தேவைப்படுபவை | இலக்கம் | சேவை தரும் இடம் |
|---|---|---|
| 28.வாக்காளர் இடாப்பின் பிரதிஒன்றினைப் பெறுதல் | | 1.கொமிஷல் வங்கி |
| 29.பசளை வகைகளைத் தெரிவு செய்தல் | | 2.நிலஅளவையாளர் திணைக்களம் |
| 30.நற்சான்றிதழ் பத்திரம் பெறல் | | 3.தபாலகம் |
| 31. பிறப்புச் சான்றிதழ் பெறல் | | 4.மின்சாரசபை |
| 32.மருத்துவ அத்தாட்சிப் பத்திரம் பெறுதல் | | 5.மாவட்டத் தேர்தல் ஆணையாளர் அலுவலகம் |
| 33.பாடசாலை விடுதிப் பத்திரம் பெறுதல் | | 6.விவசாயிகள் சேவை மத்திய நிலையம் |
| 34.சேமிப்புக் கணக்கொன்றினை ஆரம்பித்தல் | | 7.கிராமசேவை அலுவலகம் |
| 35.மின்சாரக் கோழாறு சம்மந்தமாக முறையிடல் | | 8.மாவட்ட வைத்திய அலுவலகம் |
| 36.காணிஒன்றினை அளந்து கொள்ளல் | | 9. அதிபர் |
| 37.பதிவுத் தபால் ஒன்றினை அனுப்புதல் | | 10.மாவட்டச் செயலகம் |

* *பின்வரும் கணிதப் பிரசினங்களை விடுவிக்குக?*

(38)

| | | | | |
|---|---|---|---|---|
| N | K | A | N | |
| E | A | K | A | 24 |
| N | E | E | K | 17 |
| 15 | ....... | ....... | ...... | |

39) ROOF என்பதை 2884 எனக் குறிப்பிடலாம் எனின் FLOOR என்பதை
(1)48 882, 46 882, 45 582

(40) அப்பிள் பழம் ஒன்று வாங்கும் பணத்திற்கு இரண்டு தோடம்பழங்கள் வாங்கலாம். ஒரு தோடம்பழம் வாங்கும் பணத்திற்கு இரண்டு வாழைப்பழங்கள் வாங்கலாம்.ஒரு வாழைப்பழம் 1 ரூபா 50 சதம் எனின் அப்பிள் பழத்தின் விலை என்ன?

## விடைகள்

(1) கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை

(2) (1) துன்பம் (2) மனம்/ அகம்/ நெஞ்சம் (3) சகோதரர் (4) மனிதர்/ மக்கள் (5) இரத்தம்/குருதி

(3) (1) இன்பம்/மகிழ்ச்சி, (2) பகை (3) புண்ணியம் (4) நன்மை (5) சமாதானம்

(4) (1) குணவதி (2) பண்டிதை (3) நங்கை (4) நிபுணை (5) செல்வி

(5) (1) மட்கலம் (2) ஐம்பது (3) பற்பொடி (4) கருங்குவளை (5) பூவிதழ்

(6) (1) பால்+குடம் (2) தோல் + செருப்பு (3) பால + சோறு (4) முள + பற்றை (5) குளம் + கரை

(7) (1) பேசினார்கள் (2) குடிசைகளுக்கு (3) புத்தகங்களினுள் (4) வயல் வெளிகளில் (5)தாவர நாற்றுக்களில்

(8) (1) வெதுப்பகம் (2) வெதுப்பி (3) குளிர்களி (4) காவல் துறை (5) அகவை

(9) (1) வடலி (2) போதகம் (3) குருளை (4) குட்டி (5) பிள்ளை

(10) (1) கச்சல் (2) வடு (3) நுங்கு (4) மூசு (5) குரும்பை

| பெயர்- குமார் | | | பெயர்- சதீஸ் | | |
|---|---|---|---|---|---|
| பொருட்கள் | அளவு | விலை | பொருட்கள் | அளவு | விலை |
| 11.அரிசி | 750g | 21.00 | அரிசி | 1kg 250g | 35.00 |
| 12.பருப்பு | 1250g | 77.50 | பருப்பு | 2kg | 124.00 |
| 13.சீனி | 100g | 3.20 | சீனி | 3kg 600g | 115.20 |
| 14.ம.எண்ணெய் | $1^{1}/_{2}$L | 39.00 | ம.எண்ணெய் | $2^{1}/_{4}$L | 58.50 |
| 15.புடவை | 1m 50cm | 120.00 | புடவை | 2m 25cm | 180.00 |
| 16.தே.எண்ணெய் | 750mL | 46.50 | சன்லைட் | 1/2டசின் | 93.00 |
| 17.மொத்தம் | | 306.20 | 18.மொத்தம் | | 605.70 |

(22) 299.50 (20) 88.10

(23) மின் சூழ் (22) மின் சுருள்

(24) கை மின் துறப்பணம் (24) திருகாணித் திருகி

(25) சாந்தகப்பை (26) காற்றுப்பை

(27) அரிவாள் (28) 5

(29) 6 (30) 7

(31) 10 (32) 8

(33) 9 (34) 1

(35) 4 (36) 2

(37) 3 (38)

| | | | | |
|---|---|---|---|---|
| N | K | A | N | 25 |
| E | A | K | A | 24 |
| N | E | E | K | 17 |
| 5 | 16 | 16 | 19 | ..... |

(39) 46882 (40) 6 /=

*வினாத்தாள் 4ன் பகுதி (2) தொடரும்*

ச. ஜெயாகரன்
மட்/ திருப்பழுகாமம் .விபுலானந்தா .
வித்தியாலயம்

சிறுகதை

# எவருக்கு நன்றி சொல்வது

சிவலிங்கம் சுமதி



டிலா அவசர அவசரமாக வீட்டு வேலைகளில் ஈடுபட்டாள்.

அப்பாவுக்குத் தேநீர் ஊற்றிக் கொடுத்த கையோடு காலைக் கடன்களை முடித்துவிட்டு வேலைக்குத் தயாராகினாள்.

அப்போது தங்கை ரஞ்சனாவின் குரல் கேட்டது. நிமிர்ந்து பார்த்தாள்.

''அக்கா ரீச்சர்மார் எல்லோரும் பாசிக்குடா போறாங்க. ஆளுக்கு நூறு ரூபா அறவிடுறாங்க. எனக்கும் போக விருப்பமா இருக்கு. ஆனா பணம்தான் இல்ல. நீங்க தருவீங்களா? '' என்றதும் டிலா சற்று யோசித்தாள்.

அவளிடம் அப்போதைக்குப் பணம் இல்லை. அவள் தலைவலிக்குக் கூட மாத்திரை வாங்க சில்லறை கூட இல்லை.

தங்கையின் முகத்தைப் பார்த்தாள். பாவமாக இருந்தது. எப்படியோ தன்னை சுதாகரித்துக் கொண்டு ''சரி நாளை தருகிறேன்'' என்றபடி விடைபெற்றுக் கொண்டாள்.

நெசவுச் சாலைக்குள் நுளைந்த டிலாவை அவள் நண்பி ரஜா பார்த்தாள்.

''என்னடி இவ்வளவு நேரமா வீட்டில என்ன செய்தனீ? நல்ல லேற்றாப் போச்சே!'' என்று தோழி ரஜா கேட்டதும், ஏதோ சொல்லிச் சமாளித்துக் கொண்டாள்.

ரஜாவும், டிலாவும் நெருங்கிய தோழிகள். டிலா தனது இன்ப துன்பங்களையெல்லாம் ரஜாவிடம் சொல்லியே மனதைத் தேற்றிக் கொள்வாள்.

டிலாவின் அம்மா தையல் வேலைகள் செய்து குடும்பத்தை ஓரளவு நிமிர்த்தி வந்தாள். அவள் கணவன் யுத்தம் காரணமாக காலை இழந்தவன். அவனால் எந்த வேலையுமே செய்ய இயலாது.

டிலா தங்கைகள், ரஞ்சனா, ராதிகா ஆகியோரின் படிப்புக்கு நெசவுத் தொழில் செய்து ஒத்தாசை புரிந்தாள். அவர்கள் உழைப்பு குடும்பத்தை முழுமையாகக் காப்பாற்ற முடியாது. மட்டுக்கு மட்டான சீவியம்.

டிலாவுக்கு அண்ணன் ஒருவன் இருந்தான். உறவுக்கு அவன் அண்ணனே தவிர அவனால் எந்தப் பிரயோசனமும் கிடையாது. குடிப்பழக்கத்திற்கு அவன் அடிமையாகி நண்பர்களுடன் சேர்ந்து அரட்டை அடிப்பதே அவன் பொழுது போக்காயிற்று.

...................................

டிலா அன்று வேலையிலிருந்து திரும்ப நேரமாகியது. தாய் மிகுந்த யோசனையோடு இருந்தாள்.

''ஐந்து மணிக்கு வரவேண்டியவள் இன்னும் காணோமே! ஒரு வேளை அவள் தோழி வீட்டிற்குப் போயிருப்பாளோ!''

இப்படிச் சிந்தித்தபடி இருந்தவள் முன்னாள் டிலாவின் தோழி ரஜா வந்து நின்றாள்.

''அன்ரி, டிலா மயக்கம் போட்டு விழுந்துவிட்டாள். இப்பதான் அவளை வைத்தியசாலையில் சேர்த்துவிட்டு வருகிறேன்'' என்று ரஜா சொன்னதும் டிலாவின் தாய் உட்பட எல்லோருமே பதறிப்போனார்கள்.

''தனக்கு வந்திருக்கும் நோயைப்பற்றி வீட்டில் யாருக்கும் சொல்லிவிட வேண்டாம் என்று டிலா ரஜாவிடம் சத்தியவாக்குக் கேட்டதற்கிணங்க அவ்ள் அந்த விசயத்தை வெளியிடவில்லை.

டிலாவுக்கு இருதயப்புற்றுநோய்.

ஆனால் இந்த விசயம் எப்படியோ டிலாவின் அண்ணன் ரொஷானுக்குத் தெரியவந்தது. ஆனாலும் அவன் இதைப்பற்றி யாரிடமும் சொல்லவில்லை.

டிலாவை உடனடியாக ஓடிச்சென்று பார்த்தான். அவன் கண்களிலிருந்து தாரைதாரையாக நீர் வடிந்தது. வார்த்தைகள் வெளிவர முடியாது விக்கி விக்கி அழுதான்.

அவனைப் பார்த்ததும் டிலாவுக்கு ஒரே ஆச்சரியம். '' அண்ணனா இப்படி!''

குடிக்காமல் வெறிக்காமல், ''உனக்கு என்னம்மா நடந்தது?'' என்று அவளைப் பரிவோடு விசாரிப்பது இதுதான் முதல் தடவை.

''ஒன்றும் இல்லண்ணா. லேசான மயக்கம்தான்!'' என்று சமாளித்தாள் டிலா.

...................................

டிலாவின் தாயும், தங்கைகளும் வைத்தியசாலைக்கு ஓடிவந்தார்கள். டிலாவின் பக்கத்தில் அவள் தோழி ரஜாவும் நின்றிருந்தாள்.

டாக்டர் அங்கே வந்தார்.

''என்பிள்ளைக்கு என்னையா நடந்தது?'' என்று டாக்டரிடம் கேட்டுக் கதறினாள் தாய்.

டாக்டர் விசயத்தை வெளிப்படையாகவே சொன்னார்.

எல்லோருக்குமே அதிர்ச்சி.

''ஐயா இந்த நோயை குணமாக்கவே முடியாதா? என்பிள்ளை செத்துப் போவாளா ஐயா!''

டிலாவின் தாய் அழுதபடியே டாக்டரைப் பார்த்துக் கேட்டாள்.

''இந்த விஞ்ஞான உலகத்திலே இன்றைக்கு எதையும் குணப்படுத்த முடியும். ஆனா..... பணம் தான் அதிக செலவாகும்!'' என்றார் டாக்டர்.

''பணம் எவ்வளவு செலவானாலும் காரியமில்ல எங்க வீடு வளவை விற்றாவது நாங்க பணத்தக் கட்டுறம். எப்படியோ எங்கள் பிள்ள குணமடைய வேண்டும்.!'' என்று துடித்தாள் தாய்.

டாகடர், அவர்களின் பரிதாப நிலையைப் பார்த்து உள்ளூரக்கவலைப்பட்டுக் கொண்டாலும். அதைக் காட்டிக் கொள்ளாமல் புன்னகை செய்தார்.

என்னய்யா சிரிக்கிறீங்க! சொல்லுங்கய்யா! நாங்க நாளைக்கே தேவையான பணத்தைக் கொண்டு தர ஏற்பாடு செய்யிறம்!'' என்று டிலாவின்தாய் டாக்டரை அவசரப்படுத்தினாள்.

''நீங்க எதற்கும் யோசிக்க வேண்டாம், உங்கள் மகளின் சத்திர சிகிச்சைக்கு வேண்டியதை நான் செய்கிறேன். தைரியமாக இருங்கள்.''

டாக்டரின் வார்த்தைகளைக் கேட்டதும் தாய்க்கு மட்டுமல்ல டிலாவின் சகோதரிகளுக்கும் டிலா சத்திர சிகிச்சை முடிந்து வீட்டுக்குக் குணமாகி வந்தது போல ஒரு தென்பு உண்டானது.

...................................

டிலாவுக்கு சத்திரசிகிச்சை நடைபெற்றது. அவள் பிழைத்துக் கொண்டாள்.

எல்லோருக்கும் இனியில்லை என்ற சந்தோஷம்.

அப்போது அங்கொரு முதியவர் வந்தார். பார்ப்பதற்கு அவர் ஒரு படித்த, செல்வந்தார் போல தெரிந்தது.

டிலா படுத்திருந்த கட்டில் பக்கம் வந்து அங்கு நின்றவர்களையெல்லாம் மாறிமாறிப் பார்த்தார்.

எவருக்குமே ஒன்றும் புரியவில்லை.

அங்கே நின்ற டிலாவின் தாய்மீது அவரது பார்வை விழுந்தது.

''அம்மா, டிலாவுக்கு நீங்கயார்?''

''நான்தானய்யா டிலாவின் தாய், இவர்கள் டிலாவின் தங்கைமார், இவ டிலாவின் தோழி ரஜா''?

''என்னை உங்களுக்குத் தெரியுமா!''

'இல்ல....!''

உங்களுக்குத் தெரிய நியாயமில்ல. ஆனா இதோ நிற்கின்ற டிலாவின் தோழிக்கு எல்லாமே தெரியும்!''

''எல்லோரும் ரஜாவையும், அந்தப் பெரியவரையும் மாறிமாறிப் பார்த்தார்கள்!''

அப்போது மறுபடியும் டாக்டர் அங்கே வந்தார்.

''அம்மா, கடவுள் புண்ணியத்தில உங்கள் மகளுக்கு இனி எதுவும் நடக்காது. ஆனாலும் கொஞ்ச நாளைக்கு நீங்க டிலா பூரணமாகக் குணமாகும் வரை தொல்லை கொடுக்காமல் இருந்தால் நல்லது'' என்று டிலாவின் தாயைப் பார்த்துச் சொன்னார்.

அங்கே நின்ற பெரியவர் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு நின்று டாக்டரைப் பார்த்து ''டாக்டர், உங்க முன்னிலையிலேயே இவர்களுக்கான மிகுதிப்பணத்தைக் கொடுக்கலாமென்று விரும்புகிறேன்!'' என்றார்.

அந்தப் பெரியவர் டாக்டருக்கு மிக நெருங்கிய உறவினர். அவருடைய மகனுக்கு 'கிட்னி' பழுதடைந்தபோது வைத்திய சாலையில் சேர்த்து இதே டாக்டர் தான் வைத்தியம் செய்தார்.

''பழுதான கிட்னியை எடுத்துவிட்டு புதிய கிட்னியைப் பொருத்தினால் தான் நோயாளி பிழைக்க முடியும்!'' என்று சொன்ன போது, ''புதிய கிட்னிக்கு நான் எங்கே போவேன்!'' என்று பதறினார்.

அந்த வேளையில் தான் தெய்வாதீனமாக டிலாவின் அண்ணன் டாக்டரிடம் அங்கே வந்து ''என் தங்கை டிலாவை எப்படியாவது குணப்படுத்துங்க டாக்டர்!'' என்று கெஞ்சினான்.

அந்தநேரம் டாக்டர் பார்த்துச் சொன்னார்.

''தம்பி அதற்குப் பணம் அதிகம் செலவாகும், வேண்டுமானால் இந்தப் பெரியவரின் மகனுக்கு அவசியமாக ஒரு கிட்னி தேவைப்படுகிறது. அதை உன்னால் எடுத்துத் தர முடியுமானால் உன் தங்கையைப்பிழைக்க வைக்க முடியும்'' என்றார்.

''நான் இந்த உலகத்தில வாழ்வதால் எவருக்கும் பிரயோசனமில்லை டாக்டர். நான் செத்தாலும் காரியமில்லை. என்னால் இரண்டு உயிர்கள் பிழைத்தால் அதுவே நான் இந்த உலகத்தில் பிறப்பெடுத்த பயனை அடைவேன். ஆனால் இந்த விசயத்தை எவருக்கும் சொல்லக் கூடாது. என்று டிலாவின் அண்ணன் சொல்லியிருந்தான். ஆனாலும் இந்த விடயம் டிலாவின் தோழி ரஜாவுக்கும் எப்படியோ தெரிந்துவிட்டது. அவளுக்கு இறுதிவரை அதை வெளியிடவேயில்லை.''

இதை டாக்டர் சொல்லி முடித்ததும்.

''ஊதாரி! உதவாதவன்! என்று இத்தனை நாளும் திட்டித் தீர்த்து உதாசீனப்படுத்திய என் மகனா இந்தக் காரியத்தைச் செய்தான்.! டாக்டர் என்மகன்எங்கே டாக்டர்?'' டிலாவின் தாய் பதறினாள்.

''இரண்டு உயிர்களைக் காப்பாற்றிய உங்கமகனும் சுகமாகவே இருக்கிறார். டிலாவின் தோழி ரஜா உங்களையெல்லாம் அங்கே கூட்டிச் சென்று காண்பிப்பாள். அதற்கு முன் சத்திர சிகிச்சைக்குச் செலவான பணம் போக மிகுதிப்பணத்தை இதோ இந்தப் பெரியவர் கொண்டு வந்திருக்கிறார். முதலில் அதைப் பெற்றுக் கொள்ளுங்கள்!'' என்று டாகடர் சொல்லிவிட்டு நடந்தார்.

எவரைக் கும்பிடுவது? யாருக்கு நன்றி சொல்வது? என்று தெரியாமல் டிலாவின் தாயும் சகோதரிகளும் அங்கே மெய் மறந்த நிலையில் நின்றார்கள்.

## நகைச்சுவை முற்றம்

தொகுப்பு: அமிர்தகழியான்

### புத்திமதி



நண்பரொருவர் தனக்கு பத்து வருடங்களுக்கு காலபலன் சரியில்லையென்று சொல்லிக் கவலைப்பட்டுக் கொண்டார்.

எல்லாம் இரண்டாவது பிறந்த பிள்ளையின் பலன்தானாம் காரணமென்று சோதிடர்களும் சொல்கிறார்கள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை மச்சான் என்று மிகுந்த கவலைப்பட்டுக் கொண்டார்.

இதைக் கேட்டதும் அந்த நண்பர் கேட்டார் ''இரண்டாவது பிள்ளைக்கு எத்தனை வயது?''

''இரண்டு!''

''அப்படியானால் இது சின்னவிடயம். நான் சொல்வதைக் கேட்டு நட எல்லாத் துன்பமும் தொலைந்து போய் விடும்!''

''என்ன செய்ய வேண்டும்?''

''மூன்றாவது குழந்தைக்கு நீ தந்தையாகிவிடு!'' இதைக் கேட்டதும் அந்த நண்பரின் முகம் திடீரெனச் சுருங்கிக் கொண்டது.

''ஏன் ஏன் உன்னால் முடியாதா?''

''முடியாமலா! ஆனா....ல் ஏற்கனவே நாங்கள் கருத்தடை செய்துவிட்டோமே!''

### கண்டெடுத்த ஜோக்ஸ்



''நீ தலைவருக்குப் போர்த்திய கதராடை பக்கத்து சலூனிலிருந்து திருடியது தானே?''

''எப்படிக் கண்டுபிடிச்சே?''

''உடம்பெல்லாம் முடிமயிர் குத்திற மாதிரி இருக்கெண்டு சொறிஞ்சிக்கிட்டிருக்கார்.''

...................................




'ஏன்டா ஹொட்டல்ல சனம் வராமத்தானே நான் கொசு துரத்திக் கொண்டிருக்கன்! எனக்கிட்ட வந்து வேல கேக்கிறியே!''

''அந்தக் கொசு துரத்திற வேலையை யாவது எனக்குத் தாங்க என் முதலாளி!''

பொ.யுவராஜ். வால்கட்டு

...................................



''நம்ம கட்சிக்கு குரங்குச் சின்னம் வைக்கக் கூடாதெண்டு அப்பவே சொன்னன் கேட்டீங்களா!

''ஏன்! என்னாச்சி?''

''மொத்தமா நம்ம அங்கத்தவர்களெல்லாம் எதிர்க் கட்சிக்குத் தாவிட்டாங்க!''

ஜெயம் பிரியா. வந்தாறுமூலை.

...................................

''என்னம்மா எல்லாப் பழைய சோற்றையும் எனக்கே போடுறீங்க! ஐயா ஊரில் இல்லயைா?''

...................................

''குருவே, எனக்குச் 'சித்தி' உண்டாக அருள் புரியுங்கள்''

''சிஷ்யா, உன் சித்தப்பாவை சீக்கிரம் மணம் புரியச் சொல் அப்பனே!''

...................................



''அத்தான் பாவம் நீங்க ராத்திரி பூரா தூங்கவே இல்ல!''

அதுக்காகத்தானே கண்ணே அலுவலகம் போகிறேன்!''

எம் யுவராஜ். கொத்தியாபுலை.

## விறுவிறுப்பான தொடர் நாவல்




காத்தான்குடி மக்கள் வங்கிக்கு முன்பாக ''ஹெண்டர்'' வேனை நிறுத்திவிட்டு, மதியச் சாப்பாட்டிற்காக இறங்கும் வேளையில்தான் ''பளீர்'' என்று வெடிச்சத்தமொன்று கேட்டது.

யாரோ இனம் தெரியாதவர்கள் வங்கியின் முன்னால் நின்ற பொலிஸ்காரரைச் சுட்டுவிட்டு, மோட்டார் சைக்கிளில் ஓடித் தப்பிவிட்டதாக எங்கும் செய்தி பரவியது.

உடனடியாக வேனை ''ஸ்ராட்'' செய்து, வந்த வழியே திரும்பி ஓடுவதற்கிடையில் துப்பாக்கி வேட்டுக்கள் கண்மண் தெரியாமல் தாறுமாறாகப் பறந்து கொண்டிருந்தன.

அரைகுறைக் காயத்தோடு நின்ற பொலிஸ்காரனே இப்படிச் சுட்டுக் கொண்டிருந்தான்.

கடைகள் யாவும் உடனடியாக இழுத்து மூடப்பட்டன. சனங்களெல்லாம் தலை தெறிக்க ஓடிக் கொண்டிருந்தார்கள்.

வேன், லொறி, காரில் வந்து நின்றவர்களெல்லாம் உயிரைப் பொத்திப் பிடித்தபடி வாகனங்களை அந்தந்த இடத்திலேயே விட்டுவிட்டு ஓடி ஒளிந்து கொண்டார்கள்.

'றெப் பிறேசன் றேற்றிவ்' அவர்கள் வேனில் வாசலோரம் இருந்தார். அடுத்த பக்கம் வேன் சாரதி இருந்தான். நடுவில்தான் சுதன்.

சாரதியும், ''றெப்பும்'' சட்டெனத் துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டுக் கொண்டிருந்த போதே இருபக்க வாசல்களாலும் கதவைத்திறந்து இறங்கிக் கொண்டார்கள். நடுவில் இருந்த சுதனால் மற்றவர்களைப் போல சட்டென இறங்கிக் கொள்ள முடியவில்லை.

சுதன் அரைக்கியரக்கி இறங்குவதற்கிடையில் அவனுக்கு கழுத்திலும்,



நெஞ்சிலும் குண்டுகள் பாய்ந்துவிட்டன.

அந்தக் களேபரத்தில் தனக்குப் பெரிதாக வெடிப்பட்டதாக உணர்ந்து கொண்ட சுதன் மளமளவென கீழே இறங்கி நிற்கவும், சுட்டுக் கொண்டிருந்த பொலிஸ்காரன் கீழே சாய்ந்து விழவும் சரியாகவே இருந்தது.

கீழே இறங்கி நின்ற போது தான்சன்னம்பாய்ந்த இடங்களிலிருந்து இரத்தம் பீறிட்டுப் பாய்வது சுதனுக்குத் தெரிந்தது.

இரண்டு கைகளாலும் நெஞ்சைப் பொத்தி-ப் பிடித்தபடி ''ஓட்டோ! ஓட்டோ! '' என்று அவன் தொண்டை கிழியக் க்த்தினான். எல்லா ஓட்டோச் சாரதிகளும் ஒளிந்து கொண்டபின்னால் யார் வரப் போகிறார்கள்?

அப்போதுதான் ஆண்டவன் கண்விழித்தான்.

ஒரு வயது முதிர்ந்த முஸ்லிம் அன்பர் ஒருவர் பக்கத்திலுள்ள கடையினுள்ளிருந்து சுதன் சுடுபட்ட காயங்களுடன் கூக்குரலிடுவதைக் கடைப் பலகையின் இடுக்குகளினால் பார்த்தார். அவர் நெஞ்சினுள் கடவுள் உட்புகுந்து இயங்கியிருக்க வேண்டும். சட்டென கடைக்கதவைத் திறந்து கொண்டு ஓட்டத்தில் வந்து, முன்னால் கிடந்த அவரது ஓட்டோவை ''ஸ்ராட்'' பண்ணி சுதனை ஏற்றிக் கொண்டு பெரிய ஆஸ்பத்திரியை நோக்கி விரைவாகச் செலுத்தினார்.

மனிதாபிமானம் என்பது எல்லோருக்குமே உண்டு. ஆனாலும் அதைத் தக்கபடி தக்க சந்தர்ப்பத்தில் பயன்படுத்துகின்றவன் தான் உயர்ந்த மனிதன்.

அந்தவகையில் அந்த ஓட்டோச் சாரதியான முஸ்லிம் அன்பர் இனமத மொழி பேதமற்று செய்த உதவிக்குக் கைமாறு செய்வதென்பது முடியாத காரியம்.

சுதனை வாட்டில் விட்ட கையோடு சுதன் கொடுத்த விலாசத்தின்படி சுகுமாரின் வீட்டுக்கு வந்த அந்த முஸ்லிம் அன்பர் இந்திராவிடம் விசயத்தைச் சொன்னதும், அவள் பதறியடித்துக் கொண்டு பக்கத்திலிருந்த தபாற்கந்தோருக்குச் சென்று தந்தையின் காரியாலயத்திற்குப் போன் செய்து விபரத்தைச் சொன்ன பிறகுதான் தமயன் முரளிக்குப் போன் செய்திருந்தாள்.

ஆசுபத்திரியெங்கும் சுதனைப் பார்க்கச் சனம் கூடிவிட்டது.

கழுத்திலும், தொடைகளிலும் கண்ணாடித்துண்டுகள் வெடித்துப் பறந்து புதைந்திருந்தன. மார்பில் பாய்ந்த குண்டுதான் கொஞ்சம் உள்ளே இருந்தது.

வேன் கண்ணாடியில் பட்டுத் தெறித்து மார்பில் பாய்ந்ததால் வேகம் சற்றுக் குறைந்திருந்தது. அதனால் தான் சுதன் தப்ப முடிந்தது.

ஒப்பரேசன் தியேட்டருக்குள் சுதனைக் கொண்டு போய்விட்டார்கள். சுகுமாரும் இளையமகள் இந்திராவும் அழுதபடியே வெளியே நின்றார்கள்.

சுதனின் நண்பர்களெல்லாம். வந்து கூடிவிட்டார்கள். ஊரவர்களும் சேதியைக் கேள்விப்பட்டு அவசர அவசரமாக வந்து சேர்ந்தார்கள்.

கூட்டத்தைக் கட்டுப்படுத்துவது ஆஸ்பத்திரி ஊழியர்களுக்குப் பெரும் சிரமமாக இருந்தது.

சற்று நேரத்திற்கெல்லாம் பூங்கோதை, மூத்தவன் முரளி, மனைவி எல்லோரும் ஓட்டத்தில் வந்தார்கள். பூங்கோதை கதறிக் கதறி அழுதாள்.

மார்பில் பாய்ந்த குண்டை வெட்டி வெளியே எடுத்து காயங்களுக்குக் கட்டுப்போட்டு, சுதனைக் கட்டிலில் கொண்டு போய் படுக்க வைத்தார்கள். அவனுக்கு இன்னும் உணர்வு வரவில்லை.

பூங்கோதை எதை எதையோவெல்லாம் சொல்லி அழுதாள்.

"அம்மாவை வரப்பண்ண வேண்டும் எண்டுதானா மகனே நீ வெடிப்பட்டுக்கிடக்கிறா! இனிநான் உங்களை யெல்லாம் விட்டுப் போட்டு எங்கையும் போகமாட்டன்!" என்று அவள் சொல்லும் போது சுகுமார் அவளைப் பார்த்தான்.

ஆனால் அவள் அவனைப் பார்க்கவில்லை.

அவள் பார்வையெல்லாம் சுதன் மேலேயே இருந்தது.

''சரி எல்லாரும் போங்க நேரம் முடிஞ்சி பொயித்து'' ஆஸ்பத்திரி வாச்சர் வந்து சொன்னான்.

முரளி மாத்திரம் சுதனுக்குத் துணையாக வாட்டில் நிற்க, மற்றவர்களெல்லாம். வெளியே வந்தார்கள். சுகுமார் ஓட்டோ ஒன்றைப் பிடித்துக் கொண்டு வந்து நிறுத்திவிட்டு இந்திராவைக் கூப்பிட்டான்.

''இந்திரா, ஓட்டோவில அம்மாவையும், அண்ணியையும் கூட்டிக் கொண்டு வீட்ட போங்க. நான் சைக்கிளில் வாறன்'' என்று சொல்லிவிட்டு வெளியே போய் ஆஸ்பத்திரிக்கு முன்னால் இருந்த கடையொன்றிற்குள் நின்றபடி ஓட்டோவில் பூங்கோதை போகிறாளா என்பதை அவதானித்தான்.

தன்மீது ஆத்திரம் இருந்தால் அவள் ஓட்டோவில் ஏறமாட்டாள். ஏறினால் அவள் மனநிலை பழையபடி மாறிவிட்டது என்று நம்பலாம்.

இந்த எண்ணத்துடனேயே அங்கே நின்றான் சுகுமார்.

ஓட்டோ அவன் நின்ற கடையைத்தாண்டி ஓடியது. உள்ளே பூங்கோதை, மருமகள், இந்திரா எல்லோரும் இருப்பது தெரிந்தது.

அந்தளவில் புதிய உற்சாகத்தோடு வேகமாக வீட்டை நோக்கி விரைந்தான்.

(தொடரும்)

### வாசகர்கள் கவனத்துக்கு

**'என் கணவன் எனக்கு மட்டும் தான' தொடர் நாவல் அடுத்த வாரத்துடன் முடிவு பெறுகிறது.**

**இந்நாவல் பற்றிய எண்ணக்கருத்தை வாசகர்களிடமிருந்து எதிர் பார்க்கிறோம். விமர்சனம் ஒரு பக்கத்தாளில் (A-4) இடம் பெறட்டும். தரமான விமர்சனங்கள் தமிழ் அலையில் இடம்பெறும்.**

**இது தவிர எழுதிய எழுத்தாளர் யார்? என்பதைத் தெரிவிக்குமாறு கூப்பனை வெளியிட்டு வந்தோம். ஏராளமான வாசகர்கள் கூப்பனை நிரப்பி அனுப்பி வைத்திருக்கிறார்கள்.**

**நாவலின் ஆரம்பத்தில் குறிப்பிட்டபடி மூன்று வாசகர்களுக்கு நாவலின் முடிவில் நாவலாசிரியரின் மூன்று நாவல்கள் சீட்டுக் குலுக்கல் மூலம் வளங்கப்படும்.**

**நாவலாசிரியரின் பெயர் விபரங்கள் அடுத்த வாரம் தமிழ் அலையில் பரிசு பெற்றோர் விபரங்களுடன் வெளிவரும். (ஆ.ர்)**

### வாசகர்களின் கவனத்திற்கு!

*"என் கணவன் எனக்கு மட்டும்தான்" தொடர்நாவலை எழுதும் ஈழத்தின் பிரபல நாவல் ஆசிரியர் யார்?*

*அவர் பெயரை தமிழ்அலையில் வெளியாகும் கூப்பனில் எழுதி அஞ்சலட்டையில் ஒட்டி அதை எமக்கு அனுப்பிவைக்கவும்.*

*நாவல் முடிவில் மூன்று வாசகர்களுக்கு அந்நாவலாசிரியரின் புதிய மூன்று நாவல்கள் பரிசாக அனுப்பிவைக்கப்படும்.*

**கூப்பன்**

நாவலாசிரியர்
பெயர்..............................................................
அனுப்புவரின் பெயர்..............................................
விலாசம்..........................................................
கையொப்பம்....................................

# போர்ப் புலவன் காசி ஆனந்தன் எங்கள் சாதனைப் புலவன்

சதா சாவு சுமந்தவையும் ஒரு தேசத்தில் வாழவும் முடியாமல் மண்ணிற்கு மீளவும் முடியாமல், அவதிப்படும் ஓர் போர்க்களப் புலவனின் நீண்ட கால ஏக்கங்கள், பெரு மூச்சுக்கள், கண்ணீர் துளிகள், எல்லாவற்றையும் பேனா மை தொட்டு தமிழ் இதய மடல்களில் வரைந்திருக்கிறார் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்.

* நூல் :- காசி ஆனந்தன். "நறுக்குகள்"
* ஓவியங்கள்: வீரசந்தானம்.
* முதல் பதிப்பு
:- திருவள்ளுவர் ஆண்டு மீனம் 2034 (04.04.2003)
* வெளியீடு :- காசி ஆனந்தன் ('குடில்')

அண்மையில்வெளியிடப்பட்ட இன் நறுக்குகள் தொகுப்பின் ஒவ்வொரு நறுக்கிலும் கவிஞரின் தாயகம் மீதான காதல் தெரிகின்றது, தனது மட்டக்களப்பு மண் மீதான இயல்பு அவர் நறுக்குகளில் பிணைந்து கிடக்கிறது. மானம், குடு குடு போன்ற கவிதைகளில் அது வெளிப்படையாகத் தெரிகிறது. நீண்ட நாட்கள் தாயகத்தின் வெளியே இருந்து மண்ணிலே புரையோடிப் போயுள்ள அழுக்குகளைக் கழுவி பரிசுத்தப்படுத்த நினைக்கிறது கவிஞர் காசி ஆனந்தனின் நறுக்குகள்.


காசி ஆனந்தன் நறுக்குகள் என்பது இந்த மண்ணில் ஓர் புதிய குழந்தை, சிலருக்கு இது சங்கடமாயிருக்கலாம். ஆனால் இலக்கிய வரம்புகளிற்குள் இந்த நறுக்குகளை நாங்கள் வரையறை செய்து பார்க்க முடியாது. நறுக்குகளுக்குப் பின்னர் அண்மையில் வன்னியில் வெளிவந்த 'வேருமாகி விழுதுமாகி' வெளியீட்டில் ''இந்த மண்ணில் வெளிவருகின்ற கதைகள், கவிதைகள், சிறுகதைகள் எந்த ஒரு இலக்கியமானாலும் சரி அவை போராட்ட இலக்கியம் என்ற பார்வையில் பார்க்க வேண்டும். அவற்றை ஏனைய இலக்கிய வரம்புகளோடு ஒப்பீடு செய்ய முடியாது என்கிறார் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே. பாலகுமாரன். அதுபோலவே நறுக்குகளையும் ஒரு தேசத்தின் தாள்களோடு பகிர்ந்துள்ளார் காசியானந்தன்.

இந்தப் படைப்பில் உள்ள ஒவ்வொரு நறுக்குகளுக்கும் குற்றவாளிகள் முகத்தில் சுளீர்.... சுளீர் என அறையும் ஒரு சாட்டையாகவே காணப் படுகின்றது. "நறுக்குகள்" என்ற இந்தப் புதிய இலக்கியத்தின் பிறப்பிடம், இதன் தொப்புள் கொடி உறவு எங்கே உள்ளது என்றால்.....? அது கவிஞனே சொன்னால் நடுநிலமைக்கு அப்பால் ஓர் உண்மையைப் புரிந்து கொள்ள முடியும்.

நறுக்கு பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழ்ப் பழமொழிகளில் முளை கொண்டு தழை கொண்டு பயிரானது. தமிழீழத்திலும், தமிழ் நாட்டிலும் தங்கி வாழ்ந்த காலத்தில் உலகின் பொய்மைகளுக்கும், திமிர் வெறிக்கும் தமிழர் வாழ்வின் கண்ணீருக்கும், போராட்டங்களுக்குமிடையே நெருப்பினைத் தழுவி அழுது துடித்த என் தமிழ்.

*களத்தில் நிற்கிறேன்.........*
*என்இலக்கியத்தில்*
*அழகில்லை என்கின்றாய்.*
*தோரணம்*
*கட்டும்*
*தொழிலா*
*எனக்கு?*
*வாளில்*
*அழகு தேடாதே*
*கூர்மை பார்,*

இது நறுக்கு இலக்கியத்தின் இலக்கியம் என்ற தலைப்பிடப்பட்ட



முதல் நறுக்கு. இந்த நறுக்கை யாரும் சாதாரணமாகப் பார்த்தல் தவறு. தமிழ் இலக்கிய ஓட்டத்தில் ஓர் புரட்சி. தனது கண்ணீராலும், கரைதட்ட முடியாத கனவுகளாலும் தனது பேனா முனையால் சாதித்தவை. இலக்கியத்துக்கு இந் நறுக்குகள் ஓர்

**- திருக்கோவில் கரன் -**

மைல்க்கள்

காசி ஆனந்தன் தங்கை சிவமலர், தம்பி சிவஜெயம் (மாவீரர்) என மாறி மாறி இந்த மண்ணின் கோடரிக் காம்புகளால் சிறைவரை போயிருக்கின்றார்கள், தங்களது கோவணங்களையே கழற்றிக் கொடுத்து விடக் கூடிய துரோகக் கும்பல் மீதான ஒரு சாட்டையாகவே திமிங்கிலம் கவிதையில்.....

*பாட்டன்*
*நாக்கில்*
*வெடித்தது*
*முழக்கம்ஞூ*
*வெள்ளையனே*
*வெளியேறு.*
*பேரன்*
*நாக்கிலேயே*
*இருந்தான்*
*வெள்ளையன்.*

இந்த மட்டுமண் ஓர் போர்ப் புலவனை உருவாக்கியுள்ளதை நாங்கள் பெருமையாகக் கொள்வோம். கலாசாரம் என்ற பெயரில் விரவி வரும் வர்க்க வேறுபாடுகள் பெண் விடுதலை சாவுக்குள் வாழும் மாவீரர் என பாடியவற்றில்....

*இது -*
*உயிருக்குவந்த*
*சாவு அல்ல*
*சாவுக்கு*
*வந்த*
*உயிர்*

இவற்றோடு இன்று மெகாத் தொடரே அடைக்கலம் என கிடைக்கும் குழுக் காயத்தை.......

*அடக்கம்*
*செய்யப்படுகின்றோம்......*
*இரண்டு*
*பெட்டிகளில்*
*சவப்பெட்டியிலும்*
*தொலைக்காட்சிப்*
*பெட்டியிலும்*

ஈழத்தமிழரின் அடக்கு முறைக்கு அப்பால் உலகத்தின் அடிமைத்தனங்களில் விடுதலைப் பாதங்களையும் விரியச் செய்யும் காசி ஆனந்தன் எனும் போர்ப் புலவன்.

*மாந்த நேயம் பேசின*
*அணு குண்டுகள்*
*புறாக்களைப் பறக்க விட்டன.*
*கழுகுகள்*
*போராடிக் கொண்டிருக்கிறது*
*அமைதி*

ஈழத்தின் விடுதலையோடு உலகத்தின் அமைதியையும் எதிர் பார்க்கும் எங்கள் காசி ஆனந்தன் குடிலில் இருந்து.......
'பாவும் நறுக்கும் சிந்தலும்'
(ஆய்வு நூல்)
வேலி (குறுங் காப்பியம்)
'தம்பி ஜெயத்துக்கு... (கடிதங்கள்)

என்பன வரவுள்ள படைப்புக்கள், தொடர்ந்து இன்னொரு படைப்புடன் வாரா வாரம் சந்திக்க முடியாவிட்டாலும்... இடையிடையே அலைக்குள் வருவார்கள் எழுத்தாளர்கள்.

*சாகடிக்கப்படாமல் - நாங்கள்*
*தோற்கடிக்கப் பட மாட் டோம்.*

அலையேறி வந்த போர்ப்புலவன் காசி ஆனந்தன் உணர்வுகளோடு... இன்னொரு இதழில் சந்திக்கும் வரை.

---

போட்டியில் பங்குபெற விரும்புவோர் விடைகளை இடமிருந்து வலம், மேலிருந்து கீழ் என வகைப்படுத்தி ஒரு தபாலட்டையில் எழுதிக் கீழே காணப்படும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை அனுப்பும் வாசகர்களில் அதிஸ்டசாலிக்கு 100 ரூபா பணப்பரிசும், பாராட்டுப்பெறும் மேலும் 10 பேரின் பெயர் விபரங்கள் அலையிலும் வெளியாகும். விடைகள் வந்து சேரவேண்டிய கடைசித் திகதி 18-11-2003 ஆகும். எங்கே முயற்சி செய்யுங்கள் பார்ப்போம்.

*முகவரி*

**குறுக்கெழுத்துப்போட்டி-19**
**தமிழ் அலை**
**பிரதானவீதி, கொக்கட்டிச்சோலை**

## குறுக்கெழுத்துப் போட்டி 19

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 |
| | ■ | | ■ | 4 | |
| 5 | 6 | | ■ | 7 | |
| ■ | 8 | | 9 | | ■ |
| 10 | | ■ | 11 | | 12 |
| | ■ | 13 | | ■ | |
| 14 | 15 | ■ | 16 | | |
| 17 | | ■ | 18 | | |

### இடமிருந்து வலம்

01. தமிழன் தலை நிமிர்ந்து வாழ தமையீர்ந்தவர்களைக் குறிக்கும் சிறப்புப் பெயர்
04. நோயற்ற தன்மை. உணர்ந்து அனுபவிக்கும் உணர்வுகளில் ஒன்றும் கூட. இறுதி எழுத்தில்லாமல் வருகின்றது.
05. இங்கே குழம்பி வரும் இதற்காக குட்டையைக் குழப்பும் அரசியல்வாதிகள் நம் நாட்டில் மலிந்து காணப்படுகின்றனர்.
07. அரைவாசி.
08. நம்மில் பலரின் சிந்தனை குறிப்பிட்ட ஒரு இதற்குள்ளேயே சுற்றிச் சுற்றி நிற்பதே பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணமாகும். (குழம்பியுள்ளது)
10. மாரி வந்தால் இதன் மவுசும் அதிகரிக்கும்.
11. நாள்.
13. விழி.
14. கணவன், கடவுள்.
16. மக்கள் (குழம்பியுள்ளது)
17. வெளியே நல்லவராகவும், உள்ளே கெட்டவராகவும் உள்ள மனிதர்களை உவமைப்படுத்த இம் மரத்தின் பழங்களை ஒப்பிடுவர் (திரும்பியுள்ளது.)
18. வளர்ந்து வரும் கலைஞர்களின் ஆக்கங்களுக்கு இது அமைத்துக் கொடுத்தல் அவசியம்.

### மேலிருந்து கீழ்

01. கண்ணகியின் சக்களத்தி.
02. மரம் அறுக்கப் பயன்படும் வாளைக் குறிக்கும் சொல்.
03. சேறு எனவும் பொருள் கொள்ளலாம்.
04. ஒருவரின் இயல்பை இப்படிக் குறிப்பிடுவர்.
06. பூமி இந்த வடிவில் இருந்ததாகவே ஆரம்பகால மக்கள் நம்பியிருந்தனர்.
09. ஒருவரின் செயலுக்கு, பேச்சுக்கு எதிர்ப்புத் தெரிவித்து விடும் அறிக்கை. (குழம்பியுள்ளது)
10. தீய செயல்களில் இறங்கும் குழுவை இப்படியழைப்பர்.
12. அமைதியற்ற மனதினை அமைதிப்படுத்தும் சிறந்த ஆன்மீக வழி
15. ஆரம்பம் (தலைகீழ்)

## குறுக்கெழுத்துப் போட்டி 15ற்கான விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 01. கருவறை | 01. கவசம் |
| 05. கல்லடி | 02. வடி |
| 07. சதி | 03. கல்லறை |
| 09. முயல் | 04. முகம் |
| 10. கம்பம் | 06. (பு)யல் |
| 12. திரை | 08. அதிபதி |
| 13. ஆல் | 11. இரைப்பை |
| 15. அகப்பை | 14. விம்மல் |
| 17. இதயம் | 15. கயமை |
| 18. மைனா | 16. தப்பு |
| 19. புரவி | |

## பரிசு பெறும் அதிஸ்டசாலி

**சி. ராஜ்குமார்,**
**இல~ 05, 50வீட்டுத்திட்டம்,**
**சாந்தசோலை, வவுனியா.**

## பாராட்டுப் பெறும் அதிஸ்டசாலிகள்

01.த.ஸ்ரீதர்,
மொன/ தன்னகும்புர. த.வி,
நமுனுகுல, பதுளை.

02.வ. இளஞ்செழியன்,
கிழக்குப் பல்கலைக் கழகம்,
வந்தாறுமூலை.

03.நா. விஸ்வநாத்,
கொம்மாதுறை, செங்கலடி.

04.இ.நிர்மலாந்தன்,
ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை,
மட்டக்களப்பு.

05.சீ. சுகிர்தரன்,
குமாரர் ஆலய வீதி, கிரான்.

06.கா. யாழினி,
ஆலையடி வேம்பு, அக்கரைப்பற்று.

07.திருமதி பிரேமா உதயகுமார்,
143/6 E எல்லை வீதி, மட்டக்களப்பு.

08.சி. வாசுகி, ஆரையம்பதி 02.

09.திருமதி ரபீக்கா முஹம்மது யூசுப் ஜான்,
கல்லூரி வீதி,திருகோணமலை.

10.தி. பிரணவி,
பிரதான வீதி, செட்டிபாளையம்.

# ஈராக் - அமெரிக்காவில் மற்றொரு வியட்னாம்?



அமெரிக்கப் படைகள் ஈராக் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என சிரியா கோரிக்கை விடுத்துள்ளது. தற்போது ஈராக்கில் இடம் பெறும் தற்கொலைத் தாக்குதல்கள், குண்டு வெடிப்புகள், கண்ணி வெடித் தாக்குதல்கள், ஏவுகணைத் தாக்குதல்கள் என்பவற்றுக்குக் காரணம் அங்கு அமெரிக்கப் படைகள் நிலை கொண்டுள்ளமையே என சிரியா தெருவித்துள்ளது.

ஈராக்கை அமெரிக்கா ஆக்கிரமித்ததன் மூலம் உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் பலத்தை எதிர்ப்பை எதிர் நோக்கி வருகின்றது. அதே போன்று ஈராக்கை ஆக்கிரமித்துள்ள அமெரிக்கப் படைகளுக்கு எதிரான கெரில்லாத்



தாக்குதல்களும் அதிகரித்துள்ளன. இதுவரை 252 அமெரிக்கப் போர் வீரர்கள் பல்வேறு தாக்குதல்களில் இறந்துள்ளதாக உத்தியோக பூர்வ அறிக்கைகள் தெரிவிக்கின்றன. யுத்தத்தின் போது,வெளியிடப் படும் உத்தியோக பூர்வ தகவல்களின் உண்மைத் தன்மை பற்றி எமது மக்கள் நன்கு அறிவர். எனவே கொல்லப்பட்ட படையினரின் தொகை ஆகக் குறைந்தது இரண்டு மடங்காவது இருக்கும்.

இதே வேளை யுத்தத்தின் போது கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கையை இது யுத்தத்தின் போது அல்லாமல் விபத்துக்களில் கொல்லப்பட்ட படையினரும் இருப்பர். அது மட்டுமன்றி அமெரிக்கப் படையினருடன் இணைந்து செயற்படும் ஈராக்கிய பொலிசார் மற்றும் இராணுவத்தினரின் கொலைகளையும் சேர்த்துக் கணக்குப் பார்த்தால் எண்ணிக்கை இலக்கங்களையும் தாண்டியிருக்கும்.


மார்ச் மாதத்தில் அமெரிக்க இராணுவம் ஆக்கிரமித்த பின்னர் இதுவரை மூன்று கெலி கொப்டர்கள் கெரில்லாக்களினால் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன இறுதியாகக் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஒரு கெலிக் கொப்டர் சுட்டு வீழ்த்தப்பட்ட போது அதில் பயணம் செய்த 35 இராணுவத்தினரில் 16 பேர் கொல்லப்பட்டனர். ஏனையோர் படு காயங்களுக்கு ஆளாகியிருப்பர் எனக் கூற வேண்டிய அவசியமில்லை. இந்த ஹெலிகொப்டர் சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவம் அமெரிக்காவை அதிர்ச்சிக்கு ஆளாக்கியுள்ளது. இது தொடர்பாக கருத்து வெளியிட்ட அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பெல்ட் ''இது ஒரு துன்பகரமான நாள். இது போன்ற நாட்கள் தொடர்ந்தும் வரப் போகின்றன'' எனத் தெரிவித்துள்ளார்.

இதே வேலை ஈராக்கில் நிலை கொண்டுள்ள அமெரிக்கப் படையினர் மத்தியில் தற் கொலைகள் அதிகரித்து வருவதாக தகவல்கள் தெரிகின்றன. கடந்த வாரம் வரை13 படையினர் தற்கொலை செய்து கொண்டதாக அமெரிக்க இராணுவம் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது. குறுகிய காலத்தில் தமது பணியை முடித்து விட்டு நாடு திரும்ப முடியும்

**சண். தவராஜா.**

என்ற எண்ணத்தில் வந்த அமெரிக்க இராணுவத்தினர் நினைத்ததை விட அதிக காலம் தங்கியிருக்க வேண்டி ஏற்பட்டுள் நிலையில், அவர்கள் மத்தியில் தோன்றியுள்ள விரக்தியே இத் தற்கொலைகளுக்குக் காரணமாகின்றன.

அது மட்டுமன்றி, தம்மைத் தாமே சுட்டுக் காயப்படுத்தி விட்டு அமெரிக்கா திரும்ப சில படை வீரர்கள் கையாண்டு வரும் தந்திரமும் இராணுவத் தளபதிகள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.



ஈராக்கிய கள நிலவரம் இராணுவத் தளபதிகளுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ள போதிலும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தனது கெடு பிடி நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவோ அன்றி ஈராக்கில் நடைபெறும் கெரில்லாத் தாக்குதல்களுக்கு முன்னாள் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைனே காரணம் என்பதை ஒத்துக்கொள்ளவோ தயாராக இல்லை.

மாறாக, ஈராக் ஆக்கிரமிப்பு யுத்தத்தின் ஆரம்ப கால கட்டத்தில், தாம் முற்றாகவே அழித்து விட்டதாகக் கூறி அமெரிக்காமார் தட்டிக் கொண்ட ''அன்சார் அல் இஸ்லாம்'' என்ற அமைப்பே தற்போதைய கெரில்லாத் தாக்குதல்களுக்குப் பொறுப்பு என கூறப்படுகின்றது. சதாம் ஹீசைன் இன்னமும் வலுவுள்ள ஒரு மனிதராக ஈராக்கில் உள்ளார். என்பதை மறைமுகமாகக் கூட ஒத்துக் கொண்டுவிடக் கூடாது என்ற வீராப்புடனேயே இத்தகைய கதைகள் கூறப்பட்டு வருகின்றன.

இதே வேளை பன்நாட்டுப் படைகளை ஈராக்கிற்கு வரவழைக்க அமெரிக்க மேற்கொண்ட முயற்சிகளும்பெரிதும் பலனளிக்கவில்லை. மாறாக ஏற்கனவே ஈராக்கில் மிகக் குறைந்தளவில் தமது நாட்டுப் படைகளை வைத்துள்ள நெதர்லாந்து, பல்கெரியா போன்ற நாடுகள் ஈராக்கில் நிலை கொண்டிருந்த தமது நாட்டு இராஜதந்திரிகளில் கணிசமானோரைத் திருப்பி அழைத்துள்ளன. மற்றொரு நாடான ஸ்பெயின் தனது தூதரகத்தை முற்றாகவே மூடி விட்டது. அதே போன்று சர்வதேச செஞ்சிலுவைக் குழுவும் தனது பணியாளர்களில் கணிசமானோரை மீளப் பெற்றுள்ளது.

ஈராக்கில் நடைபெறும் இன்றைய நிகழ்வுகள் காரணமாகமாக அமெரிக்க ஆட்சியாளர்களுக்கெதிரான உணர்வு அமெரிக்க மக்களிடையே தீவிரமாக உருவாகி வருகின்றது. இதனால் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்சின் செல்வாக்கிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்திலேயே ''அமெரிக்கப் படைகள் ஈராக்கை விட்டு வெளியேற வேண்டும்'' என சிரியா கோரியுள்ளது. இதோ கோரிக்கை அமெரிக்க மக்கள் மத்தியில் இருந்தும் வரும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

1960களிலும் 70களின் முற் பகுதியிலும் வியட்னாம் யுத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்காவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களிலும், பேரணிகளும் வியட்னாமை விட்டு அமெரிக்கப் படைகள் துரிதமாக வெளியேற ஒரு காரணமாகவும் அமைந்திருந்தன

இன்று ஈராக் அமெரிக்காவின் மற்றொரு வியட்னாமாக மாறி வருகையில் அமெரிக்க மக்கள் நடத்தப் போகும் பேரணிகளும் ஆர்ப்பாட்டங்களும் அமெரிக்க ஆட்சி யாளர்களின் கண்ணைத் திறந்து ஈராக்கிய ஆக்கிரமிப்பை முடிவுக்கு கொண்டு வர வேண்டிய நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதே ஜன நாயகத்தையும் சுதந்திரத்தையும் மதிக்கும் உலக மக்களின் எதிர்பார்ப்பு.

**அமெரிக்க இராணுவம் ஆக்கிரமித்த பின்னர் இதுவரை மூன்று கெலி ஹொப்டர்கள் கெரில்லாக்களினால் சுட்டு வீழ்த்தப்பட்ட போது அதில் பயணம் செய்த 35 இராணுவத்தினரில் 16 பேர் கொல்லப்பட்டனர்.**

## நாற்காலி



நாதியற்ற தமிழனிவன்
நாளும் பொழுதும்
நாயாய் அலைகின்றான்.
இவன் நாதியற்ற தமிழன்
பதவிப் பா(றி)தியேறி
நாற்காலி தேடி
விடியும் இரவின்
விளக்கினை அணைக்கிறான்.
...இவன் நாதியற்ற தமிழன்
சிங்களத்தின் இரைக்கு
காலில் போடும் செருப்பாய்
நாளும் இவன் ஓடாய்த் தேய்கின்றான்
...இவன் நாதியற்ற தமிழன்.

**வே. கிருஷன்**



# கவிதைக் களம்

## ஈழத்தாய் சபதம் — தந்தை செல்வா

வீதி பெருக்கும் வினைஞர்கள் -முதல்
மேற்தர வைத்தியர் மார்வரை -சம
நீதியில்லாத நிலைமையால்- தன்
நிரந்தர வேலை இழந்தனர்
போதனை செய்து அச்சிங்களம் தனைப்
புன்மை தவிர்த்திட ஆளிலை -பலர்
வேதனைப் பட்டு உழன்றனர் -சிலர்
வேறு பல் நாடுகள் சென்றனர்

போலிச் சினேகிதம் நம்பியே -மோசம்
போனதனால் உளம் வெம்பியே -அந்தக்
காலிமுகத்திடல் தன்னிலே -தமிழ்க்
கண்ணியவான் பலர் குந்தினர்
தாலிக்கு மஞ்சளைக் கட்டிய சொந்தத்
தாயின் கழுத்தையே வெட்டிய- பஞ்ச
சீலக் குலத்தினர் அல்லவோ -அவர்
சீறிச் சினந்தெமை நோக்கினர்
ஆந்தைக்கு ஆப்பிளை ஊட்டல் போல் -கடல்

ஆமைக்குத் தேன்சுவை காட்டல் போல் -சுனை
நீந்தும் முதலைக்கு நாவலின் கனி
நீட்டிப் பின் மாட்டிய மந்திபோல்
காந்திய மாநெறி தன்னிலே -கொடுங்
காடையரின் படை முன்னிலே
சாந்தி வழியெனச் சொல்லியே
சத்தியாக் கிரகம் செய்து காட்டவே

ஆண்டவர் இஃதினை நோக்கினர் -பெரும்
ஆத்திரத் தோடெமைக் காலிகள் -கொண்டு
வேண்டிய மட்டும் புடைக்கவே -பலர்
வேறு வழின்றி ஓடினர் -உடன்
மூண்டது போர் ஐம்பத்தேழிலே -தீவு
முற்றிலுமே அந்த நாளிலே
பாண்டவருக்குச் சுயோதனன் -செய்த
பாதகம் ஈதற் கீடாகுமோ

தொடரும்.....

*எஸ். கருணானந்தராஜா (யுகசாரதி)*

## நம்மபேரில் ஒரு ஊரா?



நம்ம பேரில் ஊரா
வாலாட்டித்தான் பார்க்கலாமே
என்றா குரங்குப் பாஞ்சானுக்குப்
புறப்பட்டீர்?
ஏன் பாதி வழியில்
திரும்பிவிட்டீர் ?
மிதிவெடி வெடித்தாலென்ன
கால்தான் போனாலென்ன
பயந்து விட்டீரோ?
சீனா வெடிக்கே
சிதறிப்பாயும் கூட்டந்தானே
படையினரை மறிக்கச் சொல்லி
ஏலவே பேசி வைத்தீரோ
ஆரம்ப ஆரவாரம்
எங்கேதான் ஓடிற்றோ



உங்களையா நம்பி
சிங்கள மக்கள்...!

*கிருஷ்ணாம்மா, மட்டக்களப்பு*

## புரிந்துணர்வு

நண்பனே!
என்னை நீ புரிந்து கொண்டால்
என்னுடன் வந்து சேர்ந்து கொள்!
இல்லாவிட்டால் பிரிந்து செல்
ஏனென்றால் நட்புக்கும்
பாலம் அமைப்பது
புரிந்துணர்வு ஒன்றுதான்.



*ஜோண்சன*
*மட்/விபுலானந்தா வித்தியாலயம்*

## சங்கமம்

*மழையதன் சங்கமம் புவியினிலே*
*நதியதன் சங்கமம் கடலினிலே*
*நிலவதன் சங்கமம் இரவினிலே*
*கவிதையின் சங்கமம் வரிகளிலே*
*விதியதன் சங்கமம் உயிர்களிலே*
*மனங்களின் சங்கமம் காதலிலே*

யோ. டிலக்ஷன்,
மட்/மெதடிஸ்த்த மத்தியகல்லூரி.

## பந்தாட நினைத்தாயா?

தோழியே என்னை- நீ
தொலைத்துவிட்டாயா?- மன
வேலியைப் போட்டு
வெறுத்து விட்டாயா?

காலியான என்மனதில்
காலூன்றிப் புகுந்தவள் நீ
கேலியென்று நினைத்தாயா
காதலென்ற வேதத்தை?

போலியான உன் போக்கை
புரிந்து கொள்ள முடியவில்லை
பாலியல் கவர்ச்சியிலா
என்னை நீ இம்சித்தாய்
பந்தாட வா நினைக்கிறாய்?

*வி.எஸ்.ஏ.ரவிஷங்கர்*
*பன்குடாவெளி*

## மௌனத்தில்......!

இரவுகள் கதைப்பது
கனவுகளில்...!
கனவுகள் கதைப்பது
கவிதைகளில்...!
கவிதைகள் கதைப்பது
காதலில்....!
காதலி கதைப்பதோ
மௌனத்தில்...!

*பி.சுதா*
*கடுக்காமுனை*



## அதிஷ்டம்!

அம்மா!
இன்று தான் எனக்கு
அதிஷ்டம் அடித்தது
இலட்சங்கள் அல்ல..
கோடிகள் அல்ல..
அதற்கும் மேலாக....!
சீட்டுக் குலுக்கலில்
இன்றுதான்
எனது பெயர் விழுந்தது
கடற்~ புலியாக
கரும்~ புலியாக!



*வி.லதா*
*கொக்கட்டிச்சோலை.*

## பழி சொல்லும் வழி சொல்லாது!

*தினம் உன்நினைவுகள்*

நிலம் உள்ளவரை
நீர் இருக்கும்
உன் நினைவுள்ளவரை
நான் இருக்க மாட்டேன்
ஏன் என்றால்
சொல்லத் தெரியாமல்
தவிப்பவர்
உன்னைப் பெற்றவர்கள்!
இந்த ஊர்
உன்னைப் பழி சொல்லும்
ஆனால் புது வாழ்வுதர
வழி சொல்லாது!

*எஸ். மஞ்சுளா,அரசடித்தீவு.*

# தேடலும் பகிர்வும் 14

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்று ஆவணப்படுத்தல் தொடர்பாக அக்கறைப் படுபவர்களுக்கு விருந்துகள் வருகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவு படைத்தளித்த படைப்புக்கள் பல குறித்த பணியைத் திறம்பட ஆற்றிவந்தன. அண்மைக் காலமாகப் போரியல் வரலாற்று நூல்களும் காத்திரமான வகையில் வருகின்றன. சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் ''நெருப்பாற்று நீச்சலிற் பத்தாண்டுகள்'' (போராட்ட வரலாற்றுத் தேடல் ஆர்வம் மிக்க எனது பார்வைக்கும் கிடைக்கவில்லை) என்பதைத் தொடர்ந்து, இரண்டாம் லெப். மாலதி படையணியின் ''விழுதாகி வேருமாகி'' என்ற போரியல் வரலாற்று நூல் சென்ற மாதம் வெளிவந்துள்ளது. கப்டன் வானதி வெளியீட்டகத்தின் உருவாக்கத்தில் (இல- 04) வெளியான இவ்வரிய நூலை, அண்மைய கொழும்பு கலைக் கூடலுக்குச் சென்ற ஊடகவியலாளர் ஒருவர் பார்க்கத் தந்துதவினார்.

அ. காந்தா, செ. புரட்சிகா, மலைமகள் ஆகியோர் ''கதைபிறந்த கதை"யில் எழுதியிருப்பதிலிருந்து சில வரிகளை நன்றியுடன் பகிரப் பிரியப்படுகிறேன்.

''.....போர் இடைநிறுத் ஒப்பந்தத்தில் இரு தரப்பும் ஒப்பமிட்ட பின்...... பின்னருங்கூட படைக் கலங்களுடன் இடையிடையில் எமது பகுதியை நெருங்க முனைகின்ற சிறீலங்காப் படையினர், போர் இன்னமும் ஓய்வுக்கு வரவில்லை என்பதை எமக்கு உணர்த்திக் கொண்டே இருக்கின்றனர்.

"போர் இன்னமும் முடிவுக்கு வரவில்லை. அது எங்களுக்குப் புரிகிறது. பொருளாதாரப் போர், கருத்தியல் போர் எல்லாமும் பாதை திறப்பின் பின்னர் வலுத்து வருகின்றன. திறக்கப்பட்ட நெடுஞ்சாலையின் ஒவ்வொரு அங்குலத்திலும் எமது வீரர்களின் குருதி சிந்திக் கிடக்கின்றது. நெஞ்சாலையைப் புனரமைக்கும் பணியைப் பொறுப்பேற்றுள்ள தனியார் நிறுவனங்கள் கொட்டுகின்ற தாரின் கீழும் இவர்களின் வியர்வையும் இரத்தமும், தசைத் துணுக்குகளும் புதைந்துபோய்க் கொண்டிருக்கின்றன. பார்வைக்குப் புலனாகாத மாயப் போர்களாலும், கால வெள்ளத்தாலும் அழியாதவர்களாக, தலைமுறைகள் கடந்தும் வாழ்பவர்களாக இவர்களை நிலை நிறுத்தவே இந்நூலை எழுதினோம். எனினும் எழுதப்படாமலும், புகைப்படங்களில் இடம் பெறாமலும் போனவை ஏராளம்."

- த.வசந் -

மாவீரர் நாள் வரும் கார்த்திகைத் திங்களில் தவறாது சிந்தித்துணர வேண்டிய வரிகளைப் படைத்தளித்துள்ள தமிழீழ மகளிர் சாதனையாளர்களுக்கு நன்றிகளும் வாழ்த்துக்களும்.

''விழுதாகி வேருமாகி'' வரலாற்று நூலின் இறுதிப் பகுதியில் இடம் பிடித்துள்ள ''வரலாற்றுத் தடம்தொடர்வோம்" எனும் நீண்ட கவிதையின்ஒரு சில வரிகளையும் பகிர்ந்து கொள்வோம்.

''..............
.................
தப்பாது இனிப்பகையும் தகர்த்திடுவோம்
என்று சொல்லி
துப்பாக்கி குறி பொருத்தி
துயரங்கள் துடைத்தபடி
வீரத்தங்கைகளாய் வீழ்ந்தோரே!
முளைப்பாரே!
விதைகுழிவரை உம்முடலைத்
தோளில் சுமக்கின்ற சுகமறியோம்-
விழியுதிரும்
நீரைத் துடைத்தெறிந்து
நிமிர்கின்ற போதிலங்கு
நெருப்பள்ளி வருகின்ற பகைக்கலங்கள்
திருப்பும்
பணியோடு நின்ற எங்கள்
விழியோடு மொழியோடு
வீரத்தின் நிழலோடு
நினைவோடு கனவோடு
நெஞ்சத்தின் பதிவோடு
வாழ்வாரே! உங்களது வரலாற்றுத்
தடங்களில் நாம்....
.........................
..........................
எம்
தேசப்படம் முழுதும் தெரிகிறது உம்
பாதம்- நீர் நடந்த
வாசம் வீசாத களமுனைகள்
ஏதுமில்லை.
வீசி வந்த புயல் மறித்து,
விழுதெறிந்த பகை தறித்து,
ஊசி முனையாலும் உட்புகுந்து, பகை
தகர்த்து,
ஓர் வார்த்தை
பேசாது எல்லாம் பெருஞ்செயலால்
நிறைவேற்றி
ஆசையுடன் தமிழ் மண்ணை
அள்ளி முத்தமிட்டு
வீரக் குழந்தைகளாய்
வீழ்ந்தோரே! முளைப்பாரே!
விழியோடு மொழியோடு
வீரத்தின் நிழலோடு
நினைவோடு கனவோடு
செஞ்சத்தின் பதிலோடு,
வாழ்வோரே!
உங்களது வரலாற்றுத் தடங்களில்
நாம்."

தமிழீழத்தின் தேசியத் தலைவர் அவர்களின் உள்ளத்துச் சிந்தனையிலிருந்து:- ''எமது விடுதலைப் போராட்டத்திற் பெண்களையும் அணி சேர்ப்பதனூடாகப் படிப்படியாக சமூக மாற்றத்தை ஏற்படுத்திய, பெண் விடுதலையையும் தேச விடுதலையையும் சாத்திய மாக்கலாம் என நான் உறுதியாக நம்பினேன். இவ்வாறுதான் எமது போராட்டத்தில் பெண்புலிகள் தோற்றம் பெற்று, இன்று எதிரியின் படைபலத்தைச் சிதைத்து, யுத்தத்தின் போக்கையே நிர்ணயிக்கின்ற பெரும் படையணிகளாக எழுந்து நிற்கிறார்கள்."

2003.10.02 திகதியிட்டு, ''எதிரிமட்டும் அறிந்ததை எல்லோரும் அறியட்டும்" என்று மகுடமிட்டுத் தேசியத் தலைவர் அவர்கள் "விழுதாகி வேருமாகி" நூலுக்கு வழங்கிய ஆசியுரையில் தெரிவித்ததிலிருந்து நன்றியுடன் பகிரப்படுகின்றது.




# நெருப்புப் புயலாள் சீறி எழுவாள் எதிரி களம் காண கப்டன் லக்சுமிதா

வரலாற்றுக் கதைகள் நிறைந்த இயற்கைக் காட்சிகள் மலிந்து பசுமை தரும் நாடாம் மட்டக்களப்பு. இந் நகரில் உள்ள துறைநீலாவணை என்னும் கிராமத்தில் அதாவது எழில் பொருந்திய கிராமத்தில் ஞானகி என்ற பெயருடன் அவதரித்தாள் ஒருத்தி. இவள் தனது ஆரம்பக் கல்வியை துறைநீலாவணை பாடசாலையில் பயின்றாள். இவள் படிப்பிலும் விளையாட்டிலும் கலை சார் விளையாட்டிலும் விட்டுக் கொடுத்ததே இல்லை. இவள் கவலையுற்று இருப்பவர்களை மகிழ்ச்சியில் ஆழவைப்பதில் கெட்டிக்காரி. தான் மட்டும் சந்தோசமாய் இருந்தால் போதாது பிறரையும் சந்தோசப்படுத்துவதிலும் கெட்டிக்காரியாக இருந்தாள். இவ்வாறு சகல துறைகளிலும் கெட்டிக்காரியாய் இருந்த இவள், சிங்களவனின் கொடுமைகள் நாட்டுக்கு நாடு ஊருக்கு ஊர் தலைவிரித்தாடியது கண்டு எதிரியை அழித்து தனக்கு பின்வரும் சந்ததிகள் சுதந்திரமாக வாழவேண்டும் என்ற நோக்கத்தோடு நாட்டுப் பற்றுடன் புறப்பட்டாள். இவள் தாய் நாட்டைக்காக்க 9ம் பயிற்சி முகாமில் அவளுக்கு பயிற்சிகள் நடைபெற்றன. இவளுக்கு லக்சுமிதா என்று பெயர் சூட்டப்பட்டது. இவளை லட்சுமி என்று அழைப்பர். ஆனால் இவளை கிழவி என்று கிண்டல் செய்து கூப்பிடுவதும் உண்டு. உடலை ஒயிலாக உருக்கியும் இவள் பயிற்சியில் வெற்றியைக் காட்டினாள். தன் சக போராளி களிடத்திலும் அன்பாய்ப் பழகுவாள் விளையாட்டிலும் பயிற்சியிலும் இவள் புயலாய் எழுவாள். இவள் தலைவன் பாதையை சரியாக நேசித்தாள். தன் பொறுப்பாளர் இடத்தில் பணிவுடன் நடக்கும் குணமுடையவள். கொலை வெறி பிடித்த சிங்களவர்களுக்குப் பாடம் புகட்டவேண்டும் என்ற நோக்கத் தோடு தனது பயிற்சியை முடித்து வெளியேறினாள். இவளை நல்லதொரு மருத்துவப் போரா ளியாக வளர்க்க வேண்டும் என்ற ஆர்வம் எல்லாப் பொறுப்பாளர் மனதிலும் தோன்றியது. இவள் மருத்து வப்பிரிவில் பணியா ற்றினாள். அவளிடத்தில் இருக்கும் நோயாளி களை அன்பால் நோய்களைத் தீர்த்து அரவ ணைப்பவளாய் மாத்திரைகளை இனிக்கிறது என்று செல்லம், கன்றுக் குட்டி என்று பல விதமாய் அரவணைத்து நோயாளிக்கு மாத்திரைகளைக் கொடுப்பாள். இவ்வாறு பல பேரும் பாராட்டும் படி அவளது ப்ணியை தொடர்ந்து கொண்டிருந்தாள். இவள் தன்னை ஒரு மருத்தவராக கருதாமல் நோயாளிகளை ஒரு தாயைப்போல் அரவணைப்பாள். தாயாக மட்டுமல்ல ஒரு தோழியாகவும் பழகுவாள். இவ்வாறு நற்குண ங்களை கொண்டவள் சில போராளிகளுக்கு பல அறிவுரை களையும் கூறுவாள்.


"உனது காலடியில் நெளியும் புளுமீது அன்பு காட்டு
பலவீனங்களைக் கொண்டே பலத்தைத் தேடு
எதிர்ப்புக்களைக் கண்டு நீ தடுமாறாதே தயங்காதே
தோல்விகளைக் கண்டு மனம் தளராதே
விழ விழ எழுவோம் விடுதலை பெறுவோம்."

என பல அறிவுரைகளைக் கூறி போராளிகளின் மனதை தேற்றிக் கொள்வாள். இவ்வாறு பாசங்களைக் கொட்டிவிட்டு 97ம் ஆண்டு 5ம் மாதம் வன்னிக்குப் புறப்பட்டாள். தலைவரைக்காண வேண்டும், அவருடன் பேச வேண்டும் என்று பல கற்பனைக் கோட்டைகளை மனதிற்குள் எழுப்பிய வண்ணம் வீறு நடை போட்டு பெரும் மகிழ்ச்சியோடு வன்னியை அடைந்தாள். வன்னியில் தான் சண்டைக்கு போகும் முன் தலைவரைக்கண்டு பேச வேண்டும் என்று எதிர்பார்ப்பு இருந்தது. அவள் சென்ற இடத்தில் அவளது திறமைகளை வெளிக்காட்டினாள். அவள் போன இடங்களெல்லாம் புகழ் பெற்றிருந்தாள் அங்கு சென்று தலைவரைப் பார்க்கும் சந்தர்ப்பம் ஒரு தடவையாவது கிடைக்க வேண்டும் என்று ஏங்கிய இவள் பல தடவைகள் தலைவரை சந்தித்து பேசும் வாய்ப்பு இவளுக்கு கிடைத்துள்ளது. தனது மனதுக்குள் இருந்த ஆசைகளை தலைவரிடம் கூறி மனம் மகிழ்ந்தாள். இவள் நினைத்தவைகளை இலகுவில் செய்யக்கூடியவள் "துரோகத்தைக் கண்டால் நெருப்புப் புயலாய் சீறி எழுவாள். அன்பைக் கண்டால் பணிந்து நிற்பாள்" இவ்வாறு சகல நற்குணங்களிலும் சிறந்தவளாகக் காணப்பட்டாள். இவ்வாறு இருக்கும் வேளையில் தனது பெற்றோரைப் பார்க்க வேண்டும் என்று ஆசை கொண்டாள். அவள் ஆசை கொண்டது போலவே தனது பெற்றோர் சகோதரங்ளை உறவினரைப் பார்த்து கலந்துரை யாடினாள். தனது பெற்றோர் அவள் மீது பாசங்களை கொட்டி அரவணைத்தார்கள். அவள் தனது பெற்றோருக்கு ஆறுதல்வார்த்தை கூறி வழியனுப்பிவிட்டுத் தனது முகாமை நோக்கிப் புறப்பட்டாள். இவ்வாறு இவள் தனது பெற்றோரை பார்த்து 2நாட்களால் இவளை சண்டைக்குப் போவதற்காக வற்புறுத்தினார்கள் இவளின் மனம் அப்போதுதான் பூரணமடைந்தது. காரணம் தான் சண்டைக்குப் போக வேண்டும்என்ற நீண்ட ஆசை. உடனும் சந்தோசப்பட்டாள். தான் ஒரு வீரவேங்கையாக வேண்டும். என்று மனம் மகிழ்ந்தாள். சுறுசுறுப்பாக எல்லா விடயத்திலும் செயற்பட்டாள். இப்படியான ஒரு சந்தர்ப்பம் கிடைத்து விட்டது என்று மனம் தளராது பெருமைப்பட்டாள். 2000ம் ஆண்டு அரியாலை என்னும் முகாமை எதிர் கொள்வதற்காக களமிற ங்கினாள் இவள் முன்னணி பாதுகாப்பு நிலையில் ஓயாத அலை 03இல் நின்று கொண்டிருந்தாள். சண்டை ஆரம்பமானது எதிரியின் ரவைகளும் ஷெல் அடிகளும் மழையாய்ப் பொழிந்தன. எதற்குமே இவர்கள் அஞ்சவில்லை. துணிந்து எதிரியை அழிப்போம் என்ற நோக்கோடு நிமிர்ந்து நின்றார்கள். உறுதி மேலும் பலமாயின. எதிரி முகாம் முழங்கின. எதிரி தலைகள் சிதறின. ஆனால் இவர்கள் எதற்குமே அஞ்சவில்லை. ஆனால் லட்சுமியின் நிலை "தாமரைத் தடாகம் வாடி சோர்ந்தது போல் பகைவனின் குண்டுகள் நெஞ்சைத் துளைத்தன" இரு விழிகளும் மூடிக் கொண்டன. இவள் தமிழ்த் தாய் நிலத்தில் விடுதலைக்காக அயராது உழைத்தும் தனது உயிரை விதையாக வீழ்த்தினாள். உன் நினைவால் போர்க் கொடி ஏந்திப் புறப்படுவோம் நாம்.

\- முகுந்தா.




# "தமிழீழத்தைத் தெரிந்து கொள்வோம்"



224. 1985இல் விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் "கப்டன் பண்டிதர்" வீரச்சாவடைந்ததைத் தொடர்ந்து யாழ் மாவட்டத் தளபதியாக நியமிக்கப்பட்டவர் யாழ் குடாநாட்டின் பெரும்பகுதியைச் சிங்களப் படைகளிடமிருந்து மீட்க வழிசமைத்து இருந்தார். 1979 இன் ஆரம்பத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்த அம் மத்தியகுழு உறுப்பினர் யார்?

கேணல் கிட்டு (சதாசிவம்- கிருஷ்ணகுமார்)

225. ஒதியமலை, மருதோட்டை, பட்டிக்குடியிருப்பு, கொக்கிளாய், கருநாட்டுக்கேணி, கொக்குத் தொடுவாய், தண்டுவான், நெடுங்கேணி, குமுழமுனை போன்ற தமிழர் குடியிருப்புக்கள் சூழ்ந்ததுமாக வரலாற்றில் விளங்கி வந்த பாரம்பரியத் தமிழர் பிரதேசம் எது?

"மணலாறு"

226. இந்திய ஆக்கிரமிப்புப் படையினரின் காலகட்டத்தைப் பதிவு செய்யும் வகையிலான பாவலர்கள் புதுவை இரத்தினதுரை, இன்குலாப் முதலானோரின் பாடல்களைக் கொண்டு, தேவேந்திரனின் இசையமைப்பில் வெளியான பாடல் ஒலிப்பேழையின் பெயர் என்ன?

"களத்தில் கேட்கும் கானங்கள்"

227. 1984ஆம் ஆண்டு ஜூன் மாதம் நியூயோர்க் நகரில் நடைபெறவிருந்த "உலகத் தமிழீழ மாநாடு" தொடர்பாக 19.05.1984 திகதியிட்டுத் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். இக்கடிதம் யாருக்கு எழுதப்பப்பட்டது?

மாநாட்டின் அமைப்பாளரான டாக்கடர் பஞ்சாட்சரம்

228. தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் பரப்புரைப்போரின் அவசியம் உணரப்பட்டு, பண்பலை வரிசையிலான ஒலிபரப்பு சாதனம் ஒன்றை உருவாக்குவதில் ஆரம்பத்தில் செயலாற்றிய ஒருவர் 21.05.1994இல் மாரடைப்பால் சாவடைந்தார். தேசியத் தலைவர் அவர்களால் "நாட்டுப்பற்றாளர்" ஆகக் கெளரவிக்கப்பட்டவர் யார்?

நித்தி அண்ணர் (துரைராசா நித்தியானந்தன்)

229. தமிழீழ காவல்துறையின் வரலாற்றில் முக்கிய நாளாக யாழ்ப்பாணக் காவல் பணிமனை திறப்புவிழா எப்போது நடைபெற்றது?

01.12.1991ல்

230. 1993 யூலை 01ம் திகதி மாலை 5மணிக்கு உத்தியோக பூர்வமாகத் தமிழர் தாயகத்தில் ஆரம்பிக்கப்பட்ட வர்த்தக ஒலிபரப்பு சேவையின் பெயர் என்ன?

"தமிழீழ வானொலி வர்த்தக சேவை"

231. ஸ்ரேலிய தாயக உருவாக்கத்தை எடுத்தியங்கும் "எக்ஸோடஸ்" (EXODUS) என்ற நாவலை "லியோன் யூரிஸ்" (LEON URIS) எழுதினார். இதனைத் "தாயகம் நோக்கிய பயணம் " என்ற பெயரில் இருபாகங்களாக 1993ல் "ஈழநாதம்" வெளியிட்டது அண்மையில் வெளியான "களத்திலேயே வீழ்வோம்" என்ற மொழிபெயர்ப்பு கவிதைத் தொகுப்பை தந்த போராளி ஒருவரே மேற்படி நூலையும் தமிழாக்கி இருந்தார். வீரச்சாவடைந்த தன் மகளின் பெயரை புனைப்பெயராகக் கொண் டவர் யார்?

குழல்- வி. அருளாளன் (வி.பி.யோசப்)

232. "எழுதாது செல்லும் என் கவிதையை எழுதுங்களேன்.." என்று தனது இறுதி கவிதையை 1991இல் "ஆகாயக் கடல்வெளி" (ஆகவே) சமரின் போது எழுதி 15.07.1991இல் வீரச்சாவடைந்த பெண்போராளி கவிஞர் யார்?

"கப்டன் வானதி"

233. மணலாற்றில் இந்திய இராணுவத்தினரின் செக் மேற் 1,2,3 தொடர் படைநடவடிக்கைகளின் தோல்வியை அடுத்து தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடத்தை அழிக்கும் முனைப்புடன் 1989 பங்குனி மூன்றாம் நாள் நான்காவது படைநடவடிக்கையில், "எடுத்த கத்தியை இரத்தம் காணாமல் உறையில் வைக்காதவர்கள்" என்ற பெயர் கொண்ட "குர்காஸ் படைப்பிரிவு இறங்கியிருந்தது கேணல் பஸ்கி தலைமையில் காட்டினுள் சென்ற 40பாரதப் படையினரில் ஒருவர் கூட உயிர் தப்பியிராத இப் படைநடவடிக்கையின் பெயர் என்ன?

"ஒப்பிரேசன் பாஸ்"

234. தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான பிரசாரத்திற்காக வடதமிழீழ வானலைகளில் வன்கர்வு (ஆக்கிரமிப்பு) செய்த சிங்களப் படையினரின் "ஊதுகுழலான" தமிழ் மூல ஒலிபரப்பின் பெயர் என்ன?

"வானம்பாடி"

235. 1990இல் ஆரம்பமாகிய 2ம் கட்ட ஈழப்போருடன் பொருண்மியத்தடை, படை ஆக்கிரமிப்பு என்பவற்றால் தமிழீழத்தினது பொருண்மியம் பாதிக்கப்படும் நிலை உருவானபோது முனைப்புடன் செயற்படத் தொடங்கிய "தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்" என்ற தேசக்கட்டுமான அமைப்பின் முன்னோடியாகக் கருதப்படுவது எது?

"தமிழீழ ஆய்வு நிறுவனம்"

236. தமிழீழப் பெண்களின் கவிதைகளைத் தாங்கி 2001ஆவணியில் "கப்டன் வானதி வெளியீட்டகத்தின்" முதலாவது வெளியீடாக வெளியானகவிதைத் தொகுப்பின் பெயர் என்ன?

"எழுதாத உன் கவிதை"

(து.கோமளமைந்தன)

(தொடரும்)

# காத்திரன் பதில்

❋ கே. காத்திரனே பழமொழி சொல்லி பெண்ணை முன்னேற விடாமல் தடுக்கும் சமுதாயத்தை என்ன செய் யலாம்?

*-சிவலிங்கம்-சுமதி ஏறாவூர்-4*

✈) புதுயுகம் படைக்கப் புறப்படும் புரட்சிப் பெண்களின் புது மொழிகளை இவர்களுக்குப் புகட்ட வேண்டும்.

✉✉✉✉✉

❋ கே. வேலைவாய்ப்புக்காக வெளி நாடு செல்லும் பெண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

*த.லோகிதன்*
*2ம் வருடம் கலைப்பீடம் கி.ப கழகம்*
*வந்தாறுமூலை.*

✈) வேலை வாய்புக்காக வெளிநாடு செல்லும் பெண்கள் வேறு வாய்புக்களில் ஈடுபடாமல் இருந்தால் சரிதான்.

✉✉✉✉✉

❋ கே. அழகான பெண்களின் மனம் காதலிக்கும் விடயத்தில் குரங்கிற்கு ஒப்பிடுகிறார்களே ஏன் காத்திரனே?

*ஆர்பிதரன்*
*கொக்கட்டிச்சோலை.*

✈) பெண்கள் மட்டும் என்று யார் கூறியது. ஆண்களும் அப்படித்தானே மனம் குரங்காக இருப்பதுதான் இதற்குக் காரணம்.

✉✉✉✉✉

❋ கே. ஒரு ஆண் தொடர்ந்து அடிக்கடி பெ[illegible]டன் கதைத்துக் கொண்டிருப்பது என்ன கார ணம் காத்தி[illegible]

*[illegible]ந்தக்குமார்*
*[illegible]வட்டி.*

✈) அந்த ஆணுக்கு ''கிஸ்ரீரியா'' நோய் ஆரம்பித்து விட்டது என்று அர்த்தம்.

✉✉✉✉✉

❋ கே. ஆண்களுக்குப் பெண்கள் சரிநிகர் சமம் என பிதற்றிக் கொள்ளும் பெண்களைப்பற்றி என்ன நினைக்கின்றீர் காத்திரனே?

*த.விஜி-*
*கலைவாணி வீதிகொம்மாதுறை.*

✈) ஆண்களுடன் சகல துறைகளிலும் சளைக்காமல் இன்று பெண்கள் சாதனை படைக்கும் போது அப்படிச் சொல்வதில் தவறேதும் இல்லைத்தானே.

✉✉✉✉✉

❋ கே. காதலித்து கைவிடும் பெண்களைப்பற்றி என்ன நினைக்கின்றீர் காத்திரனே?

*வ.சுதாகரன்*
*ஆரையம்பதி-3*

✈) கைவிடுவதற்குக் காரணமே ஆண்கள்தான், காதலிக்கும் ஆண்கள் திருமணம் என்று வந்தால். ''சீதனம்'' கேட்டு தொந்தரவு செய்வதால்தானே கைவிடுகிறார்கள்.

✉✉✉✉✉

❋ கே. காத்திரனே பெண்கள் இன்றைய காலகட்டத்தில் கண்ணியமான காதலைக் கைக்குட்டையாக எடுப்பது ஏன்?

*பி.சுதா-சோதையன் கட்டு.*
*கடுக்காமுனை.*

✈) காதலுக்குக் கண் இல்லை என்று சொல்வதால் கைக்குட்டையாகவும் எடுக்கிறார்கள், காலில் போடும் செருப்பாகவும் எடுக்கிறார்கள்.

✉✉✉✉✉

❋ கே. காத்திரனே ''சீறும் பாம்பை நம்பினாலும் சிரிக்கும் பெண்ணை நம்பாதே'' என்று சொல்வது உண்மையா?

*பே.பிரபாகரன்*
*அரசடித்தீவு.*

✈) சுத்தமான பொய், பெண்களை ஓரம் கட்ட ஆண்களால் இயற்றப்பட்ட பழ மொழிகளில் இதுவும் ஒன்று. இப்போது சீறும் பெண்களும் உண்டு.

✉✉✉✉✉

❋ கே. காத்திரனே நட்பைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

*சு.நவசக்தி மண்டூர்-1*

✈) 'மனிதம்' இல்லாத மனிதர்களுக்கு நட்பு புனிதமற்றது.

✉✉✉✉✉

❋ கே. காத்திரனே! ஆண்கள் ஒரு பெண்ணைக் காதலிக்காமல் பல பெண்களைக் காதலிப்பது ஏன்?

*கே.பி குமார். கன்னன் குடா.*

✈) மனிதாபிமானத்தினுள் மிருகாபிமானம் ஆட்சி புரிவதனால்.

**உங்கள் கேள்விகளை:**

**காத்திரன் பதில்**
**தமிழ் அலை**
**கொக்கட்டிச்சோலை**

**எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்**

# பல்கலைக்கழக அனுமதியில் மட்டக்களப்பு மாவட்டம்.....

**4ம் பக்கத் தொடர்ச்சி...**

எனவே மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள தரவுகளின் படி மட்டக்களப்பு மாவட்டமானது சற் புள்ளித் திட்டத்தின் மூலமும் பாதிப்பினைக் கொண்டுள்ளது. மேற்படி தரவுகளினை ஏனைய கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் கூட இதனது கல்வி நடவடிக்கையில் பாதகத் தன்மை உள்ளதை அறியக்கூடியதாக உள்ளது.

அடுத்து கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களுடன் ஒப்பிடுவதினைப் போல அபிவிருத்தியடைந்த கல்வி மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் கூட திறமை அடிப்படையிலான மாணவ அனுமதியில் மட்டக்களப்பு மாவட்டம் தாழ்நிலையில் உள்ளதினையும் கண்டு கொள்ளலாம்.

2000-2001 பல்கலைக்கழக கல்வியாண்டு அனுமதிக்குப் புள்ளியடிப்படையில் திறமை அடிப்படையில் அனுமதி பெற்றோர் விபரம்

| [illegible]வட்டம் | கலைப்பீடம் | ஏனையபீடம் | மொத்தம் | மொத்தத்தில் திறமைவீதம் |
|---|---|---|---|---|
| கொழும்பு | 198 | 1168 | 2047 | 67.70 |
| கம்பகா | 247 | 224 | 116 | 51.41 |
| களுத்துறை | 221 | 120 | 607 | 56.17 |
| மாத்தளை | 64 | 06 | 186 | 37.63 |
| கண்டி | 249 | 212 | 824 | 55.94 |
| காலி | 222 | 303 | 816 | 64.33 |
| மாத்தறை | 209 | 184 | 643 | 61.11 |
| புத்தளம் | 74 | 12 | 259 | 33.20 |
| குருநாகல் | 408 | 158 | 1005 | 56.31 |
| கேகாலை | 194 | 80 | 485 | 56.49 |
| இரத்தினபுரி | 213 | 44 | 529 | 48.58 |
| மட்டக்களப்பு | 93 | 10 | 234 | 44.00 |

மேற்படி 2000-2001 கல்வியாண்டுகளில் பல்கலைக்கழக வளர்ச்சி அடைந்த மாவட்டங்களோடு ஒப்பிடுகையில் [illegible]ளப்பு [illegible]வட்டம் ஓர் பின் தங்கிய நிலையில் இருப்பதினைக் காணலாம்.

எனவே மேற்படி குறிப்பிட்ட தரவுகளைக் கொண்டு ஆராய்கையில் மட்டக்களப்பு மாவட்டமானது. கல்வியில் பின்தங்கிய கஷ்ட பிரதேசத்திற்குள்ளேயே அடங்க வேண்டிய தன்மை தெட்டத்தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

ஆகவே 2002-2003ம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினரின் அனுமதி விதிகளில் கூறப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவர் தெரிவு தொடர்பான முறையில்

1.40 வீதம் நாடளாவிய திறமை அடிப்படையிலான தெரிவு முறையும்.
11.55 வீதம் வரை மாவட்ட சனத்தொகையினது தெரிவு முறையும்.
111.5 வீதம் கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களின் சனத்தொகை விகிதாசாரப் படியும் தெரிவு செய்யும் முறையும் உள்ளது.

இதில் மேற் கூறப்பட்ட சலுகை அடிப்படையிலான 5வீத பல்பலைக்கழக அனுமதியானது மட்டக்களப்பு மாவட்டம் ஓர் பின்தங்கிய மாவட்டமாக கணிப்பிட வல்லதாக உள்ளமையினால் இச் சலுகை மட்டக்களப்பிற்கு கட்டாயம் கொடுக்கப்பட வேண்டும்.

அத்தோடு இச் 5வீத கஷ்ட பிரதேசத்திற்கான சலுகை கொடுபடாமையினால் மட்டக்களப்பு சமூகமானது சுமார் 52சகல துறை மாணவர்களினை ஒவ்வொரு ஆண்டும் இழந்து மாற்றான் தாளில் மண்டியிட்டு கிடக்கும் நிலைக்கு சென்று கொண்டிருக்கின்றது. இன் நிலை தொடருமானால் எமது கல்வி சமூகத்தை இறைவன் மீண்டும் அவதாரம் தான் எடுக்க வேண்டும்.

* மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் இழக்கும் 52 சகல துறை பட்டதாரி மாணவர்களின் விபரம்

| கற்கைநெறி | மாணவர்தொகை |
|---|---|
| * மருத்துவம் | 04 |
| * பொறியியல் | 04 |
| * பௌதீக விஞ்ஞானம் | 06 |
| * உயிரியல் விஞ்ஞானம் | 04 |
| * கணணி விஞ்ஞானம் | 01 |
| * பிரையோக விஞ்ஞானம் | 01 |
| * முகாமைத்துவ கற்கை | 09 |
| * முகாமைத்துவம் | 02 |
| * வணிகக்கற்கைகள் | 03 |
| * சட்டம் | 01 |
| * கலை | 14 |
| * விவசாயம் | 03 |
| மொத்தம் | 52 |

எனவே எமது மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களே மற்றும், ஏனைய கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களே, மட்டக்களப்பு மாவட்ட கல்வி மான்களே, ஏனைய உயர் அதிகாரிகளே இந்நிலை மாற வேண்டும் .எமது மட்டக்களப்பு கல்வி வளர்ச்சி பெற உடனே துரித நடவடிக்கையினை மேற்கொள்ளுங்கள். இல்லாவிட்டால் "எம் எதிர்கால சந்ததிகள் எம்மைத் தூற்றுவார்கள். நாம் அவர்களுக்குத் துரோகம் விளைவித்தவர்களாகி விடுவோம் வரலாறு எம்மை மன்னிக்காது."

# கிராம உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் அதிகரிக்க கோரிக்கை

(ந.கிரிதரன்)

பல்வேறு சிரமங்கள், வேலைப்பழுக்கு மத்தியில் கடமையாற்றியும். கிராம உத்தியோகஸ்தர்களுக்கான அடிப்படைச் சம்பளத்தினை ஆகக்குறைந்தளது ஐயாயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு முக்கிய கிராம உத்தியோகஸ்தர்கள் சங்க மட்டக்களப்பு மாவட்ட கிளை கோரியுள்ளது.

சங்கச் செயலாளர் ஏ.அருள்யோகசுந்தரம் இது தொடர்பாக உள்நாட்டலுவல்கள் அமைச்சருக்கு மனுவொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அரச நிர்வாகத்தை அடிமட்டத்தில் செயற்படுத்தும் கிராம உத்தியோகஸ்தர்கள் குறைந்த சம்பளம் காரணமாக திணைக்கள கடன்களைப் பெற்று கடன் சுமையுடன் வாழ்கிறார்கள்.

எனவே உடனடியாக ஐயாயிரம் ரூபா சம்பள உயர்வே கிராம உத்தியோகஸ்தர்களுக்கு வழங்க ஆவண செய்யுமாறு முக்கிய கிராம உத்தியோகஸ்தர்கள் சங்க மட்டக்களப்பு கிளை வேண்டுகோள் விடுத்துள்ளது.

# மின்னல் தாக்கி சிறுவன் மரணம்

(ரவீந்திரன்)

குருமண்வெளியில் நேற்றுக் காலை (சனிக்கிழமை) 12வயதுடைய ரமேஸ் அனோஜன் மின்னல் தாக்கி மரணமானார்

தனது வீட்டிற்கு அருகாமையில் வயல் அருகே நின்ற வேளையில் மின்னல் தாக்கிய மேற்படி சிறுவன் களுவாஞ்சிகுடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் மரணமானார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதியின்....

**2ம் பக்கத் தொடர்ச்சி....**

நீடித்த ஆயுள் நித்திய கண்டம் என்ற நிலைக்கு உள்ளாகியுள்ள ரணில் விக்கிரம சிங்க அரசாங்கத்திற்கு ஜனாதிபதி அமைச்சுக்களைப் பொறுப்பேற்றல் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கையைக் கையாள்வதன் மூலம் நெருக்கடியை ஏற்படுத்தல் ,பாராளுமன்ற கூட்டத் தொடரை ஒத்தி வைத்தல் ஆகிய அஸ்திரங்களைப் பயன்படுத்தி தலையிடியைக் கொடுப்பார். அதுவும் திருப்தி தராவிட்டால் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கு உத்தரவிடலாம்.

பாராளுமன்றத்தின் அறுதிப் பெரும் பான்மை பெற முடியாத நிலையில் உள்ள பொதுஜன ஐக்கிய முன்னணி பொதுத் தேர்தலைச் சாதகமாக எதிர் கொள்ளக் கூடிய சூழல் இருந்தாலே பாராளுமன்றத்தைக் கலைக்க முனையும்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் முன்னுரிமையாக இனிமேல் அரசியலமைப்பு நெருக்கடிகளைச் சமாளிக்கும் விடயங்களே அமையும். இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பான பரஸ்பர பேச்சுவார்த்தை பின் தள்ளப் படக்கூடிய சாத்தியக் கூறுகளே தென்படுகின்றன.

எனினும் இன்றைய அரசியலமைப்பு தமிழ் மக்களைப் பொறுத்தவரை நீடித்து நிலைக்கக் கூடிய அரசியல் தீர்வுக்குத் தடையாக உள்ளது. முழு நாட்டையும் பொறுத்த வரை ஸ்திரமான ஆட்சிக்குத்.தடையாக உள்ளது. எனவே இலங்கைக்கு நன்மை தரக்கூடிய அரசியலமைப்பின் தேவையை தற்போதைய அரசியல் கள நிலமைகள் தெளிவாக உணர்த்துகின்றன.

Regd. as a News Paper at the G.P.O.(QD/101/NEWS/2003)





போராடும் திறன் மட்டுமல்ல சங்கத்தமிழ் வளர்த்த கலைகளில் எல்லாம் விடுதலைப் புலி வீரர்கள் வலிமை மிகுந்தவர்கள் என்பது தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாறு. இதனை ஆதாரப்படுத்தும் வகையில் வியாழக்கிழமை கரடியனாறு தேனகத் தில் ரசிகன் இசைக்குழுவினரின் மீனிசை ஒலி நாடா, இசைத்தட்டு வெளியீட்டு விழா நடைபெற்றது.

நிகழ்வில் கிழக்குமாகாண மூத்த தளபதி கேணல் கருணா அம்மான் சிறப்புத் தளபதி ரமேஸ் ஆகியோர் பாடல் இயற்றிய கவிஞர்கள், கலைஞர்களை பாராட்டி கௌரவித்தனர். மற்றும் இசைத் தட்டுக்கள் பெறும் பிரமுகர்களையும் தமிழீழ இசைத்துறைக்குப் பெருமை சேர்த்த எஸ்.பி.ஈஸ்வரநாதனுக்கு கருணா அம்மான் பரிசுவழங்குவதையும் படங்களில் காணலாம்



## அலையின் பார்வையில்



ஜனாதிபதியின் அரசியற் பொறியிலிருந்து மீட்சி பெறுவது எப்போது விளக்கும் அமைச்சிகள்





மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலக பிரதேசத்திற்கான முத்தமிழ் விழா நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட கலைஞர்கள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 26 - 12 - 1926



உதிர்வு 10 - 10 - 2003

## திருமதி தங்கம்மா-தம்பையா

(மகிழடித்தீவு)

விடுதலைப் போரில் அன்று
தென் ஈழம் குதித்ததென்று
கஞுவாஞ்சி மண்ணில் காட்டி
கல்லறை புகுந்த வீரன்
வாமனைத் தந்த அன்னை
மகிழை மண் பெற்ற செல்வி
மாணவர் கூட்டம் போற்ற
வழி காட்டும் தெய்வமானோய்
நாமிங்கு தனித்து வாட
நாடி நீ எங்கு சென்றாய்
பொங்கு தமிழ் நிகழ்வதனில்- நீயும்
ஈகைச் சுடர் ஏற்றி வைத்தாய்
மங்கிடா மண்ணைக் காக்கும்
வழியம்மா உந்தன் ஜோதி-

இவ்வண்ணம்
திரு.சி. தம்பையா (கணவர்)
பிள்ளைகளான- காலம் சென்ற நாமதேவன், கா.சென்ற வாமதேவன்(ரவி) சந்திராதேவி(பிரான்ஸ்) ரவீந்திராதேவி ஆசிரியை மகேந்திராதேவி (டென்மார்க்) புலேந்திராதேவி (டென்மார்க்) பாரதா தேவி சாரதாவேவி (லிகிதர்)
மருமக்களான - இராசதுரை(பாலு சொப் - பிரான்ஸ்) இராமச்சந்திரன் (B.F.O) வரதராஜன்(டென்மார்க்) மோகனச் சந்திரன் (டென்மார்க்) காலம் சென்ற கமலநாதன் (மாலா) ராஜன்(வாமன்ஸ்ரோர்ஸ்)
பேரப்பிள்ளைகளான- பிரதாஸ்(டென்மார்) பிரவினா(டென்மார்க்) தவேஸ்வரன்(பிரான்ஸ்) நந்தா(பிரான்ஸ்) கீர்த்தனா, லக்ஷனா(டென்மார்க்) கௌசல்யா,ஜனார்த்தனன், புருசோத்தமன், திவாகரன்,,திபிகரன் [illegible]லோசனி,
சகோதரிகளான - கனகம்மா, பரமேஸ்வரி மற்றும் உற்றார் உறவினர். எம் அன்னையின் ஆத்ம சாந்திக்காய் ஆண்டவனைப் பிரார்த்திப்பதோடு மரணச் சடங்கில் கலந்து கொண்டும் இவ்வகையில் வேண்டிய ஒத்துழைப்பு நல்கியோருக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம் (குடும்பத்தினர்.)

வாமன் ஸ்ரோர்ஸ், பிரதான வீதி.
நாவற்குடா, மட்டக்களப்பு
T.P - 06522[illegible]

இப்பத்திரிகை கொக்கட்டிச்சோலை நித்தி பதிப்பகத்தில் 09-11-2003 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.